814

பொருளடக்கம்

பக்கம்

முருகன் வழிபாடு 41
கௌடல்ய அர்த்த சாஸ்திரம 42
காளிதாஸ மஹா கவி 45
ஜப்பானியப் பாடசாலைகள் 47
விவசாயக் கூட்டுறவு நாணய சங்கங்கள் 48
காலஞ்சென்ற ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயர் ... 51
ஸ்ரீகிருஷ்ண கர்ணம்ருதம் 55
இரஞ்சிதம்—(நாவல்) 57
சிறுத்தொண்டர்—(நாடகம்) 65
நமது சிறு கதை-—பொற் பாதரக்ஷை 68
சிறுவர்களுக்கான பக்கங்கள்—(2.) கூர்மாவதாரம் ... 75
ஸ்திரீகளுக்கான பக்கங்கள்—வாஸவதத்தா பரிணயம் ... 78
வர்த்தமானக் குறிப்புகள் 80

சித்திரப்படங்கள்

காலஞ்சென்ற ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயர்.

OFFICE OF THE ... 10 NOV 1926 MADRAS

Ym 211, N08VB
N26.18.2
218373

நீ உன்னுடைய மூளையை உபயோகப் படுத்துகிறாயா?

நீ மாணாக்கனாகவாவது அல்லது மூளையை உபயோகித்துப் பணம் சம்பாதிக்கவாவது, திடமாயிருக்கவேண்டும். உனக்கு விஷயங்களின் உண்மையை யறியக்கூடுமென்றும், அதற்கேற்ற வாறு நடக்கக்கூடுமென்றும் நம்பிக்கைவேண்டும். மனதினாலும், சரீரத்தினாலும் எடுக்கும் முயற்சியினால் குறைகிற சக்தியையும் பலத்தையும் திரும்பிக்கொண்டுவர நல்ல போஷாப்பு வேண்டியதவசியம்.

நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) மன உழைப்பாளிகளுக்கு சீக்கிரத்தில் ஜீர்ணிக்கக்கூடிய மேலான பால்கஞ்சி. அது வெகு சீக்கிரத்தில் ஜீர்ணமாக உடம்புடன் சிரமமில்லாமல் கலந்து விடுகிறது. அது பலத்தைத்தரும் ஆகாரங்களால் செய்யப்பட்டதால் உடம்பில் செலவழிந்துபோன பலத்தை திருப்பிக்கொடுதது விருத்திசெய்கிறது.

போட்டி போட்டுக்கொண்டு வாசிக்கும் மாணாக்கர்களும், தங்கள் முயற்சிகளினாலேயே தான், தங்கள் வேலை முடிவுபெற வேண்டுமென்று புத்தியை உபயோகப்படுத்துபவர்களும், நெஸ்லேஸ் பால் ஆகாரத்தைச் சாப்பிட்டால் அது அவர்களுக்குப் பலத்தையும் ஆரோக்கியத்தையும் தரும் மருந்துபோலாகும்.

நெஸ்லேஸ் பால் ஆகாரம் நல்ல பாலும் கோதுமையும் சேர்த்து சாஸ்திரப்படி செய்யப்பட்டதுடன் ஓர்வித மணமு மிருப்பதால் மன உழைப்பாளிகளுக்கு சிநேகிதன்போல் உதவிசெய்கிறது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்தி லிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில்
அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS
CONDENSED MILK CO.,
Post Box No. 396
CALCUTTA.

உ. வேலுமயிலுந் துணை

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ்

விருத்தி உரை

முதல் தொகுதி 6- படை வீடுகள்

டெமி அளவில், 64-பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பெதர்வெயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன :—

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்புக்கு ரூ.	4 12	கிளேஸ் தனிச்சஞ்சிகை	அ	7
பெதர்வெயிட் காகிதப்பதிப்பு ,,	6 0	பெதர்வெயிட்	ஷை ,,	9

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.— * * நமக்குக் கிடைத்துள்ள விருத்தி உரை, முதனூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனால் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி.— * * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழின் பெருமையை நாம் சொல்லவல்லோ மல்லேம். அதனைத் தமிழ் மறை என்பார் அறிஞர். பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். * * முருகன் அடியார்களும் திருப்புகழ் விருப்புடையார்களுமான தமிழர்கள் இதனை ஆதரிக்கவேண்டு மென்பதை நாம் சொல்வது மிகையாம். * * இந்த நன்முயற்சியைத் தமிழர்கள் போற்றுவார்களாக.

குமரன்.— * * அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் போன்ற நூல்களுக்கு நல்ல பதிப்புகள் வெளியிடப் பெறுவதும் ஓர் ஆனந்தமே யாகும். இத்தகைய ஆவல் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு ஏற்பட்டதைப்பற்றி நாம் மகிழ் வெய்துகிறோம். * * தமிழைப் புதிதாகக் கற்கும் மாணவருக்கும் திருப்புகழ் படிப்பதில் துணை செய்வதாகும். பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்:—* * உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி, கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. சிவபெருமானுக்குக் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படம் திருவருள் விலாஸத்தோடு கூடியனவாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்ட மாத்திரத்தே உருகச்செய்யும் பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஸமாஸ போதினி:—* * * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்குவிளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே இஃது புலவர் விருந்தாகத்தக்கதே என நாம் கூறுவோம்.

விலாஸம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

A. (No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீக ளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு:—தேயிலேக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலேக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட் டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக் கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பல ஹீனம், குடிக்கேடால் விளேயும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளே வஸ்து விருத்தி யடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளேப் பார்த்து ஏமாருமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலேப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலேகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினுல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட் டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, பூநீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலேயும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலே ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலே செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலே ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளேயாட்டுப் பாத்திரங்கள்

பித்தளே வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந் தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை:

1 நே. பெரிய செட் 1-க்கு	ரூ.	5 0 0
2 நே. மத்திம செட் 1-க்கு	ரூ.	3 0 0
3 நே. சிறிய செட் 1-க்கு	ரூ.	2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனும்.

Balajee & Co., Silk Merchants,

Benares City.

218373

உயர்ந்த பதிப்பு ! அழகிய பைண்ட் !! தெள்ளிய நடை !!

நால்வர் சரித்திரம்

(நால்வர் திருவுருவப் படத்துடன்.)

மங்கையர்க்கரசி நூலாசிரியர்

மா. துரைசாமி முதலியார் அவர்கள் இயற்றியது

இதன் விலை : : கலிகோ பைண்ட் : : அணா பன்னிரண்டு
சாதாரண ராப்பர் பைண்டு : : விலை அணா எட்டு

இந்நூலைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன் :—சைவச் செழும் பயிரைத் தேவார திருவாசகங்கள் என்ற நீர் பாய்ச்சி வளர்த்த திருநெறித் தலைவர்களாகிய நால்வர் சரிதத்தை ஸ்ரீமான் மா. துரைசாமி முதலியார் இனிய தமிழ் நடையில் எழுதியுள்ளார். சென்னை மயிலாப்பூரில், அரிய நூல்களைப் பதிப்பித்துத் தமிழுலகுக்குதவிவரும் அல்லயன்ஸ் கம்பெனியார் இந்நூலையும் பதிப்பித்திருக்கின்றனர். இதன் பிரதி யொன்று நம் பார்வைக்கு வந்திருக்கிறது. சைவர்களிற் பெரும்பாலோர் நால்வர் சரிதத்தினைப் படித்திருப்பினும், சுருக்கமாக விஷயங்கள் ஒன்றையும் விடாமல் அறிந்துகொள்ள விரும்புவோருக்கு இந்த நூல் தோன்றாத் துணையாக விருக்கும். ஆங்காங்கு சரிதப்போக்கை ஆதரிப்பனவாகவுள்ள பாடல்களும் எடுத்து இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்றதற்கேற்ப கருங்கல் மனதையும் கரைத்துருக்கவல்ல திருவாசகத்தை எழுதிய ஸ்ரீ மாணிக்கவாசகரின் சரிதை வெகு அழகாக எழுதப்பட்டிருக்கிறது. * * அல்லயன்ஸ் கம்பெனியார் கண்ணைக்கவரும் வண்ணம், நல்ல காகிதத்தில் அழகாக இந்நூலை அச்சிட்டிருக்கின்றனர். இதில் நால்வரின் திருவுருவப்படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

* * * * *

நவசக்தி :—* சைவப் பயிரைத் தழைத்தோங்கச் செய்த சமயகுரவரான நால்வருடைய சரித்திரங்களைச் சுருக்கமாக அழகான-தெள்ளிய நடையில் ஸ்ரீமான் மா. துரைசாமி முதலியார் எழுதியிருக்கிறார். இந்நூலைக் காணும்போதே எமக்கு ஆனந்தம் உண்டாயிற்று. இதனுடைய மேல் அமைப்பும் உள் அங்கங்களும் எம்மைப் பெரிதும் மகிழ்வித்தன. நால்வர் ஒவ்வொருவருடைய சரித்திரத்திலும் அவரவர் அவ்வப்பொழுது பாடிய பதிகங்கள் படிப்பவருடைய உள்ளத்தைப் பரவசப்படுத்துகின்றன. அழகான தமிழ் நடையில், நால்வருடைய சரித்திரத்தையும் ஒரே நூலில் நாம் இப்பொழுது முதன் முதலாகக் காண்கிறோம். இதனை எழுதிய ஸ்ரீமான் துரைசாமி முதலியாருக்கும், இதனை நல்ல உருவத்தில் வெளியிட்ட அல்லயன்ஸ் கம்பெனியாருக்கும் என்றும் நன்றி பாராட்டத் தமிழர் கடமைப்பட்டிருக்கிறார்.

* * * * *

ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீமான் மோ. கந்தசாமி முதலியார், தலைமைத் தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை :—திருஞான சம்பந்தர் முதலிய திருநெறித் தலைவர்களாகிய நால்வர் சரிதத்தை எளிய தமிழ் நடையில் திருவாளர் மா. துரைசாமி முதலியார் அவர்கள் எழுதியுள்ளார். இச்சிறு புத்தகம் கல்வி பயிலும் மாணவர் பலர்க்கும் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றேன். இக்காலத்துக் கல்வி பயிலும் மாணவர்கள் சிறு பருவத்தேயே நமது நாட்டுப் பெரியாரது அருஞ்செயல்களை அறிந்து தெளிவதற்கு இத்தகைய நூல்கள் துணையாக நிற்பனவாகும். தமிழ் நலம் பரவுக.

குறிப்பு :—பள்ளிக்கூடங்களிலுள்ள புத்தகசாலைகளுக்கும், வியாபாரிகளுக்கும், மற்றும் மொத்தமாய்ப் பிரதிகள் வாங்கும் உபாத்தியாயர்கட்கும் விலை சரசமாயக் கொடுக்கப்படும்.

இந்தப் புதிய பதிப்புப் பிரதிகளின் விலையைக் குறைத்திருக்கிறோமென்பதை நேயர்கள் கவனிக்கவும். சீர்திருத்திய புதிய பதிப்பு அச்சிலிருக்கிறது. விரைவில் வெளிவரும்.

விலாஸம் :— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

க ந் த பு ரா ண ச் சு ரு க் க ம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்கம் அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. **3.**

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் ...	0	12	0
குசலோபாக்கியானம் மூலமும் அரும்பதவிளக்கமும் ...	0	12	0
உத்தியோகம் (நாடகம்)	0	6	0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை ! ஒ ரு மா த ம் வ ரை பாதி விலை !!



அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக்கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப்படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பிவைக்கப் படும்.

☞ ஸ் வா ன் ஹ வு ஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம்

மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அண. **5** பலம் **15** அண.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் **1**புட்டி அண **4**.

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்,

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனம்.

உடனே எழுதுங்கள்.

Address.—**Manager,** (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

உன் சுகத்திற்காக கவனி

உனக்கு பசிதீபன மில்லாவிட்டாலும் சரி, நீ எலும்பும் தோலுமாய் இளைத்துப்போயிருந்தாலும் சரி, உன்னுடைய கண்கள் குழிவிழுந்திருந்தாலும் சரி, உன்னுடைய மூளை பலயீனமடைந்து அதனால் நீ ஞாபகசக்தி குறைவடைந்திருந்தாலும் சரி, நீ மலச்சிக்கலினால் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தாலும் சரி, உன்னுடைய தேகத்தில் பலமில்லாவிட்டாலும் சரி, இன்னும் இதர தொந்திரவுகளை யெல்லாம் எங்கள்

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வேரோடு களைந்துவிடுமென்று அறிவிக்கிறோம். மேற்படி மாத்திரைகள் சென்ற 42-வருஷங்களாக இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளை உபயோகித்த சொற்பகாலத்தில், உனக்கு தூக்கத்தையும் பலமான ஞாபக சக்தியையும், அதிக பலத்தையும் கொடுக்கும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. **1**. கேட்போருக்கு கேட்லாக் இனம்.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்ஹநிக்ரக ஔஷதாலயம், போஸ்ட்பாக்ஸ் நெ. 1252, பிராட்வே, மதராஸ்.

இனாம்! இனாம்!! முற்றிலும் இனாம்!!!

'C' ரிஜிஸ்டர் 'C' Regd.

டைம்பீஸ் டைம்பீஸ்



இனாம் இனாம்

எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திர வேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

மங்கையர்க்கரசி

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரென வணங்கப்படும் மங்கையர்க்கரசியாருடைய அழகிய சரித்திரத்தை இந்நூல் இனிது எடுத்தியம்புகின்றது. அம்மையாருடைய கற்புத்திறனும் தெய்வ பக்தியும் இணையற்று நிற்கின்றன. திருஞான சம்பந்தரும் சேக்கிழாரும் இவரைப் போற்றியிருக்கிறார்கள் எனின் நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. இவருடைய சரித்திரத்தை ஸ்ரீமான் துரைசாமி முதலியார் திறம்பட எழுதியிருக்கிறார். தமிழ் மொழியில் நல்ல நூல்கள் வெளிவர வேண்டுமென்ற ஆர்வம் இவருக்கு உண்டு. இவருடைய ஆர்வத்தின் பயனாக இவரிடமிருந்து வேறு நூல்களையும் எதிர்பார்க்கிறோம். பக்திச்சுவை ததும்ப இவர் கதையை எழுதிக்கொண்டு செல்லும்மாதிரி பெரிதும் வியக்கத்தக்கதா யிருக்கிறது. நல்ல நடையில் தமிழ் எழுதக்கற்க விரும்புவோர் இவ்வாசிரியருடைய நூல்களைப் படித்தல் நலம் என்று நாம் கருதுகிறோம். **இதன் விலை அணா 5.** —நவசக்தி.

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

R. விசுவநாதய்யர் அவர்கள் இயற்றிய

மனுநீதிகண்ட சோழன்

ஸ்ரீ தியாகராஜர் பூலோகத்திற்கு வந்த வரலாறு,
ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சரித்திரம்,
பசுங்கன்றைக் கொன்ற மகனை அரைத்த மன்னன் வரலாறு இம்மூன்றும் அடங்கியுள்ளது.

3 அழகிய ஆப்டோன் படங்கள் கொண்டது

தஞ்சை ஸப் ஜட்ஜ்
ம-௱-௱-ஸ்ரீ, K. S. இராமஸ்வாமி சாஸ்திரிகள்
அவர்களின் அரிய முகவுரை கொண்டது.

இதன் விலை அணா எட்டு.

முசுகுந்த விஜயம் அணா இரண்டு.

காப்பிகள் மொத்தமாய் வாங்குபவர்களுக்கு விசேஷ கமிஷன் கொடுக்கப்படும்.

கருணாநிதி புத்தகசாலை,

முடிகொண்டான் தஞ்சை, ஜில்லா.

சில அருமையான நூல்கள்



திருமூலர் திருமந்திரம்

(புதிய பதிப்பு - பாக்கெட் ஸைஸ்)

3000 - வருடஞ் சிவயோகமிருந்து ஒவ்வோர் ஆண்டுக்கு ஒவ்வோர் அருட்பாவாகத் திருமூல நாயனாரவர்களால் அருளிச் செய்யப்பட்டது. உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டது. திருமூலர் ஆப்டோன் படமும் கொண்டது. இதன் விலை **2-4-0**. ரூ. . விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரமே விலை ரூ. **1-14-0.**

ஸ்ரீமத் ராமாயண வினா விடை

யாவரும் எளிதில் அறியுமாறு எழு காண்டங்களும் இனிய நடையில் எழுதப்பட்டிருப்பதன்றி, பெரியோரது மனத்தையும் களிப்பிக்குமாறு அத்யாத்ம ராமாயணத்திலும், ஆநந்த ராமாயணத்திலும் கண்ட ராமாயணத்தின் உட்பொருளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கம்பரெழுதிய கதைக்கும், வால்மீகி எழுதிய கதைக்குமுள்ள வேறுபாடுகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அநேக சித்திரப்படங்கள் கொண்டது.

இதன் விலை ரூ. **1-8-0.**

விவேக போதினி சந்தாதார்க்கு ரூ. **1-4-0.**

ஷண்முக விஜயம்

(இதுவரை வெளிவராத நூல்.)

விரிந்த கந்தபுராணத்தை அடியார்களனைவரும் எளிதிற் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் - விஷயங்கள் ஒன்றையும் விடாமல் சுருக்கமாக - எளிய நடையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. அழகிய பைண்ட்: அநேகம் ஆப்டோன் படங்களுடன் விலை அணா **12.**

விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம் விலை அணா **10.**

வியாஸ விதானம்

பசு, விகடப் பறவை, புலி, தென்னைமரம், கடிகாரங்கள், காவிரி, விடுமுறை யாத்திரை, வீடுநெருப்புப்பற்றி எரிதல், வித்தியாரணிய சுவாமிகள், மைகேல் பாரடே, தர்மாபிலேக் காவல், சிவாஜியும் அப்ஜலுல் கானும், ஆறுகள், தபால் ஒழுங்கு, கம்பியில்லாத் தந்தி, பள்ளிக்கூடப் பூர்ண ஏற்பாடு, பழகப் பழகப் பாலும் புளிக்கும், குரங்கு கையில் பூமாலை அகப்பட்டாற் போல, ஜீவகாருணியம், பொய்புரைத்தல், மிதச்செலவு, போட்டி, மனோராஜ்யம், கம்பர், வெர்ட்ஸ்வொர்த், சீதோஷ்ண ஸ்திதியும், மனோநிலையும். இவை முதலாகிய விஷயங்களைப்பற்றிய அருமையான வியாஸங்கள் கொண்டது. சித்திரப்படமும் அடங்கியுள்ளது.

இதன் விலை அணா **12.** விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம் அணா **8.**

ஸ்ரீமத் பாரத ஸாரம்

மஹாபாரதம் பூராவும், எளிய நடையில், இனிய தமிழில் எழுதப்பட்டது. இம்மாதிரிப் புத்தகம், இவ்வளவு குறைந்த விலையில் இதுவரை ஒருவரும் பிரசுரிக்கவில்லை. புத்தகத்தை படித்தபின்னர்தான் இதன், சிறப்புத் தெரியவரும். நமது காவியங்களுள் மிக்க உயர்ந்ததான மஹா பாரதக் கதை பூராவும், 256-பக்கங்களில் (ஆப்டோன் படங்களுடன்) அச்சிடப்பெற்றது.

இதன் விலை ரூ. **1-2-0** :: விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம் அணா **15.**

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹார் (ரெஜிஸ்டர்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினுல் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற சென்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி	1-க்கு	(4-டிராம் அல்லது $\frac{1}{2}$-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு	,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம்	,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி	,,	($\frac{1}{2}$-டிராம்)	,,	0—8—0
மாதிரி	,,		,,	0—2—0
வாசனைக் கார்ட்	1-க்கு		,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள் :—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸித், மார்க்கட், பம்பாய்.

காலஞ்சென்ற

ஶ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயர் அவர்கள்

விவேகபோதினி

" எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 { குரோதனஹு மாசிமீ :: 1926-ம் ஹு பிப்ரவரிமீ } பகுதி 2

முருகன் வழிபாடு
WORSHIP OF LORD MURUGA

போத கந்தரு கோவே நமோநம
 நீதி தங்கிய தேவா நமோ நம
 பூத லந்தனை யாள்வாய் நமோநம பணியாவும்
பூணு கின்றபி ரானே நமோநம
 வேடர் தங்கொடி மாலா நமோநம
 போத வன்புகழ் ஸாமீ நமோநம அரிதான
வேத மந்திர ரூபா நமோநம
 ஞான பண்டித நாதா நமோநம
 வீர கண்டைகொள் தாளா நமோநம அழகான
மேனி தங்கிய வேளே நமோநம
 வான பைந்தொடி வாழ்வே நமோநம
 வீறுகொண்டவி சாகா நமோநம அருள்தாராய்!
பாத கஞ்செறி சூராதி மாளவெ
 கூர்மை கொண்டயி லாலே பொராடியெ
 பார அண்டர்கள் வானுடு சேர்தா அருள்
பாதி சந்திர னேசூடும் வேணியர் [வோனே!
 சூல சங்கர னார்கீத நாயகர்
 பார திண்புய மேசேரு சோதியா கயிலாயர்
ஆதி சங்கர னார்பாக மாதுமை
 கோல அம்பிகை மாதா மனோமணி
 ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி
ஆவல் கொண்டுவி ரூலே சிராடவெ
 கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
 ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள்
 [பெருமாளே!

(வி-ரை.) சகல ஜகங்களுக்கும் ஆதிகாரணரும், வேறு கதியின்றித் தமது பாத மலர்களே உற்ற புகலிடமென்ற உணர்ச்சியுடன் தம்மைச் சரண்புகுந்த பிறைச்சந்திரனைக் காத்துத் தமது சடாமுடியில் தரித்துக்கொண்டருளிய ஸ்திதி கர்த்தாவும், இறுதியில் பிரளயகாலத்தில் எண்ணிலாப் பிறவிகளெடுத்து மெலிந்துள்ள ஜீவர்களது தொல்லையை முடிக்க வேண்டுமென்ற கருணை நோக்கத்துடன் சர்வ சங்காரத் தொழிலைச் செய்யச் சூலத்தைக் கையிலேந்தும் சங்காருமான சிவபெருமானது செல்வப் புதல்வராக அவதரித்து, சிருஷ்டி ஸ்திதி சங்காரம் என்னும் முத்தொழிலையும் நடத்தும் முருகப்பெருமான், சிவபெருமான் சனகாதியருக்கு ஞானத்தை உபதேசித்தது போலவே ஞானோபதேசம் செய்ய வல்லவர்; தருமத்தின் உருவமான இடபத்தை வாகனமாகக் கொண்டிருக்கும் சிவபெருமானைப் போலவே தருமத்துக்கு உறைவிடமா யிருப்பவர்; கயாசுரனை வதைத்து பூமியைக் காத்த சிவபெருமானைப் போலவே பூவுலகத்தைக் காப்பவர்; ஞானத்தில் முதிர்ந்தவர்; வேதங்களில் அடங்கிய ஞானத்தின் உருவம்; பாபங்களைச் செய்துவந்த துர்க்குண சொரூபிகளான சூரபதுமன் முதலாயினோரை ஞான சக்தியினால் அழித்து, வெகுகாலம் அவர்களிழைத்த கொடுமைகளைப் பொறுத்துவந்த தேவர்கள் தங்கள் பழைய நிலைமையை அடையும்படி செய்தருளிய கருணாமூர்த்தி; ஐம்புலன்களின் கைகளிற் சிக்கிய ஜீவர்களிடத்து மிகுந்த ஆசையுள்ளவர். அப்பெருமானை—சிவபெருமானது பழைய வடிவமாகிய ஷண்முக மூர்த்தியை—விளித்துச் சுவாமிகள், ஐம்புலன்களின் கையிற் சிக்கி, துர்க்குணங்கள் மிகுதியாகப் பெற்றுப் பாவங்களையே செய்துவரும் ஜீவனாய்ப் பூவுலகத்தில் வசிக்கும் தமக்கு ஞானத்தைப் போதித்தருளித் தம்மை ஆட்கொள்ளும்படி பிரார்த்திக்கிறார்.

" பணியாவும் பூணுகின்ற பிரானே " என்பதற்கு அடியவர்கள் இடும் கட்டளைகளை யெல்லாம் ஏற்று அருள் செய்யும் பெருமான் என்று பொருள் கூறினும் பொருந்தும். ஏனெனில் அப்பெருமான் ஜீவர்களிடத்து மிகுந்த காதல்கொண்ட காளைக் குமரேசனாகவும், " பணியாவென வள்ளி பதம் பணியும் தணியா வதிமோக தயாபரனாகவு" மிருக்கிறார்.

(இதன் தொடர்ச்சி 48-ம் பக்கம் பார்க்க)

விவேக போதினி

தொ. 18] குரோதனஹு மாசிமீ [ப. 2

கௌடல்ய அர்த்த சாஸ்திரம்

KAUTALYA'S ARTHA SASTRA

பூர்விகத்தில் நமது பாதநாட்டில் மோக்ஷசாஸ்திரத்தைப்போல், தர்மமான ராஜ்ய பரிபாலனம், ஐகிக ஐசுவரிய சம்பாதனம் முதலியவற்றைப் பற்றிய அர்த்த சாஸ்திர ஞானமும் வெகுப் பிரசாரத்திலிருந்து வந்ததென்றும், இவ்வித நூலாசிரியர்களுள் சாணக்கியன் அல்லது கௌடல்யன் என்னும் மௌர்ய சந்திரகுப்த சக்கரவர்த்தியின் முக்கிய மந்திரியானவர் மிகப் பிரசித்திபெற்றுள்ளார் என்றும், அவரது அர்த்த சாஸ்திரம் எனும் கிரந்தமானது வெகு அருமையான விஷயங்கள் நிரம்பியுள்ளது என்றும் முன் ஸஞ்சிகையில் பொதுவாய்க் கூறப்பட்டது. இந்த நூலிலடங்கிய முக்கியமான விஷயங்களைப்பற்றி ஸ்தூலமாயாவது தெரிந்துகொள்ளல் அவசியம்.

இந்தக் கிரந்தத்தின் பெருமையையும், சாணக்கியனது புத்திக்கூர்மை, ராஜ்ய தந்திர சாமர்த்தியம், இதர சாஸ்திர ஞானம் இவை போன்றவைகளையும் ஆராய்ந்து பார்ப்பதில் கவனிக்கத் தக்க விஷயம் ஒன்றுண்டு. அவர் இருந்த காலம் பிராசீனமானது. பரதநாட்டுப் பூர்வீக நாகரிகத்தைச் சார்ந்த ஸம்பவங்களைப்பற்றியோ, ஆசிரியர்கள் மற்றைய பெரியோர்கள் முதலானோரைப் பற்றியோ கூறும்போது, இத்தேச சரித்திரக்குறிப்புகளைத் தம் மனம் போனபடி பொருள் படுத்தி, இந்நாட்டின் நாகரிகம் அவ்வளவு பிராசீனமில்லையென்று ஸ்தாபிக்க முயன்றுவரும் விசேஷ மனப்பாங்கு கூடிய மேனாட்டு சரித்திர வித்துவான்களின் அபிப்பிராயப்படிக்கே, சாணக்கியன் சுமார் 2300 வருஷங்களுக்கு முன் இருந்ததாக ஏற்படுகிறது. இதற்கும் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே இம்மஹான் வசித்துள்ளார் என்பது ஆஸ்திக ஹிந்துக்களின் அபிப்பிராயம். எகிப்து முதலிய தேசங்களில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுவரும் பூர்வீக அரசர்களைப்பற்றிய அரிய தகவல்கள், சிலா சாஸனங்கள் முதலியவற்றால் இந்து தேசசரித்திர சம்பந்த விஷயங்களைக்குறித்து மேற்கூறிய சரித்திர வித்துவான்களின் அபிப்பிராயம் இனி மாறுபடக் காரணமுண்டு. அநேக விஷயங்களில் அவர்கள் இயற்றியுள்ள இந்துதேச சரித்திரமே மாற்றி எழுத வேண்டியிருக்கும். அப்போது, சாணக்கியனது ஜீவியகாலமும் இன்னமும் பிராசீனம் என்பது ஏற்படலாம். ஆனால், அவரிருந்ததாகச் சொல்லப்படும் இப்போதைய காலநிர்ணயத்தை ஒப்புக்கொண்டே பேசுவோம். இக்காலத்தில், மேனாட்டு ராஜ்ய தந்திர வித்துவான்கள் எழுதியுள்ள நூல்களுக்கும், கௌடல்யன் செய்துள்ள கிரந்தத்திற்கும் முக்கிய வித்தியாசம் ஒன்றுண்டு.

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நால் வகைப் புருஷார்த்தங்கள் உண்டென்பதும், ஆஸ்திக ஹிந்துவானவன், இவற்றுள் சிலவற்றைத் தள்ளி, மற்றவைகளைக் கைக்கொண்டு நடந்து, எவ்விதமாயோ திரவிய சம்பாதனம் செய்து, உலக சுகங்களை அனுபவிப்பதே முக்கிய நோக்கமெனக் கருதாமல், சுருதி, ஸ்ம்ருதி முதலிய ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு, அவரவர் வர்ணாசிரமத்திற்குரிய கடமைகளைச் செய்து ஐஹிக சுகமும், ஆமுஷ்மிக பேரானந்தமும் பெற முயல்வதே உத்தம நோக்கத்தின் எல்லையாகும் என்பதும் நமது பூர்விக நூல்களின் அடிப்படையான கொள்கைகளாகும்.

இவ்வித ஆஸ்திக ஹிந்து நோக்கத்தைத் தழுவியே சாணக்கியன் தமது கிரந்தத்தைச் செய்துள்ளார். அவர் இவ்வித நோக்கத்தை யனுசரித்துக் கூறியிருப்பது, தற்காலம், ராஜாங்க உத்தியோக சம்பந்தமான பதவி பெறுவதில் ஊக்கங்கொண்டு, நமது பூர்வீக இந்திய தர்மத்தைக் குறைகூறி இகழ்ந்து பேசி, ஆகாராதி விவகாரங்கள், விவாக முறைகள் இவை விஷயமாய் யாதொரு தட்டுத் தடையின்றிக்கே, யதேச்சையாய் நடந்துவருவதற்குச் சௌகரியமாயுள்ள இக்காலத்திய நாகரிகத்தை முழுவதும் அனுசரிக்கக் கருதியுள்ள இந்தியர்களுக்குத் திருப்திகரமில்

லாததா யிருக்கலாம். ஆனால், இவ்வித துவேஷபுத்தியைக் கொண்டு, சாணக்கியன், தமது காலத்துக்கேற்றவாறும், ஆஸ்திக ஹிந்து நோக்கத்துக்கு இணங்கியவாறும் கூறியிருப்பதை ஆராய்ந்து, ஸாராஸார விவேசனம் செய்வது சரியாகாது. பிரஜைகள் தத்தம் கடமைகளைச் செய்து சுகமாய் வாழ்வதற்கும், அரசர்கள் கொடுங்கோன் மன்னராயிராமல், தகுந்த சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, தர்மமாய் ராஜ்யபரிபாலனம் செய்வதற்கும், இராஜ்ய ரக்ஷணத்திற்குரிய ஏற்பாடு செய்வதற்கும், யுத்தகாலங்களில் தக்க சாதனங்களைக் கைக்கொண்டு சத்ததுருவை யழித்து வெற்றி பெறுவதற்கும் அரசன் தனது மந்திரிகள் முதலானோரின் ஸகாயத்தைக்கொண்டு அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இவற்றை யெல்லாம் கவனிக்கும்போது, கௌடல்யனது புத்திக் கூர்மையும், உலக தந்திர ஞானமும், தர்ம புத்தியும் நன்கு மெச்சத் தக்கவைகளா யிருக்கும். இக்காலத்திய இராஜ்யபரிபாலன முறைகளைப் பார்த்தால், அந்தந்த நாட்டாரின் மதக் கொள்கைகளை ஒத்தவைகள் எனச் சொல்லமுடியாது. மேலும், சில சமயம் மதங்களின் உத்தம நோக்கங்களும், அனுஷ்டானத்தில் அம்மதத்தோர் செய்து வரும் காரியங்களும் நேர் விரோதமாய்க் காணப்படுகின்றன. இவ்வாறே, கௌடல்ய அர்த்த சாஸ்திரமும், பூர்வீக ஹிந்து மதக் கொள்கைகளைத் தழுவாமல், இக் காலத்திய நாகரிகத்தையும், அரசியல் முறைகளையும் ஒத்திருக்க வேண்டுமென்று நினைத்து, அது அவ்வாறில்லையென்று குறை கூறுவது; பக்ஷபாதமின்றிச் சரித்திர ஆராய்ச்சி செய்பவரின் உத்தம லக்ஷணமாகாது. இக்காலத்துக்கு ஒவ்வாத சில அம்சங்கள் அக்கிரந்தத்தில் இருக்கக்கூடும். இவைபோக, தர்மமாய் அரசுபுரிவதற்கும், பிரஜைகள் அனைவரும் சுகமாய் வாழ்ந்து நற்கதி பெறுவதற்குமுரிய பலவித முறைகளும், கடமைகளும் வெகு ஸூக்ஷ்மமாய்க் கண்டறிந்து கூறப்பட்டுள்ளன என்பது வியக்கத்தக்கதாகும்.

"பூமி ஸம்பாதித்து, அதைப் பரிபாலிப்பதைக் குறித்து எவ்வளவு அர்த்த சாஸ்திரங்கள் பூர்வாசிரியர்களால் செய்யப்பட்டுள்ளனவோ அவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்து இந்த 'அர்த்த சாஸ்திரம் செய்துள்ளேன்' என்று கௌடல்யனே தமது கிரந்தாரம்பத்தில் கூறியிருக்கிறார். இதனால் இவர் காலத்துக்கு முன்பும் அநேக அர்த்த சாஸ்திரங்கள் ஏற்பட்டிருந்தனவென்றும், அவற்றிலுள்ள ஸாராம்சங்களைக் கிரகித்து, தமது ஸூக்ஷ்ம புத்தியை உபயோகப்படுத்தி விஸ்தாரமுள்ளதும், சிறப்புற்றதுமான இக் கிரந்தத்தை சாணக்கியன் இயற்றியுள்ளார் என்றும் ஏற்படுகிறது.

முதலில், இந்நூலில் விவகரிக்கப்பட்டுள்ள விஷயங்கள் ஒரு அட்டவணைபோல் கூறப்படுகின்றன. பின்னர் ஒவ்வொன்றின் தகவல்களும் விஸ்தாரமாய்ச் சொல்லப்படுகின்றன. இவ்வித அட்டவணையடங்கிய முதலாவது அத்தியாயத்துக்கு 'ப்ரகரணாதிகரண ஸமுத்தேசம்' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இவற்றை ஸ்தூலமாய் நோக்குவதாலேயே இந்நூலின் பெருமை நன்குவிளங்கும்.

இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:—

1. வித்தியாவிவரணம்:—ஆன்வீக்ஷிகீ, த்ரயீ, வார்த்தா, தண்டநீதி என்று நால்வகைப்பட்ட வித்யைகளைப்பற்றிய தகவல்கள் கூறும் பாகம்.

2. விருத்தஸம்யோகம்:—வித்தையைத் தகுந்தபடி அப்பியசிப்பதற்கு வேண்டிய பெரியோர்களின் சப்பந்தம்.

3. இந்திரியஜயம்:—இது இல்லாவிடில், ஞான விருத்தர்களின் சேர்க்கை ஏற்படுவது அரிது. ஆகையால் இது விஷயமான தகவல் அவசியமாகிறது.

4-5. அமாத்யன், மந்திரி, புரோகிதன் இவர்களின் தகவல்களும், இவர்களிட மிருக்கவேண்டிய ஞானம் ருஜுத்தன்மை முதலிய நற்குணங்கள்.

6. கூட புருஷர்களது (Spies) விவரணம் இவர்களின் லக்ஷணங்களும், கடமைகளும்.

7. சாரர்களைக் கொண்டு, தம் தேசத்திலுள்ள துஷ்டர்களைத் தெரிந்து, தக்க பரிகாரம் தேடிக் கொள்ளல்; அன்னிய நாட்டிலுள்ள பலிஷ்டர்களைத் தெரிந்து, தக்க உபாயங்களால் அவர்களைத் தம் வசமாக்குதல்.

8. ஸ்வராஜ்ய பரிபாலனம், இதர தேச ஜயம் இவை விஷயமான தீர்க்காலோசனை.

9. பிற நாட்டுக்குத் தூதரை யனுப்பிக் காரிய சித்தி பெறுதல்.

10. அரசன் தனது ரக்ஷணத்திற்கு செய்ய வேண்டிய ஏற்பாடுகளும், இராஜபுத்திரனைச் சத்துருக்களிடமிருந்து காத்து, தன்னிடம் துரோக

சிந்தனை யில்லாம லிருக்குமாறு கவனித்து வரு தல்.

11. இராஜ்ய ரக்ஷணத்தின் பொருட்டு ராஜ தானி, மற்றைய ஊர்கள் இவற்றின் நிர்மாண விஷ யமான தகவல்கள்.

12. விவசாயம், ஜனங்களின் வசதி, இவற் றிற்கு உதவாத பூபாகங்களை மற்ற விதமாய் உப யோகப்படுத்தல்.

13. கோட்டைகளின் நிர்மாணம்.

14. இராஜாங்க வருமானம், பொக்கிஷ ரக்ஷ ணம் இவை விஷயமான அதிகாரிகளின் நியம னம் முதலிய தகவல்கள்.

15. அதிகாரிகள் தங்கள் வேலைகளைச் சரி யாய்ச் செய்கிறார்களா என்று கவனிப்பதற்கு மேலதிகாரிகளை நியமித்தல், இவர்களது குணங் களைப் பரீக்ஷித்து அறிதல்.

16. அரசனது கட்டளைகளை எழுதி யனுப்பு வதற்கான ஏற்பாடுகள்.

17. பொக்கிஷத்திற்கு வரும் ரத்தினங்களை நலம் பார்த்தறிதல்.

18. சுரங்கம், தங்கசாலை முதலிய ஸ்தானங் களில் அதிகாரிகள் நியமித்தல்.

19. உணவு, தானிய சாலைகளின் அதிகாரி கள்.

20. பண்டகசாலைகள், கடைகள் முதலிய விஷயமான விதிகள்; அதிகாரி நியமனம்.

21. ஆயுதசாலைகளும் இவற்றிலுள்ள உத்தி யோகஸ்தர்களும்.

22. வியாபாரிகள் தப்புத் திராசுகள் உபயோ கப்படுத்தி, ஜனங்களை ஏமாற்றாம லிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள்.

23. அரசனுக்குச் சேரவேண்டிய வரிகளைச் சேகரித்தல்; இதற்கு வேண்டிய ஏற்பாடுகள்.

24. பூஸ்தலங்களை அளந்து விவஸ்தை செய்தல்: இது இக்காலத்திய சர்வே டிபார்ட்டு மெண்டுக்குச் சமமானது எனக்கூறலாம்.

25. நூல் வியாபாரம், விவசாயம், சாராயம் இவை சம்பந்தமான அதிகாரிவர்க்கங்களை நியமித் தல்.

26. கசாப்புக்கடைகள், படகுகள், ஆடுமாடு களுள்ள பட்டிகள், குதிரைலாயங்கள், யானைகட்டு மிடங்கள், தெருக்களின் சுத்தம் இவைபோன்ற விஷயங்களைக் கவனிப்பதற்குரிய ஏற்பாடுகளும், அதிகாரிகளும்.

27. சதுரங்க ஸைனியத்தின் பாதுகாப்பு முதலிய விஷயங்கள்.

28. கிருகஸ்தன், வியாபாரி, தவசி இவர்கள் வேடங்கள் கொண்டு ஸஞ்சரித்து, ஜனங்களின் நிலைமை, மனப்பாங்கு முதலியவற்றை இரகசிய மாய் அறிந்துவரும் சாரர்களின் க்ஷணங்களும், கடமைகளும்:—இது இக்காலத்து C.I.D., என்னும் ராஜாங்க இலாகாவுக்குச் சமமானது.

29. தர்ம ஸ்தாபனம்:—தர்மசாஸ்திரங்களை யனுஸரித்து ஜனங்கள் ஒழுகுவதற்கும், இது விஷயமாய் விவாதங்கள் நேரிட்டால், அவற் றைத் தீர்த்து ஜனங்களை நியாய வழியில் நடக்குமாறு செய்வதற்குமுரிய நியாய ஸ்த லங்கள், பக்ஷபாதமற்ற நியாயாதிபதிகள் இவ் வித தகவல்கள் இப்பிரகரணத்தில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. சூதாடுதல், அவமதித்துப் பேசுதல், சண்டை போடுதல், பிறர் சொத் தைக் களவாடுதல் முதலியவற்றிற்குரிய தண்டனை களும், மற்றைய விஷயங்களும் நன்கு சொல்லப் பட்டிருக்கின்றன.

30. கள்ள நாணயம் (counterfeit coins) செய்வோரைக் கண்டுபிடித்துச் சிக்ஷிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள்.

31. சவபரீக்ஷணம்; மரணம் சுபாவமாய் நேர்ந்ததா அல்லது பிறர் இம்ஸையாலா என்று கண்டறிவதற்குரிய ஏற்பாடுகள்.

32. கன்னியாப் பருவத்திலிருப்போரை இம் சிப்பவர்க்குரிய தண்டனை விசேஷங்கள்:

33. அவரவர் சாப்பிடத் தகாத வஸ்துவைப் புஜித்தல், சம்பந்தம் செய்ய முறைமை யற்றவர்க ளோடு சேர்ந்து சுகமனுபவிப்பதல், இவைகட்கு ஏற்பட்ட தண்டனைகள்.

34. இராஜ்ய விரோதி, அரச விரோதி இவர் களுக்குரிய இரகசிய தண்டனைகள்.

35. பொக்கிஷத்தை விருத்தி செய்தல்.

36. அரசனுக்கு ஆபத்து நேர்ந்தக்கால், மந் திரி முதலானோர் செய்யவேண்டிய காரியங்கள்.

37. ஏழுவகைப்பட்டவை என்று சொல்லப் படும் ராஜ்யத்தின் ஏழு அங்கங்களின் விவர ணம் முதலானவை. (அரசன், மந்திரி வர்க்கம், சிநேகிதர்கள், பொக்கிஷம், ஜனங்கள், கோட்டை கள், நால்வகைச் சேனைகள் இவை ஏழும் இராஜ் யத்தின் அம்சங்களாம்.)

39. ஸமயத்திற்கேற்ப அரசன் செய்துகொள்ளவேண்டிய ஸந்தி, விக்கிரகம் முதலிய ஆறுவித சாதனங்கள்.

40. அரசன், ராஜ்யம் இவற்றிற்கு ஏற்படக்கூடிய கஷ்டங்கள், இவற்றை நிராகரிக்கும் விதங்கள்; தீ, அதிப் பிரவாகம் இவற்றால் ஏற்படக்கூடிய நாசங்கள்.

41. அரசன் தன்னுடையவும் சத்துருவினுடையவும் பலாபலமறிந்து, சமயத்திற்கேற்றவாறு சாமம், தானம், பேதம், தண்டம் என்ற சாதனங்களுள் எதையேனும் கைப்பற்றி நடத்தல்.

42. யுத்தம் நேர்ந்தக்கால், செய்யப்படவேண்டிய யுத்த ஸந்நாகங்கள், சேனை சேகரித்தல், யுத்த முகத்தில் சேனையை சரியாக வ்யூகம் செய்து நிறுத்தல்; யுத்தத்திற்கு வேண்டிய சல்ய சிகித்ஸையின் ஏற்பாடுகள், இவைகள் வெகு அற்புதமாய்க் கூறப்பட்டுள்ளன. இக்காலத்திய யுத்தங்களில் வெகு வியக்கத்தக்கதாயுள்ள சில அபூர்வ விஷயங்களும் இந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பது ஆச்சரியமானதே!

காளிதாஸ மஹா கவி

KALIDASA THE GREAT POET

விஷ்ணுவானவர் பூமியில் தசரத சக்கரவர்த்திக்குப் புத்திரராய் அவதரித்து, லங்காதிபதியான ராவணனால் தேவர் முதலான ஸாதுக்களுக்கு நேர்ந்துள்ள ஆபத்தைத் தீர்த்து வைப்பதாக வாக்களித்து மறைந்தாரென்றும், தேவர்களும் பூமியில் வானராதிகளாய்ப் பிறந்து திருமாலுக்கு உதவச் சித்தமானார்களென்றும் முன் சஞ்சிகையில் கூறப்பட்டது.

பின்னர், தசரதன் செய்துவந்த புத்திர காமேஷ்டி என்னும் வேள்விமுடிவுபெறும் காலம் வந்தது. அப்போது அக்கினி குண்டத்திலிருந்து ஒரு திவ்விய புருஷன் தோன்றினார். இதைக் கண்டு ருத்துவிக்குக்கள் முதலானோர் வெகுவாறு ஆச்சரியமுற்றனர். அந்தப் புருஷன் இருகைகளிலும் ஒரு தங்கப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு கிளம்பினான். அதில் திவ்விய பாயஸான்னம் நிறைந்திருந்தது. ஆதி புருஷனான திருமால் அதில் அனுப்பிரவேசித் திருந்ததால், அப்பாயஸம் அந்தத் திவ்விய புருஷனாலும் தூக்கமுடியாமல் அவ்வளவு பளுவாயிருந்தது. 'க்ஷீரஸாகரம் கடையப்பட்ட தருணத்தில் அதில் நின்றும் வெளிக்கிளம்பிய அமிர்தத்தை இந்திரன் கிரகித்ததுபோல், தசரதனும் மேற்கூறிய திவ்விய பாயஸத்தை மிகுந்த சிரத்தையுடன் வாங்கிக்கொண்டார்.' தசரதனது பாக்கியம் என்னே! சராசர பிரபஞ்சமனைத்துக்கும் காரணமான பரமாத்மாவே இவரைப் பிதாவாகக் கருதினார் என்றால், இதைவிட வேறு புண்ணிய விசேஷமுண்டோ?

பின்பு விஷ்ணுதேஜோமயமான அந்தப் பாயஸான்னத்தைத் தசரதன் தம் பத்தினிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கலானார். மூத்த மஹிஷியான கௌஸல்யைக்குப் பாதியும், தமக்குப் பிரியமுள்ள கைகேயிக்குப் பாதியும் கொடுத்தார். இவ்விருவரும், தத்தம் பாகத்திலிருந்து கொஞ்சம் எடுத்து ஸுமித்திரைக்குக் கொடுத்து அவளைக் கௌரவிக்கவேண்டுமென்று அவர் கருதினார். பாயஸம் அவ்வாறே பங்கிடப்பட்டது. இங்குக் காளிதாஸன் கூறியுள்ளது, வால்மீகி ராமாயணத்தில் கூறியிருப்பதற்கு வித்தியாசமாயிருப்பினும், நாரஸிம்ம புராணத்தில் இதற்கு ஆதாரமிருப்பதால், இவ்வாறு கூறியுள்ளார். இவ்வித விஷயங்களில், தம்மனம்போனபடி சொல்லாமல், ஏதேனும் ஒரு புராணகதையை அனுசரித்து விவரிப்பதே இம் மஹாகவியின் வழக்கமென்பது கவனிக்கத்தக்கது.

'மூன்று பத்தினிகளும் தேவ தேவனான விஷ்ணுவின் அம்சமான கர்ப்பந்தரித்தனர். அதனால், சற்று வெண்மை நிறத்தோடு கூடினவர்களாய், சீக்கிரம் பலனையளிக்கக்கூடிய தானியப்பயிர்கள் போல் சோபையுற்று விளங்கினார்கள்' இவ்வாறிருக்கையில் கௌஸல்யாதிகள் பலவாறு சொப்பனங் காணலானார்கள்: "சங்கம், சக்கரம், சார்ங்கம், கதை இவ்வித அடையாளங்களுள்ள சிறு உருக்கொண்ட திவ்விய புருஷர்கள் தங்களைக் காத்து ரக்ஷிப்பதாகவும், சுவர்ணமயமான இறக்கைகளின் ஒளி விசேஷத்தோடு கூடிய பக்ஷி

ராஜன் தங்களை ஆகாயத்தில் எடுத்துச் செல்வது போலும், பகவானுடைய கௌஸ்துபமணியை யணிந்து, கையில் கமலமேந்தியுள்ள ஸ்ரீ லக்ஷ்மி தேவியானவள் தங்களை வந்தடைந்தது போலவும், கச்யபர் முதலான ஸப்தரிஷிகள், ஆகாய கங்கையில் நீராடிவிட்டு, 'வேத வேத்யனான பரம புருஷனை ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு, தங்களிடம்வந்து உபாஸித்தது போலும்' அவர்கள் கனவுகண்டனர். இதைச் செவியுற்ற மஹாராஜன் ஆனந்த சாகரத்தில் மூழ்கினர். ஸர்வ லோக பிதாவான பகவானுக்கும் தாம் தகப்பனாகை நேர்ந்ததுபற்றி, தாம் எல்லோருக்கும் மேலான பதவியி லிருப்பதாக எண்ணினர்.

'சந்திர பிம்பமானது, சுத்த ஜலத்தினுள் பிரதிபலித்து அநேக பிம்பங்களாய்த் தோற்றுவது போல், பகவான் ஒருவரானலும், கௌஸல்யாதி மூவரின் கர்ப்பங்களில், பிரிவடைந்து தனிமையான ரூபங்களுடன் வஸித்துவந்தார்' அப்பால், பதிவிரதோத்தமையான கௌஸல்யா தேவியானவள் ஓர் உத்தம புத்திரனைப்பெற்றாள். சந்திரனது ஒளியால் இராத்திரியின் இருள் அகல்வதுபோல், இக்குழந்தையின் திவ்விய தேஜஸால், ஸூதிகா கிருகத்திலுள்ள இருள் நசித்து, எங்கும் ஒளிமயமாயிற்று. பார்ப்பவர் மனதைக் கவரத்தக்க திவ்விய சரீர ஸௌந்தரியத்தோடு கூடிய அக்குழந்தைக்கு 'ராமன்' என்னும் நாமம் சூட்டப்பட்டது.

பின்பு கைகேயி பரதன் என்னும் உயர் குணமுள்ள ஒரு புதல்வனைப் பெற்றாள். 'ஐசுவரியத்தை வணக்கம் என்னும் குணம் அலங்கரிப்பது போல், இச்சிசுவும் தன் தாயாரைச் சோபிக்கச் செய்தது.' பிறகு 'சுமித்திரையிடம் லக்ஷ்மணன், சத்துருக்கனன் என்பவர் இரட்டையாய்ப் பிறந்தனர்; நன்குஅப்பியஸிக்கப்பட்ட வித்யையினல் தத்வஞானம், இந்திரிய நிக்கிரகம் இவ்விரண்டும் உண்டாவது போல் அவ்விருவரும் விளங்கினர்கள்!'

"ஸ்ரீராமாவதார காலத்தில், தேசமெங்கும் க்ஷாமம் முதலிய கஷ்டங்கள் அற்று, ஐசுவரியம், ஆரோக்கியம் முதலியன நிரம்பியதாய்ச் செழித்து விளங்கிற்று. புருஷோத்தமன் பூமியில் அவதரித்ததும், சுவர்க்கமும் மண்ணுலகில் வந்துவிட்டதுபோ லிருந்தது."

"விஷ்ணுவானவர் இவ்வாறு நான்கு ரூபங்களாய் அவதரித்ததும், இராவணனிடம் மிகப்பயந்துள்ள இந்திராதி திக்பாலகர்களோடுகூடிய பத்து திசைகளும், இனி நமது பயம் நிவர்த்தியாய் விட்டது என்று பெருமூச்சு விடுவதுபோல், காற்று அடிக்க ஆரம்பித்தது." தங்கள் தேஜஸ் மங்கியிருந்த சூரியனும, அக்கினியும் தத்தம் பூர்ண காந்தியுடன் ஜ்வலிக்கலானர்கள். இராமாவதார காலத்தில் தேவதுந்துபி வாத்தியங்கள் முழங்கின; ஆகாயத்திலிருந்து புஷ்பமாரிகள் பெய்தன. இவ்வாறு தேவர்களால் ஆரம்பிக்கப்பெற்ற மகோற்சவத்தைத் தசரதன் தாமும் வெகுவாறு கொண்டாடினர். பின்பு, ராஜ குமாரர்களுக்குரிய ஸம்ஸ்காரங்கள் விதிப்படி செய்யப்பட்டன. வித்தியை கற்கத்தக்க காலத்தில், அவர்கள் எல்லா வித்தைகளையும் அப்பியசித்து, ஸ்வயம் தேஜஸோடு கூடிய அக்கினியானது ஹவிஸால் விசேஷ ஒளி பெறுவதுபோல், சுவபாவிகமான வீரியம் முதலான பிரபாவம் பொருந்திய அவர்கள், வித்தியாப்பியாசத்தாலுண்டாய வணக்கம் முதலிய உத்தம குணங்களால் விசேஷ மகிமையுடன் விளங்கலானர்கள். சகோதரர்களுக்குள் ஒருவருக்கொருவர் அந்தரங்கப் பிரீதியிருந்தாலும், ராமனும் லக்ஷ்மணனும், அவ்விதமே பரதனும் சத்துருக்கனும் இணைபிரியா இரட்டை போல் நெருங்கிப் பழகிவந்தார்கள்.

இவ்வாறு நற்குணம் பொருந்திய அரசபுத்திரர்களைக் கண்ட ஜனங்கள், கோடைகால இறுதியில் மேகங்களால் மூடப்பட்ட ஆகாயத்தோடு கூடியவும், அதிக உஷ்ணமில்லாமலுமிருக்கும் நாள்களைக் கண்டுகளிப்பது போல், மிகவும் சந்தோஷமடைந்து கொண்டாடினர்கள். அரசனது தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நால்வகைப் புருஷார்த்தங்களுமே உருவெடுத்து வந்துள்ளது போல், அந் நான்கு குமாரர்களும் விளங்கினர்கள். நான்கு துதிக்கைகளுடன் பிரகாசிக்கும் ஐராவதம் போலும், ஸாமம், தானம், பேதம், தண்டம் என்னும் நால்வித சாதனங்களோடு கூடிய நீதி போலும், சதுர்ப் புஜங்களோடு கூடிய விஷ்ணு போலும், தசரத சக்கரவர்த்தியானவர் தமது உத்தம குணமுள்ள புத்திரர்களோடு சோபையுற்றுப் பிரகாசித்தார்.

கிருஷ்ணநந்த வியாஸர்:—ஸங்கீதராக கல்பத்ருமமென்ற நூல் இயற்றினவர். ஹிந்தி பாஷையிலுள்ள ஸங்கீத ஸாஹித்யத்தில் ப்ரவஸித்தமானவை இதில் காணப்படுகின்றன.

மணிநீரு மண்ணு மலையு மணிநிழற் காடு முடைய தரண்.

ஜப்பானியப் பாடசாலைகள்

SCHOOLS IN JAPAN

இப்பொழுது உலகத்திலுள்ள நாடுகளுள் முதன்மையைப் பெற முயற்சித்துவரும் ஜப்பானின் கல்வி முறை வெகு மேலான ஸ்திதியில் இருந்து வருகிறது. சமீப காலத்தில் ஏற்பட்ட பூகம்பங்களால் பல பாடசாலைகள் வீழ்த்தப் பட்டாலும், அவை வெகுசீக்கிரம் கட்டப்பெற்றுமுன்னிலும் அதிகத் தேர்ச்சியுடன் விளங்குகின்றன.

1872-ம் வருஷத்திற்கு முன்னால் ஜப்பானின் கல்வி நிலைமை நமது நாட்டைக் காட்டிலும் தாழ்ந்திருந்தது. அதற்கு முன் 'ஸாமுரே' என்னும் உயர்ந்த வகுப்பினரே படிக்கலாம். சாதாரண ஜனங்கள் கல்விக்குரிய சாதனங்கள் ஒன்றையும் பெறாமலிருந்தார்கள். அந்த வருஷத்திலே தான் புதிதாக ஏற்படுத்தப்பட்ட கல்விச் சட்டத்தின்படி யாவரும் படிக்கலாமென்று விதிக்கப்பட்டது.

இப்பொழுது பாடசாலைகளெல்லாம் இராஜாங்கத்தின் ஆதரணையின்கீழும் ஆணையின் கீழுமிருக்கின்றன. கல்வி மந்திரி இராஜாங்க சபையில் ஓர் அங்கத்தினர். முக்கியமான சீர்திருத்தங்கள் அந்தச் சபையாரால் சிபார்சு செய்யப்பட்டு 'ப்ரிவிகௌன்ஸில்' என்ற அந்தரங்க சபையினால் ஆமோதிக்கப்பட்டு, மகாராஜாவால் ஒப்புக்கொள்ளப் படவேண்டும். பிறகு அவருடைய உத்தரவுகளாக அவைகள் வெளிவரும். இதைத் தவிர மகாகல்விச் சபையென்றொரு சபையுண்டு. அதில் பலதுறைகளில் தேர்ந்த கல்வி நிபுணர்களிருப்பார்கள். மந்திரி கல்விமுறைகளில் எம்மாறுதல்களைச் செய்வதற்கு முன்னும் இச்சபையின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளவேண்டும்.

நமது நாட்டிலிருப்பதுபோலவே ஆரம்பத்தில் 'கிண்டர்கார்டன்' என்ற குழந்தைகளின் வகுப்புக்களிருக்கின்றன. அவைகளுக்கு மேலேயுள்ளவை 'ஸெகண்டரி பாடசாலைகள்' என்னும் இரண்டாந்தரப் பாடசாலைகள். நமது நாட்டிலுள்ளவைகளைப்போல வெறும் படிப்பை மாத்திரம் அவை கற்றுக் கொடுப்பவையல்ல. பலவிதமான தொழில்களையும், உத்தியோகப் பயிற்சிகளையும், வியாபார முறைகளையும் கற்றுக்கொடுக்க விசேஷமான வசதிகள் ஸெகண்டரி பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு மேலே, சட்டம், வைத்தியம், சாஸ்திரங்கள், சிற்பம் முதலியவைகளைக் கற்றுக் கொடுக்கக் கலாசாலைகள் இருக்கின்றன. தொழிற் படிப்புக் கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு வியாபாரம், கட்டட முறைகள், வியவசாயம் முதலியவைகளைப் பயிற்றுவிக்க உயர்தரப் பாடசாலைகளுமிருக்கின்றன.

நாம் எண்ணுவதுபோலவே, ஒழுக்கப் பயிற்சியே ஜப்பானியர்களுக்கும் கல்வியின் நோக்கமாகும். 1890-ம் வருஷத்தில் சக்கரவர்த்தி அவர்களால் வெளியிடப்பட்ட சாஸநம் அப்பயிற்சியையே எல்லாவிதக் கல்விகளுக்கும் அடிப்படையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்துகிறது.

பாடசாலைக் கொண்டாட்டங்களிலும் மற்றைய விசேஷ நாட்களிலும் அந்த சாஸநம் படிக்கப்படுகிறது. சிறுபிள்ளைகளாயிருக்கும்பொழுதே மாணவர்கள் சிறந்த கட்டுப்பாடுகளுக்கு உள்ளடங்கி நடத்தப்படுவதால் அவர்கள் பிற்காலத்தில் ஒழுக்கத்திற் சிறந்த கனவான்களாகின்றனர். ஜப்பானுக்கே 'ஹாகுன்ஷ்நோகோ' அல்லது 'பிரபுக்களின் நாடு' என்ற பெயரைக் கொடுத்தது, அந்நாட்டுச் சிறுவர்கள் அவ்வளவு கவனத்துடன் கற்பிக்கப்படுவதே காரணமாகும்.

தேகப்பயிற்சியும் ஜப்பானியப் பாடசாலைகளில் மிகவும் கவனிக்கப்படுகிறது. ஆரம்பப்பாடசாலைகளில் விசேஷமாக விளையாட்டுக்கள் விளையாடப்படுகின்றன. உயர்தரப் பாடசாலைகளில் இராணுவப் பயிற்சிகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. பெண் பாடசாலைகளில் நாட்டியங்களும், கவாத்தும், நாங்குடா என்னும் மூங்கில் விளையாட்டுக்களும் கற்பிக்கப்படுகின்றன. பழைமையான விளையாடல்களாகிய முஷ்டி யுத்தம், மல் யுத்தம் முதலியவைகளும் அலக்ஷ்யம் செய்யப்படுவதில்லை? வருஷா வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஒவ்வொரு பாடசாலைப் பிள்ளையும் வைத்திய பரீக்ஷைக்குள்ளாக வேண்டும். இவைகளேயன்றி வருஷமொருமுறை பாடசாலைப்பிள்ளைகள் வெளியூர்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, நூதனக்காட்சிகளைக் காணச் செய்யப்படுகின்றனர். ஜப்பானியர்கள் நடையில் மிகவும் தேர்ச்சிபெற்றவர்கள். அவர்கள் பழக்கங்களெல்லாம் வாலிபத்தில் ஏற்பட்டவைகளே.

ஆனால் ஜப்பானியக் குழந்தைகளுக்கு அரிய

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின மைவா ணென்றுரைக்கு நூல்.

தோர் கஷ்டமுண்டு. அவர்கள் பாஷையிலுள்ளவை 47 எழுத்துக்களே யென்றாலும், பல்லாயிரம் எழுத்து அடையாளங்களையும் அவர்கள் கற்கவேண்டியிருக்கிறது. படங்கள்போல வரையப்பெற்ற சில அடையாளங்கள் வார்த்தைகளாக உபயோகப் படுகின்றன. இவைகளே யன்றி ஆறு அல்லது ஏழாயிரம் சைன எழுத்துக்களும் அவர்களால் கற்கப்படவேண்டும். மற்றைத் தேசங்களில் உள்ளவைபோல சைன, ஜப்பான் வார்த்தைகள் எழுத்துக்களால் ஆக்கப்படாமல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பதத்தைக் குறிக்கின்றனவா யிருக்கின்றன. இதனல் டைப்ரைடர்கள் முதலிய உபகரணங்கள் பயனற்றனவாய்ப்போக, ஜப்பானிலும் சீனவிலும் எழுதுவதும் படிப்பதும் அரிய காரியமாயிருக்கிறது. ஆனல் இவ்வளவு கஷ்டங்களையும் இலகுவில் கடந்து சீனர்கள் வெகு சீக்கிரத்தில் தங்கள் பாஷையில் வல்லவர்களாகின்றனர். அவர்களுடைய ஞாபகசக்தியும் தீவிரமாக வளர்ந்திருக்கிறது.

ஜப்பானில் ஐந்து பெரிய சர்வகலாசாலைகள் இருக்கின்றன. அவைகளுள் 1877-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பெற்ற டோகியோ சர்வகலாசாலையும், க்யோடோ சாலையுமே பெயர்பெற்றவை. இவைகளையேயன்றி பதினெரு பெரியகலாசாலைகளுமிருக்கின்றன. இவைகளுள் 30,000க்கு அதிகமான மாணக்கர்களும், சுமார் 2000க்குக் குறைவில்லாத உபாத்தியாயர்களு மிருக்கின்றனர். இவைகளோடுகூட சித்திரம், சங்கீதம், பிறதேச பாஷைகள் இவைகளைக் கற்பிக்கப் பல உயரிய கலாசாலைகளுமுண்டு. ஸ்திரீகளுக்கு உயர்ந்த கல்விமட்டும் தாராளமாகக் கொடுக்கப்படுவதில்லை. மற்றைய கல்வி விஷயமாக யாதொரு தடையுமில்லை.

ஐம்பது வருஷங்களுக்குள் ஜப்பான் கல்வி முறையில் கொண்டுள்ள மேன்மையென்ன ! இயற்கை விரோதங்கள் பல விருந்தும், அவைகளை பொருட்படுத்தாது முன்னேங்கி வரும் ஜப்பான் நமக்கு ஒரு வழிகாட்டியாக லாகாதா ?

(41-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்பாடலில், சுவாமிகள் உமாதேவியார் யாரென உரைக்குங்கால், மாதா, ஆயி, தாயான நாரணி எனக்கூறி அத்தேவியார் உலகங்களை யீன்ற தாயாரென்பதை அறிவுறுத்தியிருப்பதுகவனிக்கத்தக்கது.

விவசாயக் கூட்டுறவுநாணய சங்கங்கள்

AGRICULTURAL CO-OPERATIVE CREDIT SOCIETIES

1. இராஜப் பிரதிநிதி விவசாய அபிவிருத்தியிலே இந்தியாவின் உயிர்நிலை தங்கியிருப்பதாகக் கண்டு கமிஷன் நியமிக்க ஏற்பாடு செய்திருக்கின்ருர். பொருளாதார மகாநாட்டில் கிராமங்கள்செழித்து வளரும் முறைகளைப்பற்றி பரிசீலனை நடந்தேறிற்று. உத்தியோகஞ் செய்பவர்களுக்கு அதிருப்தி அதிகரித்து உழுது பயிர்செய்து ஜீவனஞ் செய்வதிலே மனம் நாடுகின்றது. எங்கும் கிராம வாழ்க்கைச் செம்மைப் படவேண்டுமென்ற உணர்ச்சி பரவிவருகிறது.

2. கிராமச் சீர்கேட்டுக்குப் பொது மனோபாவம் காரணம். டம்பத்தில் பிரியம்; அதிகாரத்தில் ஆசை; பிறரைவிடத் தாம் உயரவேண்டுமென்ற எண்ணம்; நாளை வருவதைப் பொருட்செய்யாமல் தற்காலப் பெருமையை அதிகமாய் மதித்தல்; சரீரப் பிரயாசைப்பட்டு உழைப்பதில் அருவெறுப்பு; சகோதர உணர்ச்சியின்மை; பொறுமையின்மை; அலக்ஷியம்; இவைகளைப் பொதுவாய்க் காணலாம். சுருங்கச் சொல்லில் 'தான்' 'தனது' என்ற எண்ணம் வளர்ந்துவருகிறது. சிறு கிராமத்தில் பரஸ்பர ஒற்றுமையும், ஒற்றுழைப்புமில்லாவிடின் வாழ்வு சிரமப்படும். சாவிற்கும் நால்வர் வேண்டும்; கலியாணத்திற்கும் இரண்டு குடும்பங்கள் சிநேகமா யிருத்தல் வேண்டும். நடுகைக்கும் 4 பேர் தேவை. அறுவடைக்கும் 4 பேர் அவசியம். சமுதாய வாழ்க்கை ஒற்றுமையின்றி நடைபெருது. சுயநலம் ஒற்றுமையைக் கெடுக்கும் குணமுள்ளது.

3. ஆகவே, கிராமம் செழிக்க தற்கால மனோநிலைமை மாறவேண்டும். சர்வ ஜனங்களின் க்ஷேமத்திலும் தனது மேன்மையும் அடங்கியிருக்கிறதாக எண்ணம் உதிக்கவேண்டும். இவ்வித குணங்களை ஆதாரமாகக் கொண்டதும், இவைகளை வளர்ப்பதும் கூட்டுறவு இயக்கம். உயர்ந்த நோக்கத்துடன் கவர்ன்மெண்டார் கூட்டுறவு நாணயச்சங்கசட்டத்தை அமுலில் வழங்குகின்றனர். அநேக காரணங்களால் விவசாயிகள் கடன்பட் டிருக்கின்றனர். வட்டியின் கொடுமையால் அவர்களின் பிரயாசை தமக்கின்றி கடன் கொடுத்தவர்களுக்கே லாபத்தைக்கொடுக்கின்றது. ஆகையால் தாங்களதை வீண் சிரமமெனக் கருதி

பட்டணங்களில் சில்லரைத் தொழில்களையும்கூலி வேலைகளையும் செய்யமுயல்கின்றனர். சிலர் அந்நிய நாடு சென்று, இழிவான வேலைகளில் அமர்கின்றனர். இதனால் விவசாயம்-மற்றையத் தொழில்கள் நன்கு கவனிக்கப்படாம லிருக்கின்றன. இவைகளைத் தடுத்து உற்சாகத்தை அளிப்பது கூட்டுறவு நாணயச்சங்க முறைகள். இவை ஜர்மனி, டென்மார்க்கு, அயர்லாந்து முதலிய நாட்டு ஜனங்களைக் கடனினின்றும் மீட்டுத் திருப்தியுடன் வாழ்நாள் நடத்துமாறு செய்திருக்கிறது.

4. இம்முறைகளை முதலில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தவர் 'ரவீஸன்' என்ற மகா கருணி. இவர் சரித்திரம் ஒவ்வொருவரும் வாசிக்கத் தகுதியுள்ளது. இம் முறைகளில் முக்கியமானவை பின் வருவன. (1) குறிப்பிட்ட எல்லைக்குள் அடிக்கடி நெருங்கிப் பழகுவோர் சங்கத்தில் மெம்பர்களாகலாம். (2) ஒரு பைசாவாயினும் சங்கத்தில் சேர்த்து, வேண்டும்போது திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். (3) விவசாயம், தொழில் அபிவிருத்திக்கான விஷயங்களுக்கே கடன் பெற வேண்டும். (4) தங்கள் சங்கத்தைப் பிறர் உதவியின்றித் தாங்களே நிர்வகிக்கவேண்டும். (5) முடிந்தவரை தவணைப் பணத்தைத் தவறின்றி குறித்த காலத்தில் கட்டும் பொருட்டு சிக்கனமுறைகளை அனுஷ்டிக்கவேண்டும்.(6)மெம்பர்கள் டிபாஸிட்டுசெய்யுமாறு பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தொழிலிலும் ஒழுக்கத்திலும் உதவிசெய்யவேண்டும். (7) வருஷாந்திரக் கணக்குத் தணிக்கை செய்யப்பட்டு சங்கத்து மெம்பர்களால் அங்கீகாரமான பிறகு லாபத்தில் நாலில் ஒரு பங்கை க்ஷேம நிதியாகவும், 20-ல் ஒரு பங்கை பொது நன்மைப் பண்டாகவும் வைத்து, மீதி 20-ல் 14-பங்கில் முதல் போட்டவர்களுக்கு வட்டியும், கடன் வாங்கி வட்டி செலுத்தியவர்களுக்கு 'ரிபேட்' அல்லது (அதிக வட்டி வாங்கியதை மீட்டிக் கொடுப்பது) கொடுக்க வேண்டும்.(8) வட்டிவிகிதமும் பணத்தைத் திரும்பக் கொடுக்கவேண்டிய நிபந்தனைகளும் கண்டிப்பாயிருப்பதுடன், வாங்குவோரின் தன்மையையும் பொறுத்திருக்கவேண்டும். (9) சங்கத்துக்குப் பணம் தேவையிருப்பின் அயலாரிடமிருந்து வாங்குவதிலும், இதைப்போன்ற சங்கத்திலிருந்து வாங்குவதே மேன்மை. (10) கோர்ட்டுக்குப்போகாமல் விவகாரங்களை சங்கத்து மெம்பர்களேமுடிவு செய்துகொள்ளல். (11) கடன் தொகை மெம்பரின் ஒழுக்கத்தையும், தொழிலையும் பற்றியிருக்க வேண்டும். (12) சொத்து, பொருள்களைவிட மனிதனின் உயிரே பிரதானம் என்ற கொள்கை.

5. இவைகளின் நுட்பத்தை நன்றாய் ஆராய்ந்து பாருங்கள். கடன் வாங்குகிறவர், கொடுப்பவர் பரஸ்பர சிநேகிதர்கள். ஒருவரை யொருவர் ஏமாற்ற வேண்டுமென்ற விரோதபாவமுள்ளவரன்று. மூலதனத்தையும் மெம்பர்களின் டெபாஸிடையும் சிலர் கடன் பெறுகின்றனர். சிறுகச் சிறுகக் கடனைத்தீர்க்க பணம் சங்கத்திற்கு வந்து கொண்டிருக்க, வேறு சிலரும் வேண்டும்போது கடன்பெறவசதிஏற்படுகிறது. தவணைபாக்கிவைப்போரின்கஷ்டங்களைமற்றவர்களுமறிந்து அவருக்குத் தகுந்த உதவிசெய்ய இயலும். அதினால் அவரும் கௌரவமடைவதுடன் சங்கசொத்துக்கும் நஷ்டமில்லை; காரியத்திற்கும் தடையில்லை. கடன் சிறுகச் சிறுகக் கொடுப்பதில் விவசாயப்பொருள்களையும் தொழிற் சாமான்களையும் நிதானமாய் நல்ல விலைக்குவிற்க சௌகரியமுண்டு. மனச் சமாதானமுண்டு. ஒரு பைகூட டிபாஸிட்டு செய்வதில் சிக்கனவாழ்வு உண்டாகும். அநேகர் டிபாஸிட்டுசெய்துவர, சங்கத்திற்கு வரவு செலவு நேரிடுகிறது. அதினால் மெம்பர்களுக்குத் தேவையானபோது பணம்பெற சௌகரியமுண்டு. இதின் மூலமாய் சங்கத்தின் நாணயம் கௌரவம் இவை உயர்கின்றன. குறைந்த வட்டிக்கு டிபாசிட்டு தாராளமாய் வந்துவிழும். வட்டிக் குறைவில் டிபாசிட்டு வரவே, குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கவசதி உண்டு.

6. விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் கடன் கொடுக்கப் படவேண்டுமென்பதின் உட்கருத்து வெகு அதிகம். இதன் உண்மை தெரியாமலே நம் நாட்டில் அநேக சங்கங்கள் தத்தளிக்கின்றன. வீணான கஷ்டங்களும், கடன் அதிகரித்தலும், நன்மைக் குறைவும் தோன்றுகின்றன. சில்லரையில் வியாபாரம் செய்வோர், நகைநட்டுச் செய்வோர், மிராசுதார், உத்தியோகத்தினர் இவர்கள் கடன் வாங்கி தேசத்துக்கே கேடு விளைவிப்பவர். நிலத்தை அடமானஞ் செய்து மிராசுதார் டம்பத்திற்குக் கடன் வாங்குவர். நகை நட்டுகள் டம்பமே. சில்லரை வியாபாரிக்கு லாபம் நஷ்டம் கலந்து நிற்கும். இவ்விதக் கடன்கள் வீண்; நாட்டைச் செழிக்கச் செய்யா. எருப்போடவும், உழவும், கிணறு வெட்டவும், நடவும், நெசவு செய்யவும் வாங்கும் கடன்கள் உணவுப்பொரு

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார் நிலைக்கெளிதா நீர தரண்.

ளையும் உடைகளையும் உற்பத்தி செய்யக் காரணமாயிருப்பதோடு ஏராளமான ஜனங்களுக்கு வேலையையும் கொடுக்க அவர்களின் தொழிலின் ஊதியத்தைக் கொண்டு கடன் வட்டியைக் கொடுக்க சௌகரியம் உண்டு. டம்பத்தில் செலவாகும் பொருள் கசத்தில் போட்டதை ஒக்கும். தொழிலில் போட்ட பொருள் நல்ல நிலத்தில் விதைத்த விதைக்கு ஒப்பாகும். இதிலுள்ள வேறு சூக்ஷ்மங்களையும் வாசிப்பவர்களே கண்டறியலாம்.

7. ஐரோப்பிய நாடு கூட்டுறவு நாணயச் சங்கங்கள் விருத்தியடையும் வழிகள் கவனிக்கத் தக்கவை. சில சங்கங்கள் கொஞ்ச வருடங்களாய் வளர்ந்து வருகையில், ஒரு சங்கத்தில் பணப்பிரியமும் வேறொன்றில் பணமிகுதியும், மற்றவைகளில் ஏற்றத்தாழ்வும் போதுமான அளவு இருப்பதைக்கண்டனர். உடனே இச்சங்கங்களிற்குப் பொதுவாய் நடுமத்தியி லுள்ளவிடத்தில் ஒரு பாங்கியை ஏற்படுத்துகிறது ஒவ்வொரு சங்கமும் பங்கு எடுத்துக்கொள்கிறது. சங்கங்களின் பிரதிநிதியாய் சிலரை யனுப்பி அவர்களைக்கொண்டே நிர்வாகம் நடத்துகிறது. இதனால் பணப்பிரிய மிருக்கு மிடத்திற்குப் பணம் அதிகமிருக்கும். சங்கத்திலிருந்து கொடுக்க, கூட்டுறவுப் பணமே உபயோகத்தில் வழங்குவதொன்று; எல்லாச் சங்கங்களும் பணத்திற்குப் பொறுப்பாளிகளாகின்றன; அப்போது சங்கத்திற்குள் ஒற்றுமையும் பரஸ்பர உபகாரமும் அதிகரிக்கின்றன; இந்த யூனியன் பாங்கி அதிக செல்வாக்குள்ளதாகிறது. டிபாஸிட்டு ஏராளமாய்க் குவிய, வட்டி குறைகின்றது; இந்தப் பிரதிநிதிகளின் அனுபவமும், பொதுநோக்கும் உயர்கின்றன; இவைகளின் பயனாக தனி சங்கத்தின் நிர்வாகமும் நேர்மையடைகின்றது.

8. இவ்விதம் சில யூனியன் பாங்கிகள் நியமனமாய் நிர்வாகம் நடத்த, வேறு சில நுட்பங்கள் வெளிவந்தன. சில மாதங்களில் சில யூனியன்களுக்குப் பணத்தேவையும், வேறு சில மாதங்களில் வேறு சில யூனியன்களுக்குத் தேவையும், பயிர் விளைவையும், தொழில்களையும், வியாபாரத்தையும் முன்னிட்டு மாறிமாறி வந்தன. ஆகையால் யூனியன் பாங்கிகள் ஒன்றுசேர்ந்து மத்திய பாங்கியை ஏற்படுத்தினர்; இத்துடன் நகரங்களில் பண்டசாலைகளும் வளர்ந்துவரத் தொடங்கின. இப்பாங்கிகள் பண்டகசாலைகளையும் நாணயச் சாலைகளையும் இசைத்தன. ஆகவே சொற்ப நாணயத்தைக்கொண்டு வியாபாரம் தொழில்கள், வீண்செலவும் அனுவசியமின்றி நடைபெறவே, வட்டி விகிதம் திடீரெனக் குறைந்தது. வட்டி குறையவே, தொழில்கள் செழிக்க ஆரம்பித்தன. ஏழைகள் சொந்தவீடுகள் கட்டிக்கொள்ள ஆரம்பித்தனர். அதிகமாய் ஆடு, மாடு, கோழி, வாத்து இவைகளை வளர்த்து வெண்ணெய், பால், தயிர், முட்டை இவைகளைவிற்று ஜீவனஞ்செய்ய வசதியுண்டாயிற்று. காலி நிலங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. ஆகவே வட்டிக் குறைவு சகல சம்பத்தையும் வளர்த்துவிட சௌகரியம் உண்டாக்கிற்று.

சங்கங்களுக்குப் பொதுவில் கூட்டுறவு யூனியன் என்ற பிரதிநிதிகள் சேர்ந்த சங்கம் ஒன்று உண்டு. ஆழ்ந்த புத்தி, நூல் பயிற்சி, உலக அனுபவம், இயக்கத்தில் உண்மையான பற்று இவைகள் நிறைந்த சில பேரறிஞர்கள் இதில் நியமனம் பெறுகின்றனர். இச்சங்கத்தார் இவ்வியக்க குருக்களென கருதப்படுகின்றனர். சுற்றுப்பிரசாரம் செய்வது, தனிச் சங்கங்களின் ஒழுங்கீனங்களைக் கண்டிப்பது-நூதன உபாயங்களை அறிவிப்பது, அனுஷ்டிக்கும் முறைகளில்வரும் கஷ்டங்களுக்கும் அநீதிகளுக்கும் ஈடு செய்யவேண்டிய வழிகளைக் காட்டிப், பின் அவை வராதபடி அதற்கியன்ற மார்க்கத்தை விளக்கி உரைப்பது, பிரசங்கஞ்செய்வது-விஷய போதனை செய்வது, புஸ்தகங்களைப் பிரசுரஞ் செய்வது. இவை போன்றவை யூனியனின் தொழில். அவ்வித யூனியனொன்று சென்னையிலிருப்பின், 11-ஆயிரமல்ல, ஒரு லக்ஷம் சங்கங்கள் சென்னை இராஜதானியில் ஏற்பட்டிருக்கும். அவைகளின் சக்தி வெகு பலமாய், மத்திய பாங்கி, மாகாண பாங்கி, விவசாயச் சங்கங்கள் எல்லாம் ஒரே கருத்தாய் நுட்பமாயும், கவனமாயும் வேலை செய்ய கவர்ன்மெண்ட் ஸேவிங்க்ஸ் பாங்கிப்பணம், மற்றும் பாங்கிகளினுமுள்ள டிபாஸிட்டுகள் இவைகளில் வந்து சேரும். தொழில் விவசாயம் சீரடைந்திருக்கும். நகரங்களில் நேர்த்தியான வீடுகள் நடுத்தர வருமான முள்ளவர்கள் கட்டி வாழ்ந்து கொண்டிருப்பார். கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலமாய் வியாபாரம் நடக்கும். கவர்ன்மெண்டிற்கும் ஜனங்களுக்கும் நட்பு அதிகரித்திருக்கும்.

காலஞ்சென்ற ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயர்

ஓர் உத்தம தேசபக்தர்

THE LATE MR. T. V. SESHAGIRI AIYAR

நமது தமிழ் நாட்டில் பொது நன்மைக்காக வெகு காலமாக உழைத்துவந்த ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயரவர்கள் சுமார் ஒருமாத காலமாக தேக அசௌக்கியமாயிருந்து—நோய் குணமடையாமல் நாளது பிப்ரவரி ௴ 24உயன்று மாலை மூன்று மணிக்கு சென்னை, கீழ்ப்பாக்கம் தமது கிருஹத்தில் இறைவனது திருவடி நிழலையடைந்தார். அப் பெரியார் திரிசிராப்பள்ளி ஜில்லாவில் திருப்புனற் றுறையில் 1860-ம் வருஷத்தில் பிறந்தவர். அவர் ஆதியில் திருச்சியில் ஒரு கலாசாலையில் படித்து வந்து, பிறகு 1877-ம் வருஷத்தில் சென்னை ப்ரெஸிடென்ஸி கல்லூரியில் சேர்ந்து, 1882-ம் வருஷத்தில் பி. ஏ. பரீட்சையில் தேறினர். ஆதியில் திருச்சியில் தேசியக் கலாசாலை ஏற்படுத்துவதற்கு முயன்ற தேசபக்தர்களில் அவர் முக்கியமானவர். அக் கலாசாலையை ஏற்படுத்திய ஆரம்பத்தில் அவரே அதில் உபாத்தியாயராக அமர்ந்து சேவை செய்தார். 1885-ம் வருஷத்தில் பி. எல். பரீக்ஷையில் தேறி, 1886-ம் வருஷத்தில் ஹைக்கோர்ட்டு வக்கீலாக ஆயினர். பிறகு சிலகாலம் அவர் சட்டக் கல்லூரியிலேயே உதவி உபாத்தியாயராக விருந்தார். நாளுக்கு நாள் அவரது ஊக்கத்தினலும் சாதுரியத்தினலும் அவர் வக்கீல்களுக்குள் முதன்மையானவர்களில் ஒருவராயினர். 1914-ம் வருஷத்தில் அவர் சென்னை ஹைக்கோர்ட்டில் ஒரு நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டு, 1921-ம் வருஷம் வரையில் அவ் வேலையி லிருந்தார். அவ் வேலையை விட்டது முதல் இறுதி வரையில் அவர் ஓயாமல் பொது நன்மைக்காகவே உழைத்து வந்தார்.

அப்பெரியாருடைய பெருங் குணங்கள் அவர் இறந்த மறுநாள் ஹைக்கோர்ட்டில் தெளிவாகப் பலரால் எடுத்துக் காட்டப்பட்டன. அவர் மரணத்தினல் தங்களுக்குண்டான துக்கத்தைக் குறிப்பதற்காக ஒரு சபைக்கூடத்தில் தலைமை நியாயாதிபதியும், ஸர் சார்லெஸ் ஸ்பென்ஸர், மிஸ்டர் பில்லிப்ஸ், ஸ்ரீமான் குமாரஸ்வாமி சாஸ்திரி, ஸ்ரீமான் கிருஷ்ணன் என்னும் நியாயாதிபதிகளும், ஸ்ரீமான் டி. ஆர். இராமச்சந்திரய்யர், ஸ்ரீமான் ஸி. வி. அநந்தகிருஷ்ணய்யர் முதலிய வக்கீல்களும் குழுமியிருந்தனர்.

அப்போது ஸ்ரீமான் டி. ஆர். இராமச்சந்திரய்யரவர்கள் அப்பெரியாருடைய பிறப்பு, வளர்ப்பு முதலியவைகளை விவரமாக எடுத்துக் கூறி, சட்டத்தில் அவருக்கிருந்த ஞானத்தையும் பழைய தீர்மானங்களை ஆதாரங்களாக எடுத்துக் காட்டுவதில் அவருக்கிருந்த நிகரற்ற திறமையையும் பற்றிப் பெரிதும் புகழ்ந்துபேசினர். ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி அய்யர் முக்கியத் தீர்மானங்களையெல்லாம் தவருமல் ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக்கொண்டு வந்த வழக்கத்தைச் சொல்லி, அவர் எழுதியதனல் வக்கீல்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் உண்டான சௌகரியத்தை எடுத்துக் கூறுங்கால், ஸ்ரீமான் டி. ஆர். இராமச்சந்திரய்யரவர்கள் முன்பு ஒரு சமயத்தில் ஸர் ஜான் வால்லிஸ் என்னும் தலைமை நியாயாதிபதி, "சட்டத்தில் எவ்விஷயத்தைப் பற்றியாவது போதுமான பழைய தீர்மானங்களில்லையென்று தோன்றினல், ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி அய்யரவர்களது நோட்டுப் புத்தகத்தைப் பார்ப்பது நலம்" என்று கூறியதை எடுத்துரைத்தார். வக்கீல்கள் எல்லோரும் அவரைப் புகழ்வது வழக்கமென்றும் ஸ்ரீமான் ஐயரவர்கள் தெரிவித்தார்.

ஸ்ரீமான் டி. ஆர். ராமச்சந்திரய்யரவர்கள் சொன்னவைகளையெல்லாம் ஆமோதித்து, பப்ளிக் ப்ராஸிக்யூடர் ஜே. ஸி. ஆடம் துரையவர்கள் பேசிய பின், தலைமை நியாயாதிபதி, ஸர் கௌட்ஸ் ட்ராட்டர் பின்வருமாறு பேசினர்:—

"இன்று இந்த கோர்ட்டில் பிரஸன்னமாயிருக்கும் ஜட்ஜுகளின் சார்பாகவும், என் சார்பாகவும் மாஜி ஜட்ஜான ஸ்ரீமான் சேஷகிரி அய்யரின் மரணத்தைக் கேட்டு வருந்துவதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

* * * *

ஒரு மனிதர் எவ்வளவு தாழ்ந்தவராயிருப்பினும், தம்முடைய தைரியம், விடாமுயற்சி, சுறுசுறுப்பு முதலியவற்றைக் கொண்டு எவ்வளவு தூரம் முன்னுக்கு வரக்கூடுமென்பதை அவருடைய ஜீவிய சரித்திரம் ருஜுப்படுத்துகிறது. அவர் வக்கீலாக அமருமுன்னர் பத்திராதிபராகவும், சட்ட உபாத்தியாயராகவும் இருந்தவர்.

JL
Z M 21, N26 VB
N26:18.2
218373

அவரை நன்றாக அறிந்துள்ள எவரேனும் அவருடைய ஜீவிய சரித்திரத்தை எழுதுவாரென்று நம்புகிறேன். வக்கீல் தொழிலில் கஷ்டப்படும் அநேகர், அத்தொழிலினால் ஆதாயம் கிடையாதென்று அதைரியமடையாது இவரைப் பின்பற்றி விடாமுயற்சியுடன் அத்தொழிலில் பிரயத்தனப்படக்கூடும். வசியமும், நிபுணத்வமும் வாய்ந்த மிஸ்டர் எர்ட்லி நார்ட்டனுடன் அவர் இடைவிடாது சகவாசம் செய்துவந்ததனால் அவருக்கு உற்சாகம் ஏற்பட்டிருக்க கூடுமென்று நம்ப இடமிருக்கிறது. ஏனென்றால், மிஸ்டர் நார்ட்டனைப் பற்றி அவர் எப்பொழுதும் வெகு புகழ்ச்சியாகவே பேசுவது வழக்கம்.

* * * *

பழைய தீர்ப்புகளைக் கொண்டு வழக்கை வாதிப்பதில் அவர் வெகு திறமை வாய்ந்தவர். அவர் ஜட்ஜாக வந்த பிறகும் கூட வக்கீலாக விருந்தபொழுது குறித்துக்கொண்டுள்ள பழைய தீர்ப்புகளை ஆதாரமாகக் கொண்டு வழக்குகளை அவர் முடிவு செய்வது சகஜம். அது மாத்திரமில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் விசாலமான கொள்கையை வைத்துக்கொண்டு அதற்கேற்ப முடிவு செய்வதுதான் அவருடைய சுபாவம். அவர் எவ்வளவு படித்தவரா யிருப்பினும் கல்வியின் படாடோபத்தை அவர் வெளிக் காட்டிக் கொண்டதே கிடையாது. விஷயங்களை யறிந்து முடிவுசெய்ய வேண்டிய சமயங்களிலும் அவர் வெகு புத்திசாலித்தனமாகவும், தயாள குணத்துடனும் நடந்துகொள்வார்.

தற்சமயம் அவர் எவ்விதம் வக்கீல் தொழில் செய்தாரென்றாவது, ஜட்ஜாவேலை பார்த்தா ரென்றாவது காட்டப்போவதில்லை. அவருடைய குணாதிசயம் எத்தகையதென்பதைக் கவனிப்போம். நிர்வாக விஷயமாகவும், கல்வி முறையைப்பற்றி ஆலோசிக்கும் இடங்களிலும் நான் அவருடன் அதிகமாகப் பழகியிருக்கிறேன். இவற்றிலெல்லாம் அவர் குறையாத தைரியத்துடனும் சுய அபிப்பிராயத்துடனும் தம் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்துகொண்டதை நான் கவனித்திருக்கிறேன். ஒவ்வோர் சமயங்களிலும் மாசற்றவாறு தாம் நடந்துகொள்வது மல்லாது, பிறரையும் அவ்விதமே நடந்து கொள்ளச் சொல்வார். அவ்விதம் சொல்வதிலும் அவருக்கியல்பாயுள்ள பெருந்தன்மையுடன் எடுத்துக் காட்டுவார். அக் கொள்கையை விட்டு அவர் எந்நாளும் வழுவியதே கிடையாது. நானும் அவரும் பல விஷயங்களில் ஒன்று படுவதே கிடையாது. இருந்தாலும் எங்கள் மனதிலுள்ளதை நாங்கள் ஒருவருக்கொருவர் பலமாக எடுத்துரைப்போம். அப்பொழுதும் எங்களுடைய சிநேகத்திற் கிடைஞ்ச லேற்பட்டதே கிடையாது.

* * * *

ஆகையால் ஸ்ரீமான் சேஷகிரி ஐயரின் மரணத்தினால் ஒரு பெரிய வக்கீல் காலமானாரென்று மாத்திரம் வருந்துவதற்கில்லை. பொது ஜன ஊழியரில் பிரபலஸ்தரும் நம் மத்தியினின்று காலமானார்.

* * * *

ஸர். சார்லஸ் ஸ்பென்ஸர் தெரிவித்ததாவது:- வயது நிபந்தனை ஏற்பட்டதனால்தான் ஸ்ரீமான் சேஷகிரி ஐயர் ஹைகோர்ட்டில் 7-வருஷங்களுக்கு மேல் ஜட்ஜா வேலை செய்யமுடியவில்லை. அப்பதவியை விட்டு நீங்கிய பிறகு அவர் வீண்பொழுது போக்க இசையவில்லை. டில்லி, ஸிம்லா, சென்னை முதலிய பலவிடங்களிலும் அவர் பொதுஜன நன்மைக்காக உழைக்கத் தலைப்பட்டார். தென்னிந்திய வெள்ளக் கஷ்ட நிவாரணத்திற்காக அவர் செய்துள்ள நன்மையை யாவரு மறிவார்கள்.

அவருடன் ஜட்ஜா வேலை பார்த்ததில் ஒரு விஷயம் எனக்கு ஒருக்காலும் மறக்காது. அதாவது: அவருடைய சமயோசித புத்தி, விஷயத்தை உடனே அறிந்து கொள்ளும் சாமர்த்தியம், விசாலமான நோக்கம், வழக்குகளின் பழைய தீர்ப்புகளைப்பற்றி அவருக்குள்ள இணையற்ற ஞானம் இவைகள் என்மனதைக் கவர்ந்தன. தொழில் முறையிலும் அவரைப் பின்பற்றி மற்றவர் ஒழுகக்கூடும். அவருடைய ஜீவிய வாழ்க்கையும் பலவகையிலும் மெச்சத்தக்கது. நல்ல சுபாவமும் மரியாதையு முடையவர், கோபம் முதலியன கிடையாது. அத்தகையவருடைய சிநேகம் கிடைப்பது பெரும் பாக்கியமேயாகும். அவருடைய மரணம் இம்மாகாணத்திற்கு ஒரு பெரிய நஷ்டமென்றே கூறலாம்.

ஸர் ஸி.வி. குமாரசாமி சாஸ்திரியார் பேசியதாவது:—தாம் ஸ்ரீமான் சேஷகிரி ஐயரைப் பள்ளிக்கூடத்தில் படித்த காலமுதலே அறிவதாகச்சொல்லி ஸ்ரீமான் சேஷகிரி ஐயரின் கல்வித் திறமை, தெய்வப்பற்று முதலிய அரிய குணாதிசயங்கள் சிலாகிக்கத்தக்கவை யென்றும், அவர்

பெரும்புகழுடன் நீடூழி வாழ்ந்தாலும் எவ்வளவு காலம் ஜீவித்திருப்பினும் அவர் நன்மை பயக்கக்கூடியவரென்றும் சொல்லி அன்னவருடைய மரணத்தைக் கேட்கத் தாம் வெகுவாக வருந்துவதாகச் சொன்னார். —சுதேசமித்திரன்.

"ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி அய்யர் எப்போதும் பொதுஜன நன்மைக்காக உழைப்பதில் வெகு ஊக்கமுடையவராயிருந்தார். இவர் எல்லாவித பொது நலங்களிலும் வேலைசெய்து வந்தார். மதுபான விலக்குச் சங்கம், ஜனசேவை சங்கம் முதலியவைகளிலும் இவருடைய இடைவிடா உழைப்பு அனைவராலும் பாராட்டப்பட்டு வந்தது. மத்திய வெள்ளக் கஷ்ட நிவாரண நிதிக்குத் தலைவராயிருந்து இவர் செய்த ஊழியத்தை எவரும் மறக்கமுடியாது. இவர் அரசியலில் அதிக ஊக்கங்கொண்டு உழைத்து வந்தபோதிலும், எந்தக் கட்சியையும் சேரவில்லை. இவருடைய நோக்கத்துக்கு நாட்டிலுள்ள எந்தக் கட்சியும் சரிப்படவில்லை. மிண்டோ மார்லி சீர்திருத்தத்தின்கீழ் சென்னைச் சட்டசபையில் இவர் ஆறு வருஷம் அங்கத்தினராக விளங்கினார். மாண்டேகுசெம்ஸ்பர்ட் சீர்திருத்தப்படி இந்தியா சட்டசபையிலும் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்ட ஓர் அங்கத்தினராக இவர் விளங்கினார். அரசாங்க நியமனம் பெற்றவராயினும் பொதுஜன நன்மைக்கே இவர் பாடுபட்டு வந்தார். ஜன நாயகக் கட்சிக்குத் தலைவராகவு மிருந்தார். ஹிந்து மதக் கிரந்தங்களில் இவருக்கு அதிக ஆராய்ச்சியுண்டு. இராமாயணத்தைப் பற்றித் தொடர்ச்சியாகப் பத்திரிகைகளில் இவர் எழுதி வந்த கட்டுரைகள் ஆவலுடன் படிக்கப்பட்டு வந்தன. பத்திரிகைகளுக்கு அடிக்கடி விஷயதானம் செய்துகொண்டு வந்தார். ஸ்ரீமான் சேஷகிரி ஐயர் அடக்கமுள்ளவர்; குணசாலி; அனைவரிடத்திலும் சுமுகமாகப் பேசுவார். இவருடைய பிரிவால், சென்னை மாகாணம் ஓர் அறிஞரை இழந்தது.

ஸ்ரீமான் டி. வி சேஷகிரி ஐயர் காலஞ்சென்றதைப்பற்றி டில்லி சட்ட சபையிலும் பலர் தங்கள் வருத்தத்தை எடுத்துக் கூறினார்கள் :—

நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னர், ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயர் இறந்து போனதைக் குறித்து வருந்துவதாகவும், சட்டசபையின் சார்பாக அக்கிராசனாதிபதி அனுதாபத்தை அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும், ஸர் சிவஸாமி ஐயர் பிரேரேபித்துப் பேசுகையில் ஸ்ரீமான் சேஷகிரி ஐயர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட அங்கத்தினராகவும், ஜனநாயகக் கட்சியின் தலைவராகவும் இருந்தாரென்றும் கூறினார். ஸர் டார்ஸே லிண்ட்ஸே, ஏ. அரங்கசாமி ஐயங்கார், ஹரிச்சந்திர விஷ்ணுதாஸர், ஸையத் முர்த்துஸா ஸாஹிப், லாலா லஜபதிராய், மௌல்வி அபுல் காசிம், டாக்டர் மக்பெயில், யமுனதாஸ் மேட்டா, சி. துரைசாமி ஐயங்கார் முதலியவர்கள் ஸ்ரீமான் ஐயரின் குணாதிசயங்களைப் புகழ்ந்து பேசினார்கள். ஸர் அலெக்ஸாண்டர் மட்டிமானும் ஆதரித்துப் பேசி, தீர்மானத்தைக் காலஞ் சென்றவருடைய குடும்பத்தாருக்கு அனுப்புவதாகக் கூறினார்."

—ஸ்வராஜ்யா.

* * * *
* * * *

ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயர் தமிழ் பாஷையின்மீது மிகுந்த ஆதரவுடையவர். சில வருஷங்களுக்கு முன் சென்னையில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்க் கழகத்துக்கு அவர் அக்கிராசனாதிபதியாகவிருந்தார். நமது பத்திரிகையின் 100-வது சஞ்சிகையில் நமது பத்திரிகையை ஆதரித்துப் பின்வருமாறு முன்னுரை எழுதியுள்ளார்:—

"இந்நூறும் ஸஞ்சிகைக்கு விஷயதானம் ஏதாவது செய்யவேண்டுமென்று ஸ்ரீமான் குப்புஸ்வாமி ஐயர் முன்னரே கேட்டிருந்தார். இலக்கணப் பிழைகள் எழுத்துப் பிழைகளின்றி தமிழ் எழுதும் திறன் எனக்குக் குறைவாகவிருந்ததால் அவர் வேண்டுகோளுக்கு என்னால் இசையமுடியாமல் போய்விட்டது. இம் முகாந்தரத்திற்கு இணங்க மனம் வராது, அவர் இந்நூறும் ஸஞ்சிகைக்கு முன்னுரையாகவாவது ஏதாவது எழுதித் தந்தால் நலமாக விருக்குமென்று வற்புறுத்தினார். மிகுந்த ஆவல், நல்லெண்ணம் இவைகளுடன் அவர் செய்த இவ்விண்ணப்பத்திற்கு இணங்காதிருப்பது தகுதியல்லவென்பது வெளிப்படை.

வாசிப்பவர்களுக்கு இதில் அளிக்கப்படும் விஷயங்களின் சிறப்பும், விசித்திரமும் இங்கு காணப்படும் சுருக்க அட்டவணையிலிருந்தே நன்கு வெளியாகும். இவைகளை எழுதியவர்களும் மிகச் சிறந்தவர்கள் ; எடுத்தாளப்பட்ட

விஷயங்களும் படிப்பவர் மனதில் கதித்தெழும் ஆவலை நிலைநாட்டும் தன்மை யுடையவை.

இப்பொழுது சில ஆண்டுகளாகத் தமிழ் விஷயக் கிளர்ச்சி ஒன்று வெளிப்பட்டுள்ளது. தெலுங்கு ஜில்லாக்களில் நமது சகோதரர்கள் செய்துவரும் ஒழுங்காயுள்ளதும், ஸித்திபெறக் கூடியதுமான முயற்சிகளைப் பெரும்பாலும் பொறுத்ததாக விருக்கலாம் இந்தத் தமிழ் விஷயக் கிளர்ச்சியின் பேராற்றல். தமிழ் இலக்கியத்தைப் புதுப்பித்துச் செழிக்கச் செய்வதற்கென்றே சென்னையில் ஏற்பட்டுள்ள பல முயற்சிகளின் சிறப்பைப்பற்றி என் பழக்கபலத்தாலேயே நான் பாராட்டிக் கூறமுடியும். இந்நோக்கத்துடன் கூடிய சில முயற்சிகளில் நான் நேரிடக் கலந்தும் இருக்கிறேன்.

இந்தக் கிளர்ச்சி விஷயத்தில் "விவேக போதினி" போன்ற பிரசுரங்கள் செய்துள்ள பேருதவியை நான் நன்கு மதிக்கிறேன். முதல் சஞ்சிகை வெளியானது முதல், நான் இதை ஒழுங்காகவும் வரவழைத்துக்கொண்டு வருகிறேன். ஆதலால் இது இயற்றியுள்ள பெரு நன்மையைப்பற்றிக் கூறும் ஆற்றல் எனக்கு உண்டு.

தமிழ் அபிமானக் கிளர்ச்சிக்கு நேராக உதவியவர் பலரும் பெரும் பணத்தட்டிற்கு ஆளாகி வருந்தியவர்களே. இத்தகையவருள் நம் குப்புஸ்வாமி ஐயரும் சேர்ந்தவர். அறிஞர் பலரால் தம் பத்திரிகை நன்கு மதிக்கப்பட்டுள்ளது என்ற திருப்தி மாத்திரம் உண்டாகப்பெற்றவர் இவர். "விவேக போதினி" நடைபெற்று வந்த காலத்தில் இத்தகைய பல விஷயங்களை வெளிப்படுத்தி வந்தது என்பதை ஒருவாறு எடுத்துக்காட்டுந் தன்மை வாய்ந்தது இந்த நூறும் ஸஞ்சிகை.

ஆதலால் மிகுந்த மனமகிழ்ச்சியுடன் இந்தப் பத்திரிகையையும், மிகுந்த அமைதியுடன் இதன் பத்திராதிபர் செய்துவரும் பேருதவியையும், இதனால் பலர் உணர நான் எடுத்து இவ்வாறு பாராட்டும்படி யாயிற்று."

இந்த முன்னுரையைத் தவிர, எமது முக்கியப் பதிப்புகளில் முதன்மையான ஆரியமத உபாக்கியானம் என்னும் அருமையான நூலின் இரண்டாம் பாகத்துக்கும் அப்பெரியார் ஒருசிறந்த முகவுரை எழுதி உபகரித்ததற்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

அப்பெரியாருடைய மரணத்தினால் நமது நாடேயன்றி நமது தமிழ் பாஷையும் ஒரு பெரிய தொண்டரை இழந்துவிட்டது. பிரதி பலனைக் குறியாது தொண்டுசெய்து வந்த அப்பெரியார் முத்தியடைந் திருப்பாரென்பது திண்ணம்!

"அவர் காங்கிரஸ் வகுப்பை மிகவும் அன்புடன் ஆதரித்தவர்; ஜட்ஜாயிருந்த சுமார் பத்து வருடங்கள் தவிர தமது ஆயுட்காலம் முழுவதும் அதற்காகவே பாடுபட்டவர். 1914-ஷூ சித்திய திருப்பதி தேவஸ்தான ஸ்கூல் ஆக்டிற்கு ஆஸ்பதமாயிருந்ததும் இப்பெரியோரே. காருண்ய கவர்ன்மெண்டாராலேயே இந்திய லெஜிஸ்லேடிவ் அஸெம்ப்ளிக்கு மெம்பராக நியமிக்கப் பட்டாரேனும் அந்த ஸ்தானத்திலிருந்த மூன்று வருடங்களும் வெகு தீரத்துடனும், புத்தி சாமர்த்தியத்துடனும் ஜனங்களுக்காக அவர் பட்ட சிரமங்களையும், பேசின பேச்சுக்களையும் யாம் யெடுத்துக் கூறுவது அவசியமின்று. நாணயச் சீர்திருத்தக் கமிட்டியில் அவர் மிகவும் சிரமப் பட்டார் என்பதையும் எவரும் அறிவர்.

ஆங்கிலத்தில் ஸெனேட் (Senate) எனப்படும் சர்வகலாசாலைச் சங்கப் பகுதியிலும், (Syndicate) எனப்படும் தனிச்சங்கப்பகுதியிலும் அவர் அங்கத்தினராக நீண்ட காலமிருந்து அப்பொழுது கல்விக்காக மிகவும் பாடுபட்டார். சம்ஸ்கிருத பாஷையில் அதிகம் பயின்றவராதலின் அப்பாஷையின் அபிவிர்த்திக்காகவும், தாய் பாஷையாகிய தமிழ்மொழியின் விர்த்தியடைதலுக்கும் அவர் பலவித முயற்சிகள் செய்தார். தமிழிற் கென்று ஒரு சர்வகலாசாலை (Tamil University) நியமிக்கவேண்டுமென்று அவர் ஊக்கத்துடன் உழைத்தது கொஞ்சமல்ல. தமிழ் அகராதிக் கமிட்டி (Tamil Lexicon Committee) தலைவராயிருந்து தரணியில் அனைவரும் புகழ, அவர் தமிழிற்காக முயற்சிகள் பல புரிந்தனர்.

சென்னை வெள்ளக்கஷ்ட நிவாரண கமிட்டியின் தலைவராயிருந்தபொழுது அவர் அதன் நிமித்தம் கண்டிதமாகவும், உண்மையாகவும் உழைத்ததை அரசாங்கத்தார் மெச்சி 'கெய்ஸர்-இஹின்ட்' (Kaiser-i-hind) பதக்கத்தை அளித்ததும் ஓர் ஆச்சரியமன்று; நன்னடக்கைகளுக்கே இருப்பிடமாயிருந்த அவருக்கு நேயர்கள் கணக்கின்றி இருந்ததும் ஓர் அற்புதமாகாது.

இவ்வகைத் திறமும், புகழும், அறிவும், நன்னோக்கமும் குடிகொண்ட இம்மஹான் இறந்ததால், சென்னைமா நகரமானது ஓர் அருமையான வஸ்துவை இழந்தது போலாயிற்று; பொது ஜனங்கள் தமக்குத் தயவுடன் தைரிய மூட்டிய தலைவரை இழந்தனர்! இந்துமதம் தனது அருமைப் புதல்வனை இழந்தது! நமது பாஷையினதும், தேசத்தினதும் புராதன விஷயங்களுக்குப் புத்துயிர் அளித்துவந்த அருமையான ஆன்மாவை யாம் இழந்தோம்! —இந்துநேசன்.

* * *

"ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயர் சென்ற புதன்கிழமை இவ்வுலக வாழ்வு நீத்து விண்ணுற்றார் என்னுஞ் செய்தியை மிக வருத்தத்தோடு குறிப்பிடுகிறோம். ஸ்ரீமான் ஐயர் நீண்ட நாள் வக்கீல்தொழில் செய்து பின்னை சென்னை ஹைகோர்ட்டில் நீதிபதியாயிருந்து தங் கடனை நேர்மையாக ஆற்றினவர்; சென்னைச் சட்ட சபையிலும் சில ஆண்டு அங்கத்தவரா யிருந்து தமது மனச்சான்று வழிச்சேவை செய்தவர்; பழைய காங்கிரஸில் சேர்ந்து ஊக்கமாக உழைத்தவர்; தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தாழ்ந்த வகுப்பார் நலனுக்கும் தொண்டாற்றினவர். ஓய்ந்த நேரத்தில் காலத்துக்கு வேண்டிய கட்டுரைகள் பத்திரிகைக் கெழுதுவதில் ஸ்ரீமான் ஐயருக்கு அதிக விருப்பம். அவரது பொதுஜன சேவைக்கு அவரது குணம் அவருக்கு அரணாக நின்று துணைசெய்து வந்தது. இவ்வறிஞரைப் பிரிந்து வருந்தும் இவரது குடும்பத்தாருக்கு நமது அநுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்."

—நவசக்தி.

* * *

ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயரவர்களைப் போல் பொதுஜன நன்மைக்காக மிகுந்த ஊக்கத்துடன் உழைத்தவர் மிகச் சிலரேயாவர். சென்னை ஹைக்கோர்ட் தலைமை நியாயாதிபதி சொன்னபடி அப்பெரியாருடைய ஜீவிய சரித்திரத்தை அறிஞர் யாராயினும் எழுதி வெளியிட்டு, வாழ்வின் ஆரம்பத்தில் முன்னுக்கு வர வழியறியாமல் தியங்குபவர்களுக்குத் தைரிய மூட்டுவார்களென நம்புகிறோம். அப்பெரியாரை நமது நாடு மறவாவண்ணம், வேறு ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

———

ஸ்ரீ கிருஷ்ணகர்ணம்ருதம்

SRI KRISHNA KARNAMRUTAM

" த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகாகௌரவாம்பாம் ததானே |
வபு ரளகதுல்லாவ்ருதானனுப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா" ||

126. முனிச்ரேணீ வந்த்யம்
மதபா ல்ஸத்வல்லவவதூ—
ஸ்தனச்ரோணி பிம்ப—
ஸதிமித நயனும் போஜ ஸுபகம் |
புன:ச்லா காபூமிம்
புலகிதகிராம் நைகமகிராம்
கனச்யாமம் வந்தே கிமபி
கமனீயாக் ருதி மஹ : ||

"முனிவர் கூட்டங்களால் வணங்கத் தக்கதும், சிருங்கார மதத்தால் உல்லாஸமாய் விளங்கும் கோபிகைகளின் அவயவங்களை அசைவற்று நோக்கும் தாமரைப் புஷ்பம் போன்ற அழகிய கண்களோடு கூடியதும், ஆனந்த மயமான வேத வேதாந்த ஸூக்திகளால் துதிக்கப்பெற்றதும், பார்க்கப் பார்க்க மனதைக் கவரத்தக்க சரீர சோபையோடு கூடியதும், நீருண்ட மேகம்போல் கறுப்புநிறமுமுள்ள தேஜஸை வணங்குகிறேன்"

127. அனுசும்ப தாமவிசலேன சேதஸா
மனுஜாக் ருதேர் மதுரிமச்ரியம் விபோ : |

அபி தேவ க்ருஷ்ண தயிதேதி ஜல்பதா—
மபி நோ பவேயு ரபிநாம தாத்ருசா: ||

"மண்ணுலகில் மானிட ரூபத்துடன் அவதரித்துள்ள பரமபுருஷனது ரூபலாவண்யத்தைச் சலனமற்ற மனத்தோடு இடைவிடாது தியானிப்பவரின் புண்ணிய விசேஷங்கள், 'ஹே கிருஷ்ண! தேவ தேவனே! நண்பனே' என்று பிதற்றி வரும் நமக்கும் ஏற்படுமாக!" பகவானது நாம உச்சாரணமே பரம பாவனம் என்பது கருத்து.

128. ப்ரக்ருதி ரவதுநோ விலாஸ லக்ஷ்மயா:
ப்ரக்ருதி ஜடம் ப்ரணதாபராத வீத்யாம் |
ஸுக்ருதி க்ருதபதம் கிசோரபாவே
ஸுக்ருதி மன: ப்ரணிதான பாத்ர மோஜ: ||

"குழந்தைப் பருவத்தில் ஸௌந்தரியத்துக்கு உற்பத்தி ஸ்தானம் போன்றதும், சரணம் புகுந்த பக்தர்கள் செய்துள்ள அபராதங்கள் விஷயத்தில் மந்தஸ்வபாவமுள்ளதும், எல்லா மங்களங்களோடு கூடியதும், புண்ணிய புருஷர்களால் மனத்தால் இடைவிடாது தியானிக்கத் தக்கதுமான தேஜோ ராசியானது நம்மைக் காப்பாற்றுமாக!" பகவான் பக்த பராதீனன் என்பதும், ஒப்பில்லா ஸௌந்தரியம் நிரம்பிய புண்ணிய மங்கள விக்கிரகன் என்பதும் கருத்து.

129. ஆமூல பல்லவித லீலமபாங்கஜாலை:
ஆலிஞ்சதீ புவன மாத்ருத கோபவேஷா |
பாலாக்ருதிர் ம்ருதள முக்த முகேந்து பிம்பா
மாதுர்யவித்தி ரவதான் மதுத்விஷோ ந: ||

"தமது லீலைகள் எங்கும் நிறைந்துள்ள பிரபஞ்சத்தைக் கடாக்ஷங்களால் அனுக்கிரகிப்பதும், இடையர் வேஷத்தை யெடுத்துள்ளதும், குழந்தைப் பருவத்திலுள்ளதும், சந்திரன்போல் அழகும் பளபளப்புமுள்ள சுந்தர முகத்தோடு கூடியதுமான, மது என்னும் அசுரனைச் சம்ஹரித்த பெருமானது மாதுர்யத் திரட்டானது நம்மை இரட்சிக்கட்டும்!"

130 விரணன் மணிநூபுரம் வ்ராஜே
சரணம் போஜ முபாஸ்வ சார்ங்கிண: |
ஸரஸே ஸரஸி ச்ரியாச்ரிதம்
கமலம் வா கலஹம்ச நாதிதம் ||

"ஆயர்பாடியில் ஸஞ்சரித்து வந்த திருமாலின் சப்திக்கும் மிஞ்சியோடு கூடிய சரணகமலத்தைப் பஜித்துக் கடைத்தேறுங்கள். அல்லது அழகிய ஏரியில், கலஹம்ஸ பக்ஷியின் இனிய கானங்களோடு கூடியதும், லக்ஷ்மியால் ஆசிரயிக்கப்பெற்றதுமான தாமரைப் புஷ்பத்தை அடையுங்கள்." கார்வண்ணனது பாத ஸேவையானது வெகு ஆனந்தகர மென்பதும், அவரது காலணியின் சப்தமானது சக்கரவாக கீதம்போல் அவ்வளவு காதிற் கினிமையான தென்பதும் கருத்து.

131. சரணமசரணானும் சாரதாம் போஜநேத்ரம்
நிரவதி மதுரிம்ணு நீலவேஷேண ரம்யம் |
ஸ்மரசர பாதந்த்ர ஸ்மேர நேத்ராம் புஜாபிர்
வ்ரஜயுவதிபிர வ்யாத்ப்ரம்ம ஸம்வேஷ்டிதம்ந: ||

வேறு திக்கற்றவரைக் காத்து ரக்ஷிக்கக்கூடியவரும், சரத்கால தாமரைப்புஷ்பம் போன்ற கண்களோடு கூடியவரும், எல்லையில்லா மாதுரியம் நிரம்பிய கறுமை நிறத்தோடு விளங்கியவரும், மன்மதா வேசத்தால் வசமற்று வருந்தும் கோப ஸ்திரீகளால் சூழப்பட்டவருமான பரமபுருஷன் நம்மைக் காத்தருள்வாராக!"

132. ஆபாதமா சூடமதிப் ரஸக்தை—
ராபீயமாணு யமினும் மனேபி: |
கோபீஜன ஞாத ரஸாவதான்னே
கோபால பூபால குமார மூர்த்தி: ||

"இடையர் உருக்கொண்டு பூபார நிவர்த்தி செய்து எல்லோரையும் ரக்ஷிக்கும் பொருட்டு அவதரித்துள்ள பகவானது குழந்தை ரூபமான சரீரமானது, தவத்திலாழ்ந்த முனிவர்களால் நன்கு தியானித்து அனுபவிக்கத்தக்க பாதம் முதல் சிரசுவரையிலுள்ள அங்கங்களோடு கூடினது; கோபிகைகளால் சிருங்கார ரஸத்தோடு நேரில் தொட்டு அனுபவிக்கக் கூடியது. இவ்வித சரீரமானது நம்மை இரட்சிக்கட்டும்". யோகிகள் கண்டறிவதற்கரிய சௌந்தரிய அனுபவமானது பரமபக்தர்களான கோபிகைகளுக்கு ஸாக்ஷாத்தாய் கிடைத்தது என்றும், அவ்வித சரீர சௌந்தர்யத்தை தியானிக்கும் நம்மவர்க்கும் அது பரமானந்தத்தையும், புண்ணிய விசேஷத்தையும் அளிக்கும் என்றும் கருத்து.

133. ஜயதி குஹ சிகீந்த்ர பிஞ்சமௌளி:
ஸுர கிரி கைரிககல்பிதாங்கராக: |
ஸுர யுவதி விகீர்ண ஸுன வர்ஷ—
ஸ்நபித விபூஷிதகுந்தள: குமார: ||

"ஆறுமுகக் கடவுளது மயில் தோகையால் அலங்கரிக்கப்பெற்ற சிரத்தோடு கூடினவராயும், தேவர் மலையிலுண்டாய அங்க ராகங்களால் பூசப்பெற்றவராயும் தேவ ஸ்திரீகளால் வர்ஷிக்கப்பெற்ற உத்தம புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்ற குந்தளங்களோடு கூடினவராயுமுள்ள கார்வண்ணனது பாலரூபமானது வெகு சோபையுடன் உத்கர்ஷமாய் விளங்குகிறது."

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார் அவர்கள்.]

(27-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஈன்றோர் இருவரையும் பறிகொடுத்துவிட்ட பன்னிரண்டாண்டு பாலிகை இரஞ்சிதம் தன் தந்தையைப்பெற்ற பாட்டியுடன் வசித்து வருகிறாள். அவளுடைய நிலைமையைப்பற்றிப் பின்னால் கவனிப்போம்.

மாணிக்கவாசகம் பிள்ளை ஒரு நாள் தன் கழனிகளைப் பார்வையிட்டு வரக் குதிரையேறிச் சென்று திரும்பிவரும்பொழுது அஸ்தமித்துக் கொஞ்சநேர மாகிவிட்டது. குதிரை எதையோ கண்டு மிரண்டு திடீரென்று துள்ளியோடவே மாணிக்கவாசகம் பிள்ளை கீழே விழுந்துவிட்டார். அங்கு கிடந்த கூரிய கற்களில் ஒன்று, தலையில் பொத்துக்கொண்டது மன்றி மார்பிலும் அடி பலமாகத் தாக்கிற்று. எனினும், சற்று சமாளித்துக்கொண்டு மறுபடியும் குதிரையேறி வீட்டிற்குத் திரும்பினர். வீடு வந்துசேருவதற்குள் குளிருஞ் சுரமும் கண்டு அதே வியாதியாகக் கிடந்து மண்டையில் பட்ட காயம் ஆறுமலும் மார்புவலி நீங்காமலும் மாணிக்கவாசகம் பிள்ளை இரண்டு மாதங்கட்குள் இறந்தார். அவருடைய மனைவி குணவதி தன் பிராணபதியின் பிரிவாற்றாமையால் கொஞ்சநாட்களுக்குள் விண்ணுல கெய்தினள். ஆகவே இரத்தினமும் தன் தாய் தந்தையரை இழந்து தனித்து நிற்கிறான்.

இவ்வாறாக வடக்கு மாசிவீதியில் நாம் குறிப்பிட்ட மூன்று மாளிகைகளில் கீழ்ப்புறமுள்ளதில் இரத்தினமும், மத்தியிலிருப்பதில் இரஞ்சிதமும், மேல்பக்கத்திலிருப்பதில் மதனகோபனும் வசித்து வருகிறார்கள். முன் கூறின விவாகம் அச்சமயம் நின்று விட்டதெனினும் இப்பொழுதாவது இரஞ்சிதத்தைத் தான் மணந்து கொள்ளவேண்டுமென்பது மதனகோபனின் எண்ணம். ஆனால் இரஞ்சிதம் இவனைக் கண்ணெடுத்துக்கூடப் பார்ப்பதில்லை. அவள் தன் மனதை முற்றும் இரத்தினத்திற்குத் தத்தஞ் செய்து விட்டிருக்கிறாள். இரத்தினத்திற்கோ என்றால் விவாகத்தைப்பற்றிய எண்ணமே கிடையாது. காதலென்பதையும் இன்னதென்றறியான். அவனுடைய தந்தை இறந்தபின் தான் கலாசாலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டுக் குடும்பபாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிதாயிற்று தன் பிதா செய்துவந்த வர்த்தகத்தை நழுவவிடாது மேன்மேலும் விருத்திக்குக்கொண்டு வந்தான். வீண்காலம் ஒரு சிறிதும் போக்கான். கருமமே கண்ணாக இருப்பான். ஆனால் உலக அனுபவமட்டும் சிறிது போதாதென்று சொல்லவேண்டியிருக்கிறது. எவரையும் எளிதில் நம்பக்கூடிய சுபாவம் அவனிடமுண்டு.

ஒருநாட் காலை இரத்தினம் மேன்மாடியில் தனியாக உட்கார்ந்து கொண்டு இருக்கையில் ஒரு கணக்குப் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு ஏதோ எழுதுவதும் அதை அடிப்பதும் மறுபடியும் வேறொன்று வரைவதும் பின் அதையும் அடிப்பதுமாக ஒருமணி நேரமிருந்தான். அச்சமயம் யாரோ மேலேறிவரும் காலடிச் சப்தங்கேட்டு நோட்டுப் புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டுக் கதவண்டை வந்தான் "ஆகா! இரஞ்சிதம்! நீயா? யாரோ வருகிறாப் போலிருக்கிறதே என்று நினைத்து எழுந்து வந்தேன். உன் வீட்டிற்கு வரவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது நீயே இங்கு வந்துவிட்டதால் மிக்க சந்தோஷமாயிற்று. உள்ளே வா. ஒருமணி நேரமாக இந்தக் கணக்கைப் பார்க்கிறேன் ஒருமுறையேனும் சரியாக வருவதாயில்லை. நீ கொஞ்சம் அதைப் பார்" என்று சொல்லிக் கணக்குப் புஸ்தகத்தை யெடுத்துக் கொடுக்க இரஞ்சிதம் அதைப் பெற்று, "அத்தான்! தங்களால் முடியாததை நான் எவ்வாறு சரி செய்யப் போகிறேன். ஏதோ என்னால் இயன்றமட்டும் பார்க்கிறேன்" என்றுரைத்து இரண்டொரு நிமிஷங் கடந்தபின் அப் புஸ்தகத்தைத் திருப்பிக் கொடுத்து, "அத்தான் இப்பொழுது சரியாக ஆயிற்றா என்று பாருங்கள்" எனக் கூறவே, இரத்தினம் ஆச்சரியத்துடன் அதைப்பெற்றுப் பார்த்து, "பார்த்தாயா! என்னால் ஒருமணி நேரம் பார்த்தும் முடியாத கணக்கை ஒரு நிமிஷத்தில் சரிப்படுத்தி விட்டாய். உன்னைப்போன்ற ஒரு குமாஸ்தா எனக்குக் கிடைத்தால் மிக்க நலமாயிருக்கும்" என்று சொல்லிக் கொண்டே புஸ்தகத்தை மேஜையின்மீது வைத்தான். "நான் இருக்கும் பொழுது தங்களுக்குக் கணக்குப்பிள்ளை எதற்கு? என்னை மணஞ் செய்துகொண்டால் இந்த வேலையெல்லாம் நானே செய்வேன்" என்று இரஞ்சிதம் தன் மனதிற் சொல்லிக்கொண்டாள்.

இரத்தினம்:—"இரஞ்சிதம்! காலையில் ஏதேனும் ஆகாரமாயிற்றா?

இரஞ்சிதம்:—அத்தான்! இன்னுமில்லை தாங்

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு மெண்ணிய தேயத்துச் சென்று.

களே இன்னும் ஒன்றுஞ் செய்யாம லிருக்கும் பொழுது எனக்கென்ன அவசரம்?

இரத்.—இரஞ்சிதம்! சுய நலமே கருதினவனும் என் வேலையைக் கவனித்தேனே யன்றி இங்கு நீ வந்ததின் காரணத்தைக் கேட்க மறந்துவிட்டேன். அதற்கு என்னை நீ மன்னிக்கவேண்டும்.

இரஞ்:— அத்தான்! தாங்கள் என்ன குற்றத்தைச் செய்துவிட்டீர்கள் நான் மன்னிப்பதற்கு? தங்களைப் பார்த்துப் போகலாமென்று வந்தேனே ஒழிய விசேஷமான காரிய மொன்றுமில்லை.

இரத்:—உன் நிலைமையை நினைக்கும் பொழுது மிக்கப் பரிதாபமாயிருக்கிறது. மாமா அவர்கள் கொஞ்சங்கூடப் பின் ஆலோசனையின்றிச் சொத்து முழுவதையும் அப்பாங்கியில் வைத்துவிட்டார். அத்தகைய திரண்ட செல்வம் முற்றும் அழிந்து, வீடொன்றே மீதி நிற்பது. என்ன செய்யலாம்! எல்லாம் ஆக்கியோன் செயல். பாட்டியும் இல்லாமலிருந்தால் உன் கதி என்னவாகும்.—இரஞ்சிதம்! உனக்கொன்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதை வேறு விதமாக நினைத்துவிடாதே. நீயோ புஷ்பவதியான பெண். இன்னும் விவாகமாகவில்லை. நானும் கலியாணமில்லா வாலிபன். நீ இங்கு தனியாக வருவதைப் பார்த்தால் பலர் பலவேறு எண்ணங்களைக் கொள்ளக்கூடும். உலக நிந்தைக்குப் பாத்திரராக வேண்டிவரும். ஆதலின்—என்று சொல்லி முடிப்பதன்முன்,

இரஞ்:—(கண்களில் நீர் பெருக) நான் இனிமேல் இங்கு வரக்கூடாதென்று சொல்லுகிறீர்களாக்கும். இப்பாவி பிறந்து சொத்தெல்லாம் அழிந்தது. தாயையுந் தந்தையையும் பறிகொடுத்தாள். இம்மூதேவி நம் வீட்டில் கால் வைத்தால் எங்கு இலட்சுமி ஓடிவிடுகிறாளோ என்று பயப்படுகிறீர்கள் போலும். நான் இனிமேல் வாராமற் பார்த்துக் கொள்ளுங்களேன், என்று சொல்லி அழுதாள்.

இரத்:—இரஞ்சிதம்! நீ நன்றாக வாசித்த பெண்ணாயிருந்தும் நான் சொன்னதின் கருத்தை அறிந்துகொள்ளாமலும், நான் சொல்ல வேண்டி யிருந்ததை முற்றும் கூறுமுன் தடுத்தும் இவ்வாறு நீ சொல்லி அழுவது நன்றாயிருக்கிறதா? நீ இங்கு வரும்போதெல்லாம் பாட்டியையும் கூட அழைத்துக் கொண்டுவா என்று சொல்ல நினைத்தேனே ஒழிய நீ இங்கு வரக் கூடாது என்றுரைக்க நான் எண்ணவில்லை,—என்று சமாதானம் செய்தான்.

இரஞ்:—அத்தான்! என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் கூறி முடிப்பதன்முன், அறிவின் குறைவால் நான் அதை வேறு விதமாக முடித்துத் தங்கள் மனதைப் புண்ணாக்கிவிட்டேன். தாங்கள் சொன்னது உண்மையேயாகும். இனிமேல் அவ்வாறே செய்கிறேன். ஒன்றிருக்க மற்றொன்றை நினைத்து அழுவது பெண்களின் இயல்பு. அத்தான்! நான் சென்று வருகிறேன்" என்று சொல்லிவிட்டு இரத்தினம் பதில் பகருமுன்னம் வெளியில் வந்து கீழிறங்கித் தன் வீட்டிற்குச் சென்றாள்.

அங்கு கூடத்தில் அவளுடைய பாட்டியும் மதனகோபனும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததை அறிந்தும், பார்க்காதவள்போல் தலை குனிந்து விரைவாகச் சென்று மெத்தைப்படியேறும் சமயம் மதனகோபன் பார்த்து, "இரஞ்சிதம்! நான் உன் வீட்டிற்கு வந்தும், பார்த்தும் பார்க்காதவள்போலப் பேசாமற் போகிறாயே" என்றான்.

இரஞ்:—(அப்பொழுதுதான் பார்த்தவள் போல் அபிநயித்து) தாங்களா! வேறு யாரோ பேசிக்கொண்டிருக்கிறாப் போலிருக்கிறதென்று நினைத்தேன். மன்னிக்க வேண்டும். பாட்டியுடன் பேசிக் கொண்டிருங்கள். எனக்குக் கொஞ்சம் மேல்மாடியில் வேலையிருக்கிறது,—என்று சொல்லிப்போனாள்.

மதன:—இரஞ்சிதம்! உன்னிடத்தில் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேசவந்திருக்கிறேன். இங்குவந்து கொஞ்சம் உட்கார்.

இரஞ்:—எத்தகைய விஷயமா யிருப்பினும் பாட்டியிடத்திலேயே சொல்லலாமே. அப்படி என்னிடமே சொல்லவேண்டு மென்றிருந்தால் சொல்லுங்களேன். இங்கிருந்தாலே எனக்குக் காது கேட்கும். ஒருசமயம் இரகசியமான விஷயமாயிருந்த போதிலும் குற்றமில்லை. நம் மூவரைத் தவிர இங்கு வேறு யார் இருக்கிறார்கள்?

மதன:—(தன் கோபத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு) ஆகவே நீ இங்கு வரமாட்டாய்?

பாட்டி:—உன் எதிரில் வரக்கூச்சப்படுகிறாள் போலிருக்கிறது.

மதன:—அப்படியா இரஞ்சிதம்!

இரஞ்:—அவ்விதமே வைத்துக்கொள்வது.

மதன:—இரஞ்சிதம்! உன் சாப்பாட்டுச் செல

விற்கு ஏதேனும் கொடுத்துவிட்டுப் போகலாமென்று வந்திருக்கிறேன்.

இரஞ்:—பேஷ்! எங்களைப் பார்த்தால் உங்களுக்கெல்லாம் அவ்வளவு கேவலமாகி விட்டது. என் தந்தையின் ஆஸ்தி முழுவதும் அழிந்து விட்டதெனினும் தாம் நினைப்பதுபோல் அவ்வளவு கேவல நிலைமைக்கு நாங்கள் வந்துவிடவில்லை. என் தந்தை எனக்கு வேண்டு மவ்வளவு வைத்துவிட்டே போயிருக்கிறார். எங்கள் விஷயத்தில் நீர் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டதற்கு வந்தனமளிக்கிறேன்.

மதன:—இப்பொழுது உனக் கொன்றும் தேவையில்லை யெனினும் எப்பொழுதேனும் வேண்டியிருந்தால் என்னைக் கேட்பாயாக.

இரஞ்:—தங்களைக் கேட்க வேண்டிய சமயமே நேரிடாது. நீர் இதைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டியதில்லை. (என்று சொல்லிச் செல்ல ஆரம்பிக்க)

மதன:—(தடுத்து) இன்னுமொரு விஷயம். உங்கள் இருவரையும் நம் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்லலாமென்ற உத்தேசம். ஆண் துணையின்றித் தனியாக ஏன் இருக்கவேண்டும்? இதற்கு என்ன சொல்லுகிறாய்?

இரஞ்:—தங்கள் யோசனை யென்னமோ நல்ல யோசனைதான். எனினும் எனக்குப் பிறருடைய வீட்டில் வந்து குடியிருக்க இஷ்டமில்லை. பாட்டி வருவதாயிருந்தால் தாம் அழைத்துக் கொண்டு செல்லலாம்,—என்று சொல்லி மேல் மாடிக்குச் சென்றுவிட்டாள்.

மதனகோபன் தனக்கு வந்த கோபத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டு பாட்டியிடம் விடைபெற்றுத் தன் வீட்டிற்குத் திரும்பிவந்தான்.

இரஞ்சிதத்தின் மனதை எவ்விதமேனும் தன்பால் திருப்ப வேண்டுமென்னும் மனவுறுதியுடன் சென்ற மதனகோபனின் எண்ணம் ஒரு சிறிதும் பலிதமாகாமல் தன் மாளிகைக்குத் திரும்பிவந்து மனச் சோர்வுடன் மஞ்சத்தில் சாய்ந்தான். சற்று நேரம் பொறுத்து எழுந்தான். அங்குமிங்கும் உலாவினான். மறுபடியும் மஞ்சத்தின்மீது உட்கார்ந்தான். கன்னத்திற் கை கொடுத்துக் கொஞ்சநேரம் யோசித்தான். "இவளுக்கு நம்மீது பிரியமுண்டாகாமலிருக்கிறதற்குக் காரணம் என்ன? இரத்தினத்தின் வீட்டிற்கு அடிக்கடி செல்கிறவள் இங்கு ஏன் வரக் கூடாது! (மௌனம்) ஒரு சமயம் அவன்மீது இவள் காதல் கொண்டிருக்கிறாளோ? ஆகா! என்ன மூடத்தனமாக இருந்துவிட்டேன். இந்த எண்ணம் எனக்கு இதுவரையும் உண்டாகவில்லையே. இருப்பினும் அவன் என்னைவிட எந்த விஷயத்தில் சிறந்தவன்? ஒன்றையும் காணோமே. ஒருக்கால் இவளுக்கு நம் நடவடிக்கை பிடிக்கவில்லையோ? ஆம் அவ்விதந்தான் இருக்கவேண்டும். அவனையும் நம் வழியில் திருப்பித் தாசியில்லம் சேர்த்துவிட்டால் இந்தச் சிறுமி நம் காலில் தானே வந்து விழவேண்டும். இவளுக்குப் போக்கிடம் வேறு ஏது? அப்பொழுதல்லவோ இவள் கர்வத்தை அடக்குவேன். அடடா! என்ன அகங்காரம்! இரஞ்சிதம்! மதனகோபனின் சாமர்த்தியத்தை இன்னும் நீ அறியவில்லை. சரி; ஆகட்டும். இரத்தினத்தை இவ்வழியில் திருப்புவது எனக்கு ஒரு பெரிய காரியமா? ஒரு நிமிஷத்தில் செய்துவிடமாட்டேனா! நமது நண்பர்களில் எவனேனும் ஒருவனை ஏவிவிட்டால் போதுமானது. எனினும் இரத்தினம் நற்குணம் வாய்ந்த புத்திமானா யிருப்பதினால் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே காரியத்தை நடத்தவேண்டும். தக்க ஆசாமியைக்கொண்டு செய்யவேண்டும். இந்த வேலையைச் சாமர்த்தியமாகச் செய்யக்கூடிய பேர்வழி யார்? ஆம்; அவன்தான் சரி" என்று நிச்சயித்துக்கொண்டு வெளியிற் புறப்பட்டான்.

இதற்கடுத்தநாட்காலை சுமார் எட்டு மணிக்குத் தன் வர்த்தக மளிகைக்குப் புறப்பட்ட இரத்தினம் வழக்கம்போல "மஹாராஜா" காபிகிளப்புக்குள் நுழைந்து அங்கு போட்டிருந்த நாற்காலிகளொன்றில் உட்கார்ந்தான். கிளப்புக்காரனும் அவனுக்கு வேண்டியதைக் கொண்டுவந்து மேஜையின்மீது வைத்தான். அச்சமயத்தில், சுத்தமான வஸ்திரந்தரித்து பட்டங்கியணிந்து அழகான சரிகைத் தலைப்பாகையுடன் கையில் குடையொன்றைப் பிடித்தவனும் சுமார் முப்பது வயது என்று மதிக்கக்கூடிய ஒருபுருஷன் அங்கு வந்து இரத்தினத்திற்கு எதிர்ப்புறமிருந்த நாற்காலியில் உட்கார்ந்து "ஐயர்! என்ன இருக்கிறது?" என்று அங்கு நின்றுகொண்டிருந்த வேலைக்காரர்களில் ஒருவனைக் கேட்டான். உடனே அவ்வேலையாள் "பூரி, உருளைக்கிழங்கு, ரவா தோசை, ரவா இட்டிலி, சேமியா இட்டிலி, சாதா இட்டிலி, ரவா பொங்கல், உப்புமா, வாங்கிப்பாத், வடை இருக்கின்றன. தங்களுக்குத் தேவையானது எது?" என்று கேட்க, புதுமனிதன் (அவன்

பெயர் தெரியும்வரை அந்நியன் என்றழைப்போம்) "நான்கு பூரி, உருளைக்கிழங்கு கொண்டு வாரும்...ஐயர்! எனக்குப் பிளேட்டில் வேண்டாம். இலையில் கொண்டுவாரும்" என்று சொன்னான். இதைக் கேட்டதும் இரத்தினம் இவ்வந்நியனை ஏற இறங்கப்பார்த்து "தாம் இந்த ஊரரல்ல போலும்" என்றான்.

அந்நியன்:—ஐயா! நான் இந்த ஊரானல்லனென்பதைத் தாம் எவ்விதந் தெரிந்துகொண்டீர்?

இரத்தினம்:—தாம் இப்பொழுது இலையில் கொண்டுவரும்படி ஐயருக்கு உத்திரவளித்ததிலிருந்து.

அந்:—ஆகவே, இவ்வூராருக்கு எச்சில் தீட்டென்பது கிடையாதென்றேற்படுகிறது.

இரத்:—அது எவ்விதம்?

அந்:—இப்பொழுது தாம் அந்த ஸ்பூனினால் உப்புமாவை எடுத்து வாயில் வைக்கும்போது பாதி ஸ்பூன் உள்ளே போய்விடுகிறது. அதிலேயே மறுபடியும் உப்புமாவை எடுத்துச் சாப்பிடுகிறீர்கள். இங்கிருக்கும் ஆட்கள் இதைச் சரியாகக் கழுவுகிறார்களா? தண்ணீர் நிரப்பி வைத்திருக்கும் ஒரு பக்கெட்டில் போட்டு எடுத்துவிடுகிறார்கள். அந்த சலத்தில் இந்த கிளப் பிறகு வரக்கூடியவர்களுடைய எச்சிலெல்லாம் இருக்கிறது. அதில் இவைகளைப்போட்டுக் கழுவுவதைவிடத் துணிகொண்டு துடைத்துவிடுவது மேலாகும். இந்தப் பிளேட்டிலும் ஸ்பூனிலும் சாப்பிடுவது மனத்திற்கு அருவருப்பைத் தருவது மாத்திரமேயன்றி நோயில்லாதவனுக்கு நோயையும் உண்டுபண்ணும். தாம் சாப்பிடுவது போல் காச வியாதிக்காரனொருவன் சாப்பிட்டு அதே ஸ்பூனில் மற்றொருவன் சாப்பிட்டால் அவனுக்கு அந்த வியாதி உண்டாகுமல்லவோ. இது எனக்கு மாத்திரந் தெரிந்ததொரு புது விஷயமென்று சொல்லவில்லை. தற்கால நாகரிகத்தில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் இதை உணர்வர். எனினும் அதைக் கவனித்தல் அநாகரிகம் என்று கருதித் தள்ளிவிடுகிறார்கள். காபியை எவனேனும் தூக்கிக் குடித்தால் "இவன் யாரோ குப்பக்காட்டான் போலிருக்கிறது" என்று சொல்லக்கூடிய நாகரிகமா யிருக்கிறது. பாதிப் பாத்திரத்தை வாயில் நுழைத்துக்கொண்டு சாப்பிடுவதுதான் நாகரிகமாகக் கொண்டாடப் படுகிறது. நன்மை தீமை எதுவென்றறியா உலகமாகிவிட்டது இது,—என்று சொல்லவும் ஐயர் பூரியைக் கொண்டுவந்து வைக்க சாப்பிட ஆரம்பித்தான்.

இரத்:—ஐயா தங்களுக்கு எந்த ஊர்? என,

அந்:—நான் இருப்பது மெட்ராஸ் (சென்னபட்டினம்) என்றான்.

இரத்:—இந்த அநாசாரங்களுக்குத் தாய் வீடான சென்னையின் வாசியாகிய தமக்கே இவைகள் அருவருப்பைத் தந்தன வென்பது ஆச்சரியமாக விருக்கிறது எனினும் தம் போன்றாரைப் பார்க்க எனக்குச் சந்தோஷமே. நிற்க, தாம் இங்கு என்ன காரியமாக வந்திருக்கிறீரோ? என,

அந்:—இங்கு ஒருவரைப் பார்த்துப் போகலாமென்று வந்தேன். என் துர்ப்பாக்கியத்தின் தன்மையாக அன்னவர் இறந்து இரண்டு வருடங்கள் கடந்தன வென்பதைக் கேள்விப்பட்டேன். மகா புண்ணிய சீலர்! உத்தமோத்தமன்! நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவர்! பரோபகாரி! நல்லவர்களா யிருப்போர் நெடுநாட்களுக் கிருந்து வாழ்வதில்லை,—என்று சொல்லி மிகவும் துக்கங் கொண்டவனைத் தோன்றி கொஞ்ச நேரம் மௌனமாயிருந்து பின்,—அன்னவருக்குள்ளது ஒரே புதல்வனும். அவருடைய பெயர் இரத்தினம பிள்ளையாம். அவர் எத்தன்மை வாய்ந்தவரோ அறியேன். அவரைக் குழந்தைப் பருவத்தில் பார்த்திருக்கிறேனே யன்றி வயது வந்தபின் பார்த்ததில்லை. அவரையாவது பார்த்துவிட்டுப் போகலாமென்ற உத்தேசம்,—என்று சொல்லி "ஐயர்! ஒரு கப்பு காபி கொண்டுவாரும்" என உத்திரவிட்டான்.

இரத்:—(ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்து) ஐயா! தாம் பார்க்க வந்தவருடைய பெயரைத் தயவுசெய்து சொல்லவேண்டும். இவனுக்குச் சம்பந்தப்படாத விஷயத்தை எதற்காகக் கேட்க வேண்டுமென்று யோசிக்கக் கூடாது என விண்ணப்பித்தான்.

அந்:—அதனாற் குற்றமில்லை. இவ்வளவு நேரம் நாமிருவரும் பேசிக் கொண்டிருந்ததினால் நாம் சிநேகராகி விட்டோம். ஆதலின் உம்மிடம் எதை வேண்டுமென்றாலும் சொல்லுவேன். அவருடைய பெயர் மாணிக்கவாசகம் பிள்ளை,—என்று சொல்லிக் காப்பியைக் குடித்தான்.

இரத்:—(தன் சந்தேகம நீங்கினவனாய்) ஐயா! தமக்கு யாதொரு ஆக்ஷேபணையு மில்லையெனில் தாம் கோரிவந்த காரியமின்னதென உரைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்—என,

அந்நி:—நண்பரே! இதை வேறு எவரேனுங் கேட்டிருந்தால் சந்தேகங் கொண்டிருப்பேன். உம்மைப் பார்த்தது முதல் உம்மீது ஒரு விதமான பிரிய மேற்பட்டு விட்டதினாலும், தாங்களும் நற்குண சீலராகத் தோன்றுகிறதினாலும் தாம் கேட்டதற்குப் பதில் சொல்ல யாதொரு தடையுமில்லை. முதலிலிருந்து சொன்னாலன்றோ தங்களுக்கு விளங்கும். சுமார் பதினைந்து வருடங்கட்குமுன் நாங்கள் இந்நகரில் வசித்திருந்தோம். என் தந்தை நடராஜபிள்ளை என்பவர் ஏதோ சொற்ப வியாபாரஞ் செய்து கொண்டிருந்தார். என் பிதாவும், நான் சொன்ன மாணிக்கவாசகம் பிள்ளையும் ஆப்த மித்திரர்கள். என் தந்தையின் வர்த்தகம் சற்று செவ்வனே நடந்துவர அதை இன்னும் விருத்திக்குக்கொண்டு வரக் கருதி அவர் நண்பரிடம் கொஞ்சம் திரவியம் கடனாகக் கேட்டார். அவ்வுத்தமன் கடன் வாங்கிச் செய்வதைவிட நாம் இருவரும் ஒன்று சேர்ந்து வியாபாரத்தை நடத்துவோம் என்று சொல்லி வேண்டுமான பணத்தையுங் கொடுத்தார். என் தந்தையும் அதைப் பெற்றுக்கொண்டு பெரிய மளிகையொன்று வைத்து நடத்திவந்தார். இவ்வாறாக இருவரும் கூட்டு வியாபாரம் சுமார் ஐந்து வருடங்கள் செய்துவந்தார்கள். திரண்ட ஊதியமும் கிடைத்தது. இவ்விதமிருக்க என் தந்தை நோய்கண்டு இறந்துவிட்டார். பிறகு நான் என் தாயை அழைத்துக்கொண்டு சென்னைக்குச் சென்று என் பாட்டனார் வீட்டில் அன்று முதல் நாங்களிருவரும் வசித்துவருகிறோம். என் பாட்டனார் பெரிய வர்த்தகராதலின் அவருடனிருந்து வியாபார விஷயங்களைக் கொஞ்சம் கற்றுக்கொண்டேன். சென்றமாதம் என் தாய், 'கோபாலா! நாம் மதுரையி லிருக்கும்பொழுது உன்தந்தை கூட்டுவியாபாரஞ் செய்து கொண்டிருந்த சங்கதி உனக்குத் தெரியுமல்லவா. அவர் இறந்தவுடன் அதைப் பிரித்துக்கொள்ளாமலுங்கூட வந்துவிட்டோம். எனினும் மாணிக்கவாசகம்பிள்ளை மகா உத்தமராகையினால் அவர் நமக்கு மோசஞ் செய்யமாட்டார். நம் விலாசத்தைத் தெரிவித்திருந்தால் கடிதம் போட்டிருப்பார். நானும் மறந்துவிட்டேன்; நீயும் கவனிக்கவில்லை. நாம் இங்குவந்து சுமார் பத்து வருடங்களாகின்றன. அவர் உயிருடன் இருந்தால் நமக்கு யாதும் குறைவில்லை. ஆதலின் நீ மதுரைக்குச் சென்று வா' என்று சொன்னார்கள். அதற்கிசைந்து நான் வந்திருக்கிறேன். அன்னவர் உயிர் துறந்தார் என்று கேள்விப்படவே என் பாதிஉயிர் போய்விட்டது திரும்பிவிடலாமென்றுங் கூட யோசித்தேன். ஏதோ வந்தது வந்தோம்; அவருடைய குமாரனையாவது பார்த்துவிட்டுப் போவோம் என்று பிரயாணத்தை நிறுத்தினேன். நண்பரே! இப்பொழுது என் வரலாறு முற்றும் தங்களுக்கு விளங்கியிருக்கு மென்று நினைக்கிறேன். என் இரகசியம் முற்று முணர்ந்துகொண்ட தாம் யாவர் என்பதும் தங்களுடைய நாமதேயம் இன்னதென்பதும் தெரியவில்லையே? என்று வியப்புடன் கேட்டான்.

இரத்:—என் பெயர் தங்களுக்குத் தெரியும். தாம் இப்பொழுது சொன்ன ஆசாமிதான் நான்.

அந்:—எனக்கு விளங்கவில்லையே?

இரத்:—என் பெயர் இரத்தினம், என்று சொல்லவே,

அந்நி:—(எழுந்து சென்று அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு) மாணிக்க வாசகம் பிள்ளையுடைய குமாரர் இரத்தினம் பிள்ளையோடா நான் இதுகாறும் பேசிக்கொண்டிருந்தேன். என்ன பிரதர்! இதைத் தாம் முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா? எனக்கென்னமோ தாம் கேட்ட கேள்விகளால் அந்த சந்தேகம் உண்டாயிற்று. எனினும் பார்ப்போம் என்றிருந்தேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல் தம் இருப்பிடந்தேடி வரவேண்டுமென்றிருக்கத் தாமே எதிர்ப்பட்டு விட்டீர். நிரம்ப சந்தோஷம். தாம் இப்பொழுது எங்குச் செல்ல வேண்டுமென்ற உத்தேசத்துடன் புறப்பட்டு வந்திருக்கிறீர்களோ?

இரத்:—நான் மளிகைக்குச் செல்லவேண்டுமென்ற உத்தேசத்துடன் வந்தேன். வேண்டுமென்றால் வீட்டிற்குப் போகலாம். தம்முடைய பெயர் கோபால பிள்ளையோ என்று கேட்க,

கோபால பிள்ளை:—ஓகோ நான் சொன்ன கதையிலிருந்து இதைத் தெரிந்து கொண்டீர்களாக்கும். முதலில் தங்கள் வீட்டிற்குச் செல்வோம். ஐயர்! எங்களுடைய கணக்கு என்னவாயிற்று என்று கேட்டுக் கொண்டே மணி பாக்ஸை எடுத்தான்.

இரத்:—தாம் கொடுக்க வேண்டியதில்லை. 'அகௌன்டில்' எழுதிவிடுகிறேன்.

கோபா:—என்ன பிரதர்! இவ்வளவு வேற்றுமைப்படுத்திப் பேசுகிறீர். இங்கு எழுதிவைத்

தாலென்ன ? இப்பொழுது கொடுத்து விட்டால் என்ன? எல்லாம் ஒன்றுதானே. தாங்கள் அகௌண்டில் கண்டிப்பாய் எழுதவேண்டுமென்றால் தம்முடைய கணக்கை மாத்திரம் எழுதுங்கள். என் கணக்கை நான் கொடுத்து விடுகிறேன். ஐயர் ! என் கணக்கு எவ்வளவு வாயிற்றென்று சொல்லும்.

இரத் :—பிரதர் ! கோபித்துக் கொள்ளவேண்டாம். என் கணக்கையும் சேர்த்தே கொடுத்து விடுங்கள்.

கிளப்புக்காரனுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு இருவரும் புறப்பட்டார்கள். வழியில் "தாம் இங்கு வந்து எவ்வளவு நாட்களாயின ?" என்று இரத்தினம் கேட்க, "நேற்றுத்தான் வந்தேன். ஆவணி வீதியில் மாணிக்கம் பிள்ளை என்றொருவர் இருக்கிறார். நான் முன் இங்கிருந்த பொழுது அவரை யறிவேன். சென்னைக்குச் சென்ற பின்னுங்கூட அவருக்கும் எனக்கும் கடிதப்போக்கு வரத்துக்கள் உண்டு. அங்கு வந்தால் என்னைப் பார்க்காமல் திருப்பிவரமாட்டார். அதிகப் பணம் படைத்தவரல்லரேனும் மகா நல்லவர். அவர் வீட்டில்தான் இறங்கியிருக்கிறேன்" என்று சொல்லி முடிக்கவும், இரத்தினத்தின் வீடும் சமீபிக்கவே இருவரும் உள்ளே சென்று மேல்மாடிக்குப் போனார்கள். இருவரும் இரண்டு சோபாக்களில் உட்கார்ந்துகொண்டு கொஞ்ச நேரம் ஏதேதோ பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசுவாராயினர். வேலையாள் சமையலாயிற்றென்று சொல்லவே, இருவரும் எழுந்து ஸ்நானஞ்செய்து கொண்டு சாப்பிட்டார்கள். பிறகு மேல்மாடிக்கு வந்து பின்வருமாறு சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

இரத் :—ஆகவே தாம் இங்கேயே இருந்துவிடுவதாக நிச்சயித்துவிட்டீர் போலும்.

கோபா :—அந்த எண்ணத்துடன் இங்கு புறப்பட்டு வரவில்லை யெனினும் தாம் கூட்டுப் பிரிக்கக்கூடாது என்று சொல்வதினால் இங்கேயே தங்கிவிடுவது நலம் என்பது என் எண்ணம்.

இரத் :—மிக்க சந்தோஷமாயிற்று. எனக்கு இவ்வியாபார விஷயத்தில் அதிக அனுபவமில்லாததினாலும், தமக்கு வியாபார இரகசியங்கள் கொஞ்சம் தெரிந்திருப்பதினாலும் தாம் என்னுடன் இருந்து வியாபாரத்தை நடத்தவேண்டியது அவசியமா யிருக்கிறது என்றான்.

கோபா :—அதற்கென்ன பிரதர், அவ்விதமே செய்வோம். இப்பொழுது எவ்வளவு ஆட்களை வைத்துக்கொண்டிருக்கிறீர் ?

இரத்:—நான்கு கணக்குப் பிள்ளைகளும் நான்கு வேலையாட்களும் இருக்கின்றனர்.

கோபா:—ஏது பிரதர் ! தாம் சம்பாதிப்பது இவர்களுடைய சம்பளத்திற்கே சரியாகப் போகும்போ லிருக்கிறதே. இந்நான்கு குமாஸ்தாக்களையும் டிஸ்மிஸ் செய்யவேண்டியது உம்முடைய முதல்வேலை. பிறகு நான்கு ஆட்களில் மூவரை வீட்டுக்கு அனுப்பிவிடலாம். மளிகை வர்த்தகத்தில் வேலையாட்கள் எதற்கு? வேண்டும் சமயங்களில் கூலியாட்களை நியமித்துக் கொள்ளலாம். குமாஸ்தாக்களுடைய வேலையெல்லாம் நானே பார்த்துவருகிறேன். எனக்கு ஒரு பைசா வீண் செலவு செய்வதென்றால் பிடிக்காது.

இரத்:—நான்கு பெயர்களுடைய வேலையைத் தாம் ஒருவரே பார்ப்பதென்றால் கஷ்டமல்லவா? ஆதலின் தமக்கு உதவியாக ஒருவனையேனும் வைத்துக்கொள்வது நலம். தவிர வேலையாட்கள் வேண்டும்பொழுது கிடைப்பது சிறிது கஷ்டமானதினாற்றான் நால்வரையும் வைத்துக்கொண்டிருக்கிறேன். வேண்டுமானால் இருவரை யனுப்பி விடுவோம்.

கோபா:—வேலையின் சூக்ஷ்மம் அறியாதவர்கட்கே வேலையாட்கள் அதிகம் வேண்டும். ஒரு குமாஸ்தாவுக்கு வேலையின்றி அவன் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டிவரும். வேலையின் நுட்பத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டால் நால்வர் செய்து கொண்டிருந்த வேலையை இவன் ஒருவனே ஒரு நொடியில் செய்து விடுவான். பின் நமக்கு என்னவேலை ? உண்பதும் உறங்குவதும் சரி. தம்மிஷ்டமதுவா யிருக்கும்பொழுது நான் தடுத்துக் கூறுவது சரியாக இல்லை. எனினும்,

இரத்:—வியாபார விஷயத்தை ஒருவாறு முடித்துவிட்டோம். இனி தாம் தங்குவதற்கு வசதியான வீடொன்று பார்க்கவேண்டாமா ?

கோபா:—தற்சமயம் வீடுபார்க்க வேண்டிய நிமித்தியமில்லை. மாணிக்கம்பிள்ளை வீட்டிலேயே இருக்கலாம்.

இரத்:—பேமிலி (family)யை அழைத்துக் கொண்டு வருவதென்றால் வீடு பார்க்கவேண்டுமென்று சொன்னேன். அவ்விதமின்றித் தாம் தனித்திருப்ப தென்றால் இங்கேயே இருக்கலாம். எல்லா விஷயத்திற்கும் சௌகரியமா யிருக்கும்.

கோபா :—எனக்குத் தம்முடைய வீட்டில் இருப்பதற்கு யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. ஆனால் மாணிக்கம் பிள்ளை இதற்கிசைய மாட்டாரென்பது என் சந்தேகம்.

இரத் :—அவருக்கு வேண்டுமென்றால் நான் சொல்லிக் கொள்ளுகிறேன் என்று சமாதானம் சொல்லும்பொழுது, வேலையாள் வந்து “ யாரோ ஒருவர் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்” என்று சொல்ல, “ அவரை அழைத்துக் கொண்டுவா ” என்று உத்திரவிட்டான்.

கோபால பிள்ளையாற் கூறப்பட்ட மாணிக்கம் பிள்ளையைச் சேவகன் அழைத்துக்கொண்டு வந்துவிட்டுப் போனான்.

கோபா :—அடடா! தாங்களா! நான் இங்குதா னிருக்கிறேனென்பதை எவ்விதம் அறிந்து கொண்டீர் ? இதோ அந்தச் சேரில் உட்காருங்கள். பிரதர்! இவர்தாம் நான் சொன்ன மாணிக்கம் பிள்ளை என்பவர்.

இரத்:—அப்படியா ? நிரம்ப சந்தோஷம். உட்காருங்கள். தங்களைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். தங்களைப் பார்க்கவேண்டிய காரியங்கூட இருக்கிறது. அதற்குள் தாமே இங்கு வந்துவிட்டது மிக்க நலமாயிற்று.

மாணிக்கம் பிள்ளை :—கோபாலன் தங்களைப் பார்த்துவிட்டு வருகிறதாக என்னிடஞ் சொல்லிவிட்டுக் காலையில் புறப்பட்டு வந்தான். சாப்பாட்டிற்கு வருவானென்று பார்த்தேன், காணோம். இந்நேரம் வரையிலும் காத்துப் பார்த்தேன். வருவதாயில்லை. ஒரு சமயம் நம்முடன் சொல்லாமலுங்கூட சென்னைக்குப் புறப்பட்டு விட்டானோ என்னமோ. எதற்கும் தங்களைக் கேட்டுப் பார்ப்போம் என்று வந்தேன். அவனுக்குத் தக்க சிநேகிதரும் கூட்டாளிக்குக் கூட்டாளியுமான தாம் கிடைத்த பிறகு இனி எங்களை எதற்குச் சட்டை செய்யப் போகிறான்.

கோபா :—பார்த்துக் கொண்டீரா பிரதர்! கொஞ்சநேரம் காணாததற்கு இவ்வளவு தூரம் மனவருத்தப்பட்ட இவர், நான் இங்கேயே இருந்து விடுவதற்கு ஒப்புவாரா என்பது சந்தேகமாகத்தா னிருக்கிறது.

மாணி :—என்ன அது? இங்கேயே இருந்துவிடப் போகிறாயா ? பேஷ் ; நல்லவேலை செய்தாய். எழுந்திரு எழுந்திரு, என்று எழுந்தான்.

இரத் :—(தடுத்து) ஐயா! தாம் என்னை மன்னிக்கவேண்டும். தாம் இவருடைய நெருங்கிய சிநேகிதராகவும் அவரைப்பற்றி எல்லாம் தெரிந்தவராகவும் தோன்றுகின்றீர். அவருடைய தந்தையும் என் தந்தையும் இருந்தமாதிரி நாங்களும் கூட்டு வியாபாரஞ் செய்ய உத்தேசித்திருக்கிறோம் என்று சொல்ல,

மாணி :—அதை யார் வேண்டாமென்று சொன்னார்கள் ?

இரத்:—தயவுசெய்து நான் சொல்வதை முழுவதும் கேட்கவேண்டும். அத்தகைய உத்தேசங்களில் அவர் இங்கேயே குடியிருக்க வேண்டுமென்பது ஒன்று.

மாணி :—அது முடியவே முடியாத காரியம். என் வீட்டில் அதற்கு ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவனுடைய தாயாருக்கும் அது சமாதானமாய் இராது.

பிறகு இரத்தினமும் கோபால பிள்ளையுஞ் சேர்ந்து அதிக நேரம் அவனுக்குச் சமாதானஞ் சொல்லித் தங்களுடைய ஏற்பாட்டிற்கு ஒத்துக் கொள்ளும்படி செய்தார்கள். அச்சமயம் வேலைக்காரன் வந்து யாரோ இருவர் வந்திருக்கிறதாகச் சொன்னான். இரத்தினம் அவர்களை அழைத்து வரும்படி சொன்னதுமன்றிச் சீக்கிரத்தில் ஐந்து பெயர்களுக்குக் காப்பியும் பலகாரமும் தயார் செய்துகொண்டு வரும்படிக்கு உத்திரவளித்தான். கொஞ்சநேரத்திற்குள் இருவர் வந்தனர். அவர்களைப் பார்த்ததே கோபாலபிள்ளை எழுந்து “குட் ஈவனிங் (good evening) பிரதர், பொன்னுசாமி! அது யார் சிவஞ்ஞானமா? குட் ஈவனிங். உட்காருங்கள். (இரத்தினத்தைப் பார்த்து) இவர்கள் என்னுடைய பழைய சிநேகிதர்கள். இங்கு நானிருப்பது தெரிந்து வந்தீர்களா அல்லது பிரதர் இரத்தினம் பிள்ளையைப் பார்க்க வந்தீர்களா ?” என்று கேட்டான்.

பொன்னுசாமி:—நேற்றுத் தாம் இங்குவந்து இறங்கின டிரெயினிலேயே இராமனாதபுரஞ் சென்று திரும்பிவந்த நம் நல்லமுத்து, தம்மை நேற்று ஸ்டேஷனில் பார்த்ததாகச் சொல்லவே, தாங்கள் அநேகமாக மாணிக்கம் பிள்ளை வீட்டில் தான் இறங்கி யிருப்பீர்களென்ற நம்பிக்கையுடன் அங்கு நாங்கள் மூவருஞ் சென்று விசாரித்ததில் தாம் இங்கிருக்கும் சங்கதி தெரிந்து வரும் வழியில், யாரோ ஒருவர் நல்லமுத்தை அழைத்துக் கொண்டு சென்றார். நாங்கள் இருவரும் இங்கு வந்தோம். நல்லமுத்தும் வந்து விடுவார் என்றான்.

இரத்:—எது பிரதர்? தங்களுக்குத் தெரிந்த

வர்கள் இந்த ஊரில் அநேகர் இருக்கிறார்கள் போலிருக்கிறதே ?

மாணி :—இவ்வளவுதானு ; அவனுடைய சிநேகிதர்கள் ஒரு பெரும் பட்டாளமன்றோ. எல்லாம் போகப்போகத் தெரியும். அதற்காகத்தான் இவன் எங்கள் வீட்டிலேயே இருக்கட்டுமென்று சொன்னேன். தாம் கேட்கவில்லை.

இரத்:—இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம். இவர் மூலமாகவாவது எனக்கும் அநேகருடைய நட்புக் கிடைக்குமென்பதைப் பற்றிச் சந்தோஷங் கொள்ளுகிறேன்.

கோபா:—பிரதர்! இவர்களெல்லாம் என்னுடைய கிளாஸ் மேட்ஸ் (Classmates) வேறு விதமாக நினைத்துவிடவேண்டாம்.

வேலைக்காரன் காப்பியையும் பலகாரத்தையும் கொண்டுவந்து வைக்க எல்லோருஞ் சாப்பிட்டுக் கொண்டிருக்குஞ் சமயம், வீதியில் பாண்டு வாசிக்கும் சப்தத்தைக் கேட்ட கோபால பிள்ளை, "என்ன இது ? ஏதேனும் கல்யாண ஊர் கோலமா ?" என்று கேட்டான்.

மாணி:—இதிலிருந்து நீ சுத்தக் குப்பக்காட்டான் என்பது தெரிகிறது. டிராமா நோட்டீஸ் கொடுக்கிறவர்கள் வாசிக்கும் பாண்டிற்கும் விவாக ஊர்கோலத்தில் முழங்கும் பாண்டு வாத்தியத்திற்கும் பாரதூர வித்தியாசமிருக்கிறதே!

சிவஞ்ஞானம்:—இவர் பாண்டு வாசிக்கும் குப்பக்காடுகளில் அநேகம் பார்த்திருப்பார்.

கோபா:—அதுவன்று. இவர் குப்பக்காட்டானு நான் குப்பக்காட்டானு என்பதை நீங்களே தெரிந்துக்கொள்ளுங்கள். சென்னையில் பாண்டு வாசித்துக்கொண்டு டிராமா நோட்டீஸ் கொடுப்பதில்லை. ஏனென்றால் அது அங்கு இபலாததாயிருக்கிறது. சிறு ஊர்களில்தான் இவ்வாறு நோட்டீஸ் கொடுக்கமுடியும்.

மாணி:—ஆகவே மதுரை சின்ன ஊர் என்பது உன் அபிப்பிராயம் போலும்.

கோபா:—அது எவ்விதமேனு மிருக்கட்டும். விலை கொடுத்து வாங்கப் போகிறவர்கள் ஒருவருமில்லை. இன்றைக்கு என்ன நாடகம் ? நல்ல கம்பெனியா ?

வேலைக்காரன் கொண்டு வந்து கொடுத்த நோடீசை இரத்தினம் வாங்கிப் பார்த்து "இன்று கோவிலன் நாடகமாம்" என்றான்.

கோபா:—அவ்வித மெனின், இன்று டிராமாவுக்குப் போவோமா ?

மாணி:—நல்ல வேலை செய்தாய்! டிராமாவே இன்னதென் றறியாமலிருக்கும் இரத்தினம் பிள்ளையைக் கெடுக்க வேண்டுமென்று பார்க்கிறாயாக்கும்.

கோபா:—டிராமாவுக்குப் போவதில் ஆடவர்கள் எவ்விதம் கெட்டுவிடுவார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை என்ன பிரதர்! தங்களுக்கு டிராமா பார்ப்பதில் இஷ்டமில்லையோ ? என்று கேட்டான்.

இரத்:—இஷ்டமில்லை யென்று சொல்வதற்கில்லை. அடிக்கடி பார்க்கும் வழக்கமில்லை. நல்ல ஆக்டர்களாயிருந்து நல்ல நாடகம் நடத்துவதாயிருந்தால் போவதுண்டு என்றான்.

கோபா:—இன்று நாடகம் பார்க்கப் போவதில் தங்களுக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லையே ?

இரத்:—தங்களுக்குப் போக வேண்டுமென்ற இஷ்டமிருந்தால் போவோம். இதில் என்ன ?

கோபா:—தேங்ஸ் (Thanks) பிரதர். உங்களில் இன்று டிராமாவுக்கு வரக்கூடியவர்கள் யார் ? ஏன் ? இன்று நீங்கள் எல்லோரும் வரவேண்டுமென்பது என் கருத்து பிரதர் இன்று ஆகக்கூடிய செலவெல்லாம் என்னுடைய கணக்கில் பத்துவைக்க வேண்டுமென்றான்.

இரத்:—அது என் அவ்விதம்? என் கணக்கில் வைத்தாலென்ன ? காபிகிளப்பில் தாம் கொடுத்தீர். இதற்கு நான் கொடுக்கிறேன்.

கோபா:—அதற்கு நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். என்னுடைய செலவாகத்தா னிருக்க வேண்டும்.

மாணி :—இவ்விதம் இருவரும் பிடிவாதஞ் செய்தால் காரியம் நடப்பது எவ்வாறு ?

பொன் :—எனக்கொரு யோசனை தோன்றுகிறது. நாம் தனித்தனியாக டிக்கட் வாங்கிக் கொள்வோம்.

கோபா:—அது கூடவே கூடாது.

இரத்:—எனக்கும் அதீ இஷ்டமில்லை. இவைகளெல்லாம் ஒன்றும் வேண்டாம். பொதுக்கணக்கில் எழுதிவிடுவோம். ஏன் பிரதர்! இதில் தமக்கு என்ன ஆக்ஷேபணை ?

மாணி :—இது நல்ல யோசனைதான். கோபாலா! இதற்கு நீ ஒத்துக்கொள்ள வேண்டியதுதான், என்று சமாதானஞ்செய்தான்.

சிறுத்தொண்டர்

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறு:—இன்று தர்பாரில் நடந்த விசேஷத்தை நீ அறியமாட்டாய் போலும். யான் அதிகாலையில் எழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு சமீபத்தில் நடந்த யுத்தத்தில் எனக்குற்ற ஜயத்தைக் குறித்து மகாராஜாவைப் பார்த்து வரவேண்டுமென்று ஈசுவர தியானத்துடன் தர்பாரை நாடிச்சென்றேன். மகாராஜா இன்று மகா சந்தோஷத்துடன் அங்கு வந்தவர், யான் போரில் வெற்றியடைந்த விஷயமாய் என்னை வெகுவாய்ப் புகழ்ந்து பேசி, எவ்வாறு நமது பகைவனை ஜயித்து வந்தேன் என்பதைக் குறித்து விபரமாய்ச் சொல்லச் சொன்னார். கண்மணி! நான் என்ன சொல்ல விருக்கிறது? கல்வினுட் தேரைக்கும் கருப்பை யண்டத்து உயிர்க்கும் விருப்புற்று அமுதளிக்கும் மெய்யனாகிய எமது ஐயன் தையல் நாயகனது அருளன்பு இல்லையெனில் நமது வில்லம்பு என்ன செய்யும்! எல்லாம் அவனருளாலேயே முடிந்ததென்றும் என்னால் ஆனது ஒன்றுமில்லை என்றும் நன்றாய்ச் சொன்னேன். என்நடத்தையைக் காலாந்தரமாய்க் கவனத்தோடு கண்டு தேர்ந்த அரசர் பெருமான், நான் எதிரியினிடமிருந்து கைப்பற்றி வந்த அளப்பரிய செல்வத்தையும் எனக்கே தந்து நான் இவ்வுலக சிந்தனையில் இருப்பது கூடாதென்று கூறி, சிவசிந்தனையாய்ச் சிவத்தொண்டு புரிந்துவரும்படி அன்புடன் ஆக்ஞாபித்தார்.

திரு:—அப்படியா! நாதா! தாங்கள் என்ன பதிலளித்தீர்கள் ?

சிறு:—அப்படியே செய்கின்றேன் என விடைபெற்று வந்திருக்கிறேன். இனி நாம் உய்யத்தகுவதும் செய்யத் தகுவதுமான ஒரு திருப்பணியை கைக்கொள்ள வேண்டுமன்றோ? கண்மணி! இந்த விஷயத்தில் உனது சம்மதமும் உனது யுக்தியும் வேண்டும். என்ன சொல்லுகின்றாய்?

திரு:—நாதா! கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமோ? பாவம் நீங்கிப் பிறவிப் பெரும் பிணியைத் தணிப்பதற்கு அநுசரணையான வழி கிட்டுமானால் நமக்கு அதைவிட சுகிர்தமான காலக்ஷேபம் வேறு என்னதான் இருக்கிறது? அடியாளின் மனதைத்தான் தாங்கள் முன்னமே அறிந்திருக்கிறீர்களே. என்சம்மதத்தைக் கேட்கவும் வேண்டுமோ? மேலும் தாங்கள் சகல கலா பண்டிதராய் தவநெறியில் நிற்பவராய் இருக்க, தங்களுக்குத் தெரியாததும் ஒன்றுண்டோ! தாங்கள் எந்தத் திருப்பணியைத் தேர்ந்து நிச்சயித்தாலும் அடியாள் அதைச் சிரம்வகித்துத் தங்கள் எண்ணத்துக்கு உடனிருந்து பஞ்ச பூதமடங்க என் மனமடங்க மகா சிரத்தையோடும் செய்துமுடிக்கச் சம்மதப்பட் டிருக்கிறேன்.

சிறு:—கண்மணி! கற்புருவான உன் அற்புத மனதை நான் முன்னமே அறிந்ததுண்டு. இருப்பினும் நாம் கைக்கொள்ளப் போகுந் திருப்பணி, சிவன்பணியாய், நாமிருவரும் ஒருமனதாய்ச் செய்யக்கூடியவொன்றாய் இருக்கவேண்டுமன்றோ? எனக்காவன உனக்காகாமலும், உனக்காவன எனக்காகாமலும் இருந்து, மனவொற்றுமை யில்லாமல் வீண்காலம் போக்கி வாணாளை வீணாளாகக் கழிப்பதென்றால் மனதுக்குக் கவலையும் பிறவிக்கோர் தலையுமாய் முடியுமன்றோ? அது காரணம் பற்றியே உன்னிடம் கலந்து யோசிக்கலானேன்.

திரு:—சுவாமி! தாங்கள் வேறென்றும் நான் வேறென்றும் யான் ஒருநாளும் நினைத்ததில்லை. என்று என்னைக் கைதொட்டீர்களோ அன்றிருந்தே அடியாள் தங்களுக்கு அடைக்கலப் பொருளாய், என் மனதை இழந்தவளாய், இரண்டு தேகமும் ஓர் உயிருமாய் ஆயினோம். தாங்கள் என் விஷயத்தில் ஒருவித சந்தேகமுங் கொள்ளவேண்டாம். தங்கள் சித்தம் என் பாக்கியம்.

சிறு:—என் பிரிய நாயகி! மெத்தச் சந்தோஷம். இனி நாம் என்ன செய்வதென்பதைப்பற்றித் தீர்மானிப்போம். "அறஞ்செயவிரும்பு" என்ற ஆன்றோர் வசனப்படி தருமத்தையே நாம் கடைப்பிடிக்கவேண்டும். வினை யனைத்தையும் போக்கக் கூடிய சாதனமும் அதுவே. ஆனால் தருமமென்றால் எது? இன்னதென்று ஒரு துணிவு வேண்டாமா? அநேக தருமங்கள் அகிலமதில் உண்டு. அவற்றில் பொருள்கொண்டு செய்யத் தகுந்ததையே நாம் கையாட வேண்டும். ஏனெனில், நம்மிடத்தில் அரசனளித்த அளப்பரிய அகண்ட திரவிய மிருக்கின்றது. அதை வீணாக்கக்கூடாது. ஈசுவரார்ப்பணமாக அதை ஒரு நல்வழியில் செலவழிக்கத்தான் வேண்டும்.

"நம்பன் அடியார்க்கு நல்காத்தி ரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்
[புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்
கள்ளர்க்காங் தீக்காகுங் காண்."
[காங்

என்ற முதுமொழியைக்கேட்டதில்லையோ? திரவியத்தையிட்டுச் செய்யும் கன்னிதானம் சொர்னதானம் வஸ்திரதானம் அன்னதானம் முதலிய பல வகைத் தருமங்களுள் நிதானமாய் ஆராய்ந்துதேர்ந்து

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன் வெறுக்கையு ளெல்லாந் தலை.

மாசி 4.

பார்த்தால் அன்னதானமே எல்லாவற்றிலும் சிறப்புடையதாகத் தெரிகின்றது.

திரு:—நாதா! தாங்கள் இந்த அன்னதானத்தை இவ்வளவு புகழ்ந்து பேசுவதற்குஎன்ன காரணமோ?

சிறு:—கண்மணி! சொல்கிறேன் கேள்!

[ஸ்ரீராகம்—ஆதி தாளம்]

(பல்லவி)

அன்னதானத்தின் மகிமை—அதி பெருமை (அன்)

(அநுபல்லவி)

கன்னிதானமொடு சொர்னதான மற்றும்
என்னதானமு மிதற்கிணை யில்லையிந்த (அன்)

[சரணங்கள்]

போதும் போதும் எனப் பூதங்கள் ஐந்தும்
பொங்கிய பசிதணிந் திங்கிதம் பொருந்தும்
பாதக மாதிய தீதுகள் ஏதும்
பழிமுத லெவைகளும் அணு கிடாது இந்த (அன்)

தயையும் பொறையொடு தருமஞ் சிறந்திடும்
தரித்தரடு நிலைமை திருத்தமுடன் துலங்கும்
கயவர் மனமுஞ் சுகுணம் பொருந்தும்
களிப்போ டளிக்கும் விருந்தால் திருந்தும் (அன்)

கேட்டனையோ? அன்னதானத்தை ஏற்பவர்கள் பாவ கிருத்தியங்களைச் செய்ய அது துணையாய் இருப்பதில்லை. மேற்கூறிய மற்றைய தானங்கள் ஒவ்வொன்றும் துஷ்கர்மத்தைச் செய்ய சாதனமாயிருந்தாலும் இருக்கக்கூடும்.

திரு:—சுவாமி! தாங்கள் அன்னதானத்தின் மகிமையைச் சொன்னீர்கள். வாஸ்தவந்தான். ஆனால் மற்ற தானங்கள் துன்மார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யவும் கூடும் என்றீர்களே, அது எப்படி?

சிறு:—கொண்ட கணவன் கன்னியைப் பழிக்குள்ளாக்குவதும் பரிதவிக்கச் செய்வதும், சொர்ன முதலிய பொருள்களைக்கொண்டு சூது விளையாடுவதும், வேசிவலையிலாட்படுவதும், மதுபான மருந்துவது ஆகிய இவைகள் பாவகர்மங்கள் அல்லவோ?

திரு:—ஆமாம், வாஸ்தவந்தான். இப்பொழுதுதான் எனக்கு உண்மை தெரிந்தது.

சிறு:—அப்படிப்பட்டதன்று அன்னதானம். பஞ்ச பூதமும் ஆத்மாவுந் திருப்தியடையும். தேகம் வலுப்பதே யல்லாமல் பாதக மாதிய தீதுகள் எவையும் இதனால் விளையா. மேலும் கெட்டவர்களுக்கும் ஒருவாறு நல்ல சுபாவம் வரலாம். ஆகையால் நாம் அன்னதானத்தையே அனுசரித்து வருவோம்.

திரு:—சுவாமி! அப்படியே செய்வோம், தங்கள் வாக்குக்கு மறு வாக்குண்டோ?

சிறு:—சிவ சின்னங்களைத் தரித்துவரும் சிவனடியார்கள் எவரேயாயினும், அடியார் பக்தியில் ஒரு சிறிதுங் குறைவின்றி ஆதரித்து உபசரித்து அன்னமளித்து அவர்களை அகங்குளிரச் செய்வதே நம்முடைய காரியமா யிருக்கட்டும்! அதோடுகூட நமது அன்னதான மடத்தில் அன்னக்கொடியொன்று தூக்கிவிட்டு நம் எண்ணத்தை விளம்பரஞ் செய்து வரும்படியாகவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சிறு:— (செஞ்சுருட்டி—கண்டலகு)

“சரண கமலாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க—அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேஜனித்த
தமியன்மிடி யால்மயக்கம்—உறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற—குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலை
[செச்சை
கமழுமண மார்கடப்ப—மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோக மிக்க—பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த—வடிவேலா
அருணதள பாதபத்ம மது நிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த—மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின்—முருகோனே”
—திருப்புகழ்.

[போதல்.]

காட்சி 3

இடம்:—அன்னதான மட வீதி
நடர்:—சிவனடியார் இருவர்
[வெளியூர் சிவனடியார் ஒருவர் பாடிக்கொண்டு வருதல்]

[சங்கராபரணம்—ஆதிதாளம்.]

1-வது. சிவ:—அம்பலத்தரசே அருமருந்தே ஆனந்
[தத்தேனே அருள்விருந்தே
பொதுநடத்தரசே புண்ணியனே புலவ
[ரெலாம் புகழ் கண்ணியனே

2-வது. சிவ:—மலைதருமகளே மடமயிலே மதிமுக
[அமுதே இளங்குயிலே
ஆனந்தக்கொடியே இளம்பிடியே அற்புதத்
[தேனே மலைமானே

3-வது. சிவ:—சிவசிவ சிவசிவ சின்மயதேசா சிவசுந்
[தர குஞ்சித நடராஜா
படனவிவேக பரம்பரவேதா நடனசபேச
சிதம்பர நாதா”

இதேது இங்கு அன்னக்கொடி! நாம் வந்த வேளையும் நல்லவேளைதான். அங்கு மிங்கும்போய் அலைய

உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத் தொல்படைக் கல்லா லரிது.

வேண்டியதில்லை. ஆனால் இங்கு எந்நேரத்துக்கு அன்னம் போடுவதோ? இன்னாருக்குத் தான் இத்தனை பேருக்குத்தான் அன்னமிடுவது என்ற ஏற்பாடேதேனும் இருக்குமோ—தெரியவில்லை. இதோ யாரோ ஒருவர் வருகின்றார். அவரிடம் விசாரிப்போம்.

[உள்ளூர் சிவனடியார் வருதல்]

(ஆநந்தக்களிப்பு)

2வது சிவ:—

"சங்கர சங்கர சம்போ—சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ
ஆதி அநாதியுமாகி எனக்
கானந்தமாயறி வாய் நின்றிலங்குஞ்
சோதி மௌனியாய்த் தோன்றி—அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னண்டி
தோழி=சங்கர சங்கர சம்போ"

மகாதேவ! (1வது சிவனடியாரைப் பார்த்து) சுவாமி! ஏன் வெளியே தாமதம்?

1வது சிவ:—அன்னதான மட மென்கிறார்களே, அன்னம் புசித்துப் போகலாம் என்று வந்தேன். இங்கு யார் வந்தாலும் அன்ன மிடுவார்களா? அல்லது குறிப்பிட்ட பேருக்குத் தானோ? மடாதிபதிகளிடத்தில் சீட்டுவாங்குதல் முதலிய சடங்குகள் ஆகவேண்டுமோ?

2-வது சிவ:—சுவாமி இவ்வூருக்குப் புத்தம் புதியவர் போல இருக்கிறது. இந்த அன்னசாலையைப்பற்றிக் கொஞ்சமும் கேள்விப்பட்டதில்லைபோலும்! இதை நீங்கள் மற்ற இடங்களில் இருப்பதுபோல் மதிக்கக்கூடாது. இது சிறுத்தொண்டர் என்னும் சிவ வேதியர் ஒருவரால் அவருடைய பத்தினியின் அன்போடு கலந்து நடத்தப்படுவது. சிவனடியார் யார் வந்தாலும் எத்தனைபேர் வந்தாலும் எப்பொழுது வந்தாலும், எதைக் கேட்டாலும் எவ்வளவு கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல், வந்தவர்களுக்கு வந்தனை வழிபாடுகள் செய்து அறுசுவையோடு உணவளித்து உபசாரம் செய்வார்கள். ஆயிரம்பேர் சாப்பிட்டான பின்பு ஆராய்ச்சிமணியொன்று அடிக்கும். அதற்குப்பின்பு தான் அவர்கள் இருவரும் சாப்பிடுவார்கள். சுவாமி! சிவனடியார்களுக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் இந்த மடத்திலேயே தேடிவைத்திருக்கிறார்கள். ஆகையால், கொஞ்சமும் தியக்கமில்லாமல் போய் தாராளமாய் அமுதுண்ணலாம். எப்பொழுது போனாலும் போஜனம் தயார்!

1-வது சிவ:-ஹரஹரமகாதேவ! சிவனடியார்களுக்கு இவ்வுலகில் இவ்வளவு சிரத்தையோடு உபசரணை செய்வோர்களை நான் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. சிறுத்தொண்டரா அவர் நாமம்? அவர் திருத்தொண்டருள் பெருந்தொண்டர். நீலகண்டருக் கருந்தொண்டர். எண்டிசையில் நின்றாருள்ளும், அண்டருலகிற் சென்றாருள்ளும், மன்றுடும் சுந்தரர்க்கு அன்றூடம் குன்றாமல் இவர்போலும் தொண்டு கொண்டிருந்தவர் பண்டுமில்லை இன்றுமில்லை, என்றுமில்லை. இம்மகானுபாவரைக் கண்டாலும் பண்டுசெய்த பாவமெல்லாம் என்றும் அண்டாமல் பஞ்சாய்ப் பறந்தோடிப் போகும். போவோமா?

2-வது சிவ:—ஹா, ஹா!

"கருப்பற் றாறிப் பிறவாதே—கனக்கப்பாடுற்றுழ [லாதே
திருப்பொற் பாதத் தநுபூதி—சிறக்கப் பாலித் [தருள்வாயே
பறப்பற்றாருக் குரியோனே—பரத்தப் பாலுக் [கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே—ஜெகத்திற்
ஜோதிப் பெருமாளே!"

[போதல்]

காட்சி 4

இடம்:—அன்னதான மடம்.

நடர்:—சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சிவடினயார், பரிசாரகர்.

சிறு:—ஸனிதோடி தேவே—மெட்டு ஹரிகாம்போதி-ஆதி

(பல்லவி.)

நடமாடிய தேவே—வாமகிழ்வாய்=நட

(அனுபல்லவி.)

படமுடியாது படுவினைத் துன்பமினி
பாவியேன் தனைக்கரையேற்றுவாய் வேகமே= [நட

(சரணம்.)

பதிதனென் றெண்ணியோ பற்றாது போனது
பவசாகரமதில் அமிழ்த்திட ஆனது
கதியுந்தனைவிட அடியேனுக் காரையா
கவி ஐயாசாமி சொல் நீலகண்டையாநட

[பக்தியில் ஈடுபட்டு நிற்றல்]

[திருவெண்காடடு நங்கை வருதல்]

திரு:—லாவண்ய ராமா—மெட்டு பூர்ணசட்ஜம்.

ரூபகம். (பல்லவி)

வேகமாய் வாருமையா மேருவிற்கையா அதி

அனுபல்லவி

பாகமுதே பக்தாநுகூ பாதுகாத் தருளவே யதி— [வேக.

சரணம்

பாருலகி-லேயுமது-பாதமல ரேகதி
பாரு மொருகண் ணாலேபோதும் பாசநாச மாசௌந்தர்ய—[வேக.

(சிறுத்தொண்டரைப்பார்த்து) நாதா! எல்லோரும் அமுதருந்தத் தயாரா யிருக்கின்றனர்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமான் K. P. சந்தோஷம், பீ.ஏ., எல்.டி.]

பொற் பாத்ரரக்ஷை

வானமளாவிய உயர்ந்த மலைகள் ஒரு புறமும் வெண்மணற் கரையில் அலைவீசும் கடல் ஒரு புறமுமுள்ள சமபூமியான நாடொன்றில் ஒரு காலத்தில் விவசாயிகளான ஒருவகை ஜாதியார் வசித்து வந்தார்கள். மிதமான சீதோஷ்ண ஸ்திதியுள்ள இந்நாட்டின் ஜனங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வியாபாரஞ்செய்து பொருள் தேடவேண்டு மென்ற விருப்பஞ் சிறிது மில்லாதவர்களாய் நிலத்தைப் பயிரிடுவதிலும், ஒழிந்த வேளைகளில் சித்திரவேலைகள் செய்வதிலுங் காலத்தைக் கழித்து வந்தார்கள். அவர்களுக்கு ஏராளமான ஆடு மாடுகளிருந்தன. வீடுகளிற் பெண்கள் பருத்தி நூற்பது வழக்கம். வேளா வேளைகளில் அங்குள்ள துறைமுகத்திற்குத் தூர தேசங்களிலிருந்து கப்பல்கள் வரும். அப்பொழுது ஆண்களும் பெண்களும் துணிமணிகளையும் அழகிய சித்திரவேலை செய்த சாமான்களையு மெடுத்துக் கொண்டுபோய் அவைகளை விற்று இரத்தினக் கற்களும் நகைகளும் வாங்குவார்கள். இவைகளையவர்கள் பத்திரமாய்த் தங்கள் பெட்டிகளிற் பூட்டிவைத்து மணநாள், திருநாள் வரும்பொழுது எடுத்தணிந்து கொள்வார்கள்.

இவர்களுக்குள் அதிக ஏழையான ஒரு மனிதனிருந்தான். அவன் தன் வாழ்நாளெல்லாம் கஷ்ட ஜீவியஞ் செய்தவன். இப்பொழுது அவனுக்கு வயது அதிகமாகிக் கஷ்டப்பட சாத்தியமில்லாத நிலைமையி லிருந்தானதலால் இளவயதிற் சேர்த்துவைத்த கொஞ்ச திரவியம் வரவரக் குறைந்துகொண்டே வந்தது. அந்த நாட்டிலுள்ள ஜனங்கள் அவனைக் காணும்போதெல்லாம் அவன் ஏன் அவ்வளவு தரித்திரனாயிருக்கவேண்டுமென்று ஆச்சரியப்படுவார்கள். அவனைப்போல எல்லா வேலைகளிலும் நல்ல அறிவும் தேர்ச்சியு முடைய ஒருவன் ஏழையா யிருப்பதற்கு நியாயமேயில்லை. நரைக்கும் பருவத்திலிருந்த அவனுடைய மனைவியும் வீட்டுக் காரியங்களை ஒழுங்காகவே நடத்தி வந்தாள். எவ்வளவுதான் அவர்களிருவரும் வருந்தியுழைத்தபோதிலும் அவர்களுடைய கையில் பணந் தங்குவதில்லை. கையிலிருந்த சொத்து ஒவ்வொரு நாளும் குறுகிக்கொண்டே வந்தது. இந்த நிலைமையை நாம் என்ன வென் றெடுத்துரைப்பது? ஆயினுமிப்படி இரவுபகலாய் மெய்வருத்தம் பாரா துழைப்பவர் சிலர்ஏதோ நாமறியாத காரணத்தால் முன்னுக்கு வராமற் போவது பலவிடங்களிலும் நாம் காணக்கூடியதே. மேற்கூறிய இந்த மனிதன் பொருளின்மையால் பீடிக்கப்பட்டும் அதைப் பெரிதாகப் பாராட்டாமல் வேறொரு விஷயத்தைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண் டிருந்தான். தானும் மனைவியும் ஏறக்குறைய கிழத்தன்மையடையுங் காலமாகியும் அவர்களுக்குப் புத்திரப் பேறில்லாதிருந்தது. இதை எண்ணி யெண்ணி சஞ்சலப்பட்டுத் தங்களுக்கு மீதியாயிருக்கும் பொருளையெல்லா மெடுத்துக்கொண்டாலும் தங்களுக்கு ஒரு பிள்ளையை அருளவேண்டு மென்று கடவுளைக் காலையும் மாலையும் இருவரும் பிரார்த்தித்து வந்தார்கள்.

இப்படி இருபது வருஷஞ் சென்றது. இறுதியி லவர்கள் விரும்பிய வரங்கிடைத்தது. மரங்கள் துளிர்விட்டுப் பூக்கள் மலரும் இளவேனிற் காலத்தி லொருநாள், ஆகாயத்தில் மேகமின்றி எங்கும் நீல நிறமாயிருக்க, இளந்தென்றலினிமையாய் வீச, இம்மனிதன் பலவற்றையும்பற்றிச் சிந்தித்துக்கொண்டே தூக்கத்திலாழ்ந்து ஒரு கனவு கண்டான்: அதாவது, தானும் தன் இல்லாளும் தங்கள் தோட்டத்தில் ஒரு செடியிலுள்ள புஷ்பத்தை யுற்று நோக்கிக் கொண்டிருக்கையில் ஆகாய மெங்குங் கார்மேகம் நிறைந்தது. அச்சிறு புஷ்பம் மலர்ந்து விரிவதைக் கவனித்துக் கொண்டிருக்கையில் அதைச் சுற்றி ஒருவகையான ஜோதி விளங்கிற்று. இதைக் கண்ட அவர்களிருவரும் மயக்கமேலிட்டுக் கீழே விழுந்து கிடந்தார்கள். ஆயினும் தாங்கள் பார்த்த புஷ்பத்தைப் பூத்த செடி ஓங்கி வளர்ந்து பருத்துப் பெரு மரமாகி அவர்கள் மேற் கவிந்து நின்றது. அதன் கிளைகளில் கிரீடங்களுங் கோவில்களுங் கப்பல்களுந் தொங்கின அதன் இலைகளுக்குள் வாள், ஈட்டி, மார்க்கவசம், தலைச்சீரா முதலியவற்றின் சத்தங்கேட்டது. காதிற்கினிய கீதங்க ளெழுந்தன. ஆனால் அவை இன்ன பாஷை என்று விளங்கவில்லை. முடிவில் தன்னுடைய சொந்தபாஷையில் ஒரு பாட்டும் பாடப்பட்டது. உடனே அவன் தூக்கம் நீங்கி எழுந்து உட்கார்ந்தான். கண்டது சொப்பனமென்று நிச்சயித்துக் கொண்டு

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த வன்க ணதுவே படை.

அதில் கெடுதி யொன்றுமில்லையெனத் தனக்குப் புலப்பட்டதால்,முகமலர்ச்சியுடன் வெளியே சென்றான்.

பார்த்தவர்களெல்லாருடனுஞ் சிரித்துப்பேசிக் களஞ்சியங்களையும் நன்செய் நிலங்களையும் தாண்டிப் போனான்.

பச்சை வயல்களும் பூக்களும் வெளியே வீசுங் காற்றும் அவனுள்ளத்தைக் குளிரச் செய்தன. சாயங்காலமாகும் வரையில் பலவித நினைவுகளுடன் திரிந்து கொண்டிருந்தான். பொழுதுபோனபின் சந்திரனுதயமாகி, வீட்டின் நிழல் தெருவில் நீளமாய் விழுஞ்சமயத்தில் தனது கிருகத்தை யடைந்தான். சிறு பெண்ணொருத்தி ஓடி வந்து, "நீ வெகு நாளாய் வேண்டிக்கொண்ட வரம் கிடைத்தது. அல்லும் பகலும் நீ விரும்பியது கை கூடினது. இனி, உன் வீடு நல்ல பாக்கியமுள்ள தாயிருக்கும். பகவான் உன் எண்ணத்தை முடித்தார்" என்று மொழிந்தாள். அவன் ஒன்றும் பேசாமல் வீட்டிற்குள் நுழைந்தான். உள்ளே யிருந்தவர்கள் வந்து "உன் மனைவி ஒரு பெண் குழந்தை பெற்றாள்" என்றார்கள். ஏற்ற காலத்தில் அவன் ஊரிலுள்ள நண்பர் உறவினர்களை வரவழைத்துப் பெரிய விருந்து செய்து தன்னாலியன்ற பரிசுகளையுங் கொடுத்தான். குழந்தை நன்றாய் வளர்ந்தது. மறு வருஷம் அது பார்ப்பவர் கண்ணைக் கவரும்படி யவ்வளவு வனப்புடையதா யிருந்தது. தாய் தந்தையர் மறுபடியும் ஜனங்களை யழைத்து முன்போல் விருந்து செய்து பரிசுகொடுத்தார்கள். ஆனால் முந்திய வருஷத்தைப்போல் அவ்வளவு சிறப்பாய் எதையுஞ் செய்யக் கூடவில்லை. இதன் காரணம் சொல்லாமலே விளங்கும்.

நாட் சென்று குழந்தை வளரவளரத் தாய் தந்தையருடைய துரதிர்ஷ்டம் அதிகரித்துக் கொண்டே வந்தது. சிறிது சிறிதாயக் கையில் ரொக்கமா யிருந்த தெல்லாஞ் செலவழிந்து போயிற்று. அதன்மேல் அவர்களுக்கிருந்த கொஞ்ச நிலத்தையும் விற்கவேண்டிய அவசியம் வந்தது. மகளைப் பெறுவதற்கு முன், தங்கள் சொத்தெல்லா மிழந்து விடுவதா யிருந்தாலும் ஒரு பிள்ளை வேண்டுமென்றவர்கள் பிரார்த்தித்துக் கொண்டது உண்மை. அதன்படியே அவர்களுக்கொரு குழவியை யளித்த கடவுள் அவர்களுடைய சொற்ப செல்வத்தைப் பிடுங்கிக்கொண்டாரென் றெண்ணக் கிடந்தது. ஏனெனின், குழந்தையின் வயது ஏற ஏற அவர்களைப் பிடித்த தரித்திரமும் வளர்ந்தது. "வறுமை கொடிது; அதனினுங் கொடிது இளமையில் வறுமை" என்பது மூதுரை. வறுமையில் வளர்ந்த இப்பெண்ணினுடைய பெயர் ராதா. ஆனால் எவ்வளவுதான் கஷ்ட தசையிலுழன்றும் அப்பெண் எவரும் பார்த்து வியக்கத்தகுந்த அழகுடையவளாயிருந்தாள். நல்குரவின் கொடுமையால் முக வாட்ட முள்ளவளா யிருந்தாலும் நாட்டில் ராதாவிற்கு இணை யெவருமில்லை யென்று யாருங் கூறும்படி யமைப்பிலும் வனப்பிலு முயர்ந்து தோன்றினாள். தன்னுடைய ஸ்திதியை நன்கறிந்து அந்தியுஞ் சந்தியும் ராதா தனது வேலையிலேயே கண்ணாயிருந்தாள். அவளுடைய தகப்பன் அடிக்கடி அவளுடைய முகத் தோற்றத்தைக் கவனித்து, என்னென்ன நினைவுகள் அவளுக்குண்டாகுமோ வென்று சிந்திப்பான். மற்றப் பெண்கள் அனுபவிக்குஞ் சுகமவளுக் கில்லாமற்போயிற்றே யென்று ஏங்குவான். ஒருநாள் அன்னையும் பிதாவு மகளுமொன்றாய் உட்கார்ந்து கொண்டிருக்கையில் தன் வாலிபத்தில் நடந்த சங்கதி யொன்றைக் குறித்துத் தகப்பன் பேசலானான்:—

"நமது துறைமுகத்தருகி லொருநாள் மாலுமிக ளெவருமின்றிக் கப்பலொன்று வந்து சேர்ந்தது. நாங்க ளநேகர் போய்க் கடலிலிறங்கி அக் கப்பலைக் கரைக் கிழுத்து வந்தபின், அதிலுள்ள சாமான்களை எங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டோம். விலையுயர்ந்த பொருள்கள் எனக்குக் கிடைத்தன. இரண்டு ஜாடித் தேன், முழுதும் பொற்சரிகையா லலங்கரிக்கப்பட்ட திவ்வியமான ஆடையொன்று, தங்கத் தலைச்சீரா ஒன்று— இப்பொழுது அதை நினைக்க என் மனம் பதைக்கிறது.—அதிக மேலான வேலைப்பாடுடைய வில்லொன்று, அதைச் சேர்ந்த அம்பறாத்தூணி யொன்று, இத்தனையுங் கிடைத்தன. இவற்றிற் சில இதோ, நமக்கெதிரிலுள்ள சுவரில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னொரு வெகு அற்புதமானவஸ்து என்னிடமிருக்கிறது. அதை இப்பொழுது காட்டப்போகிறேன். நீ விளக்கேற்று" என்று தன் மனைவியை நோக்கிக் கூறியபின், ஒரு பழைய பெட்டியைத் திறந்து, அதிலிருந்தவற்றைக் கீழே எறிந்துவிட்டு, அடியிலிருந்து நல்ல சரிகை வேலையிட்ட துணியால் மூடப்பட்டிருந்த பொருளொன்றை எடுத்

தான். அருகிலிருந்த ராதா சிறிது ஆச்சரியத்துடன் தன் தகப்பன் கையிலிருப்பதை நோக்கினாள். மூடிக்கொண்டிருந்த துணியை யவிழ்த்துப்பார்க்க, விலையேறப்பெற்ற இரத்தினக் கற்களின் பிரகாச முண்டாயிற்று. அதைக்கண்டு ராதாவின் கண்கள் ஜொலித்தன. அவள் தானிருந்த விடத்தை விட்டெழுந்து போய்த் தன் கைகளால் துணியிலிருந்த நூதனமான பொருளைத் தொட்டுப்பார்த்தாள். பொன்னால் செய்யப்பட்டு உயர்ந்த கற்கள் பதித்த விரண்டு பாதரக்ஷைகள் அங்கிருந்தன. சிறிது நாழிகை அவற்றைப் பார்த்து வியந்து நின்றவள் மறுபடியும் தன் வேலைக்குத் திரும்பினாள். பாதரக்ஷையைப் பார்த்த போது கொஞ்சம் நீங்கிய மனவாட்டம் மறுபடியும் அவளைப் பிடித்தது.

தகப்பன் ராதாவை நோக்கி "அக்காலத்தில் எனக்கு வேண்டிய திரவியமிருந்தது. ஆனால் குழந்தையில்லை. பல வருஷங்களாக இவற்றைப் பத்திரமாய் வைத்துக் கொண்டிருந்தேன்; இவற்றை விற்க எனக்குப் பிரியமில்லை. தகுந்த விலை கொடுக்கத் தகுந்தவர்களு மிங்கில்லை. மேலும், நன்றாய்க் கற்றுத் தெளிந்த ஒருமனிதன் இவைகளால் எனக்கு நல்ல சம்பத்துண்டாகுமென்று சொன்னான். இனிமேல் இதை வைத்துக்கொண்டிருப்பதிற் பிரயோஜனமில்லை யென்று நினைக்கிறேன். உண்பதற்கின்றி நாம் துயருறும்போது நற்காலம் வருமென்றிதைப் பொதிந்து வைத்தென்ன பயன்? நமது பெரிய கோவிற் குருக்கள் இதை அநேக ஆண்டுகளாக வென்னிடங் கேட்டுக்கொண்டு வருகிறார். ஆதலின், நாளைக் காலையில் நீ இதை அவரிட மெடுத்துக்கொண்டு போய் இதற்குப்பதிலாக என்ன தரக்கூடுமென்று கேள். நல்ல விலை கொடுத்தால் நமக்கு வேண்டியவற்றை நாம வாங்கிக் கொள்ளலாம்" என்றான். இதைச் செவியுற்ற ராதாவின் முகத்தில் ஒருவகையான வெறுப்பு விளங்கினது 'நாம் இவ்வளவு தரித்திர நிலையிலிருப்பது அவளுக்கு வெறுப்பா யிருக்கிறது" என்றாள். அதைக் கவனித்த அவளுடைய தாயார் ராதாவோ இதற்குப் பதிலொன்றும் பேசாமல் மௌனமாயிருந்தாள். கிழவனான தந்தையும் பெருமூச்சு விட்டெழுந்து தன் வேலைக்குப் போனான்.

மறுநாளுதயத்தில் தன்னுடைய பிதாவின் சொற்படியே குருக்களுடைய வீட்டிற்குப் போகப் புறப்பட்டாள் ராதா. பச்சைப் பசேரென்று புற்கள் நிறைந்த வெளிகள் ஊடேயும், செழித்துப் பூத்துக்காய்த்திருந்த தோட்டங்களின் வழியாகவும் அவள் போகையில் அவளை யறிந்தவர் பலர் க்ஷேமலாபங்களை விசாரித்தார்கள். ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கேற்ற விடையளித்த ராதா மெதுவாகவும் அதிகாரம் வாய்ந்த ஒரு அரசியைப் போலவும் பேசினாள். வீட்டின் வாசலில் நின்று பார்த்துக்கொண்டிருந்த அவளுடைய தாய் "இவளொரு ராஜபுத்திரியாய்ப் பிறந்திருந்தால் எத்தனை பேர்களுடைய தலையில் தன் காலை வைத்து மிதிப்பாளோ?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். ராதா ஒன்றையுங் கருதாது விரைந்து நடந்து, வயல்களையும் வீடுகளையுந் தாண்டி எண்ணத்தி லாழ்ந்தாள்.

"நான் பிறந்தது முதல் இவ்விடத்தைவிட்டு வேறெங்கும் போனதில்லை. இங்கே புதியதொன்றுமில்லை. பார்த்தவற்றையே மறுபடியும் பார்க்க வேண்டியதா யிருக்கிறது. இங்கே வசிக்கிற மனிதர்களெல்லாம் இருந்த இடத்தைவிட்டு நகராதவர்களே. வேறு நாடுகளையும் ஜனங்களையும் இவர்கள் பார்த்தறியாதவர்கள். இறப்பதற்கு முன் மனத்திற்குங் கண்ணிற்கும் இனியவற்றைக் காணவேண்டும். எனக்கு இவற்றைக் காட்டக்கூடியவர் அங்கொருவருமில்லை. இவ்விடத்தைவிட்டு வேறெங்கேயாவது சென்று நன்றாய் வாழவேண்டுமென்றாசைப் படுகிறேன்" என்று இவ்வாறவள் நினைந்தாள். இப்பொழுது அவளொரு குன்றின் மேல் நின்றுகொண்டிருந்தாள். ஓங்கி வளர்ந்த பெரிய மரங்களின் கிளைகள் காற்றி லங்குமிங்குமாடின; கீழே குன்றின் சாரலில் ஆடுமாடுகள் அமைதியாய் மேய்ந்துகொண்டிருந்தன; தூரத்தில் நெல்வயல்களும் மனிதருடைய வாசஸ்தலங்களுஞ் சிறு புள்ளிகள்போல் தோன்றின; அதற்கப்பால் சூரிய வெளிச்சத்தில் கருங்கடல் பாவிக்கிடந்தது. இக்காட்சியைச் சில நாழிகை நின்று பார்த்தபின் பெரு மூச்சுடன் முன்னேறிச் சென்று கோவிலி னருகில் வந்து சேர்ந்தாள். அங்கே வந்ததும் யாரோ ஒருவர் தன்னைப்பேரிட்டழைப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டாள். குன்றின் பக்கத்திலிருந்து வேட்டை நாயொன்று குதித்தோடி வந்து அவளுடைய காலிற புரண்டு விளையாடினது. அதன் பிறகே சிங்காரமான நீல உடைதரித்த வாலிபனொருவன் வந்தான். இவ்வாலிபன் அங்கிருந்த கோவிலின் தர்மகர்த்தாக்களிலொருவருடைய புதல்வன். அவனை முதலிற்

பார்த்தவுடன் ராதா புன்னகை செய்தாள். "ராதா, நீ எங்கே போகிறாய்? ஏதாவது அலுவலுண்டோ?" என்றவன் ஆசையுடன் கேட்க, வாயைத் திறவாமல் ராதா கற்சிலைபோல் நின்றாள். கொஞ்சநேரம் பொறுத்து "கோவிலின் குருக்களை நான் பார்க்கவேண்டும். என் தகப்பனாரிடமிருந்து அவருக்கு ஒரு செய்தி சொல்ல வந்தேன். அவர் கோவிலி லிருப்பாரா?" என,

"அவனிங்கில்லை; கடற்கரைக்குப் போயிருக்கிறான். ஆனால் இப்பொழுது திரும்பிவிடுவான்" என, நீல உடையணிந்தவன் மறுமொழி பகர்ந்தான். அவன் நின்றநிலையும், பேசிய வார்த்தையும், முகத்தின் தோற்றமும் மிகுந்த அன்புடன் அவன் ராதாவிடம் வந்தானென்பதைத் தெரிவித்தன. அவள் தன்னுடன் பேச வேண்டுமென்றவன் விரும்பினான்.

"நான் கோவிலுக்குப் போகிறேன். என் தாயார் கொடுத்த காணிக்கையை நான் செலுத்த வேண்டும்" என்று மொழிந்து ராதா நடந்தாள். வாலிபனே, "நானும் உன்னுடன் வருகிறேன். கோவிலில் உன்னுடைய வேலை முடிந்ததும் திரும்பவும் உன்னை வீட்டிற் கழைத்துக்கொண்டு போவேன்" என்றான். அவனுடைய மனத்திண்ணத்தையும் நோக்கத்தையும் எளிதி லுணர்ந்த ராதா, சற்றுநேரஞ் சும்மாவிருந்து, பின் "இந்த நாட்டையு மிதிலுள்ள ஜனங்களையும் நான் வெறுக்கிறேன். நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ" என்று அதிகாரத்துடன் கூறினாள். இம்மொழி காதிற் பட்டதும் பிரமை பிடித்தவன்போல் நின்று விழித்தான் வாலிபன். வெட்க மேலிட்டு, வந்த வழியே பின் திரும்பாது ஓடிப்போனான்.

ராதா நின்ற விடத்தை யணுகி, நெருங்கி வளர்ந்த மரங்களடர்ந்த இருண்ட சிறிய வனமொன்றிருந்தது. அதன் மத்தியி லுள்ள அழகிய சிறு குளத்தில் மலையருவி யொன்று பாய்ந்து கொண்டிருந்தது. இவ்வருவியின் மேற் கட்டப்பட்ட பாலத்தைக் கடந்து ராதா அப்புறஞ் செல்கையில், அவளுடைய சேலையின் முனையை முட்கள் பிடித்துக் கொள்ள, அவற்றை யொடித் தெறிந்துவிட்டு மேல்நடந்து குளிர்ந்த நீர் நிறைந்திருந்த குளத்தைப் பார்த்தாள். இப்போது நண்பகலா யிருந்ததாலும், நடந்து களைத்ததனாலும் ஒரு மரத்தினிழலில் அவள் சிறிது நேரம் படுத்தாள். இங்ஙனம் படுத்திருந்தவள் மறதியாகவே தன் தகப்பன் கொடுத்த பாதரக்ஷைகளைக் கையில் சுழற்றிக்கொண்டு பலவிதமான மனோராஜ்ஜியஞ் செய்தாள். ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே அதிக நேரம் ஆயாசமாகப் படுத்திருந்தாள். அவளிருப்பதை யறியாது அவ்வனத்திலுள்ள குழி முயல்கள் அவளோரத்திற் குதித்தோடின; கீச்கீச்சென்று கூவிக்கொண்டு அணிற் பிள்ளைகள் மரத்துக்கு மரந்தாவி விளையாடின; மரங்கொத்திக் குருவிகள் சத்தமிட்டன; நீர்க் கோழிகள் கொக்கரித்தன. ராதா இன்னும் அங்கேயே அயர்ந்து படுத்திருந்தாள். காலையிலேயே வீட்டை விட்டு வந்தவளாதலால் இப்போதவளுக்குப் பசியெடுக்க, தான் கொண்டுவந்த ஆகாரத்தையுண்ட பின் அருவியிலிறங்கி ஜலத்தைக் கையால் வாரிக் குடித்தாள். பாதரக்ஷைக ளிரண்டும் மரத்தடியிற் கிடந்தன. அவற்றை யெடுத்து நன்றாய் உற்று நோக்கியபின் கால்களில் மாட்டிக்கொண்டு காட்டிற்குள் நுழைந்து திரிந்து மணல் நிறைந்த குளக்கரையில் பல்வேறு நிறங்களுடன் மலர்ந்த இனிய பூக்கள் நறுமணம் வீச, கதிரவன் மந்தமாய்க் காய, குளிர்ந்த தென்றலடிக்க, ராதா நிரம்பிய உளத்துடன் தன்சேலையைச் சிறிது தூக்கிப் பிடித்துக்கொண்டு நடந்து அங்குள்ள புற்றரையி லமர்ந்தாள். தடாகத்திலுள்ள நீர் தெளிந்து குளிர்ந்திருந்தது; அதன் ஆழமுங் கொஞ்சமானதால், அதிலிறங்கி ஸ்நானஞ்செய்ய இச்சையுடையவளாய்க் காலிலுள்ள பாதரக்ஷைகளையும் அணிந்திருந்த ஆடைகளையுங் கழற்றி வைத்துவிட்டு, ராதா நீரிலிறங்கினாள். நெஞ்சிற் கிஞ்சித்துஞ் சஞ்சலமுங் கவலையுமின்றித் தடாகத்தில் வெகுநேரம் தனது இஷ்டப்படி ஆடிக்கொண்டிருந்தவள் திடீரென்று ஒரு பெரிய பக்ஷியின் உரத்த தொனியைக் கேட்டாள். மேலே பார்த்தபொழுது ஒரு கழுகு கூரிய பார்வையுடனும் காதைத் துளைக்குஞ் சத்தத்துடனும் வட்டமிட்டுப் பறந்து வந்தது. விரைவில் அது தன் சிறகுகளையடித்துக் கொண்டு செங்குத்தாய்க் கீழே பாய்ந்தது. ராதா கூச்சலிடுமுன் அக்கழுகு கீழே கிடந்த பொற் பாதரக்ஷைகளி லொன்றைத் தன் நகங்களிற் பற்றிக்கொண்டு கண்மூடி விழிப்பதற்கு முன் விண்ணிற் பறந்தது. கொஞ்ச நிமிஷத்திற் கெல்லாம் அண்ணாந்து பார்த்துக்கொண்டு நின்ற ராதாவிற்குத் தெரியாமல் கழுகு மறைந்து போயிற்று. தன் வாழ்நாளெல்லாந் தரித்திரத் திலேயே வளர்ந்தவளாதலால் அந்த நஷ்டத்தையும்

அவள் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டாள். சந்தோஷமின்றிக் காலங்கழித்தவளுக்குப் பாதரக்ஷையொன்றை இழந்துவிட்டது பிரமாதமாகத் தோன்றவில்லை. இதைப்பற்றி நன்றாய் யோசனைசெய்த ராதாவிற்குக் கொஞ்சம் சிரிப்பும் வந்தது. மறுபடியும் தன்னுடைகளை யணிந்துகொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். அவ்வளவு விலையுயர்ந்த பொருளை யிழந்துவிட்டதன் பயனாக ஒரு வேளை தனக்கு நற்காலம் பிறக்குமென்ற எண்ணம் வழியில் அவளுடைய உளத்திலுதித்தது. துன்பங்கள் நெருங்கி வருமாயின் நற்காலம் சமீபத்திலுளதென்பது சிலருடைய கொள்கை. இது உண்மையா யிருப்பினுமிருக்கலாம். ஆனால் ராதாவின் எண்ணங்களெல்லாம் வீட்டிற்கு வந்தவுடன் காற்றாய்ப் பறந்தன. குளத்தருகில் நடந்த சங்கதியைக் கேள்விப்பட்டதும் ராதாவின் தாய்க்குக் கடுங்கோபம் பிறந்தது. பதறித் துடித்துப் பொங்கின மனத்துடன் ராதாவையவள் திட்டத் தொடங்கினாள். மகளோ எதிர் பேசாமல் யாவற்றையுங் கேட்ட பிறகு தாயாரைப் பார்த்து நகைத்தாள். அவள் முன்னிலும் பதின்மடங்கு கோபமுடையவளாகி, மகளுடைய கல்நெஞ்சைக் குறித்துப் புலம்பியழ வாரம்பித்தாள்.

அப்போது தகப்பன் எழுந்து இருவருக்கும் சமாதானஞ் சொல்லி, இனிய வார்த்தைகளைப் பேசி ராதாவை விளித்து "மகளே, இதனாலுனக்கு நல்ல சந்தோஷமுஞ் சம்பத்துமுண்டாகும்" என்று சொன்னான். மீதியாயிருந்த பாதரக்ஷையிலுள்ள இரத்தினக் கற்களை உடனே எடுத்து விற்றுவிட வேண்டுமென்று வெகுண்டு நின்ற அன்னை கழறினாள். ராதாவிற்குப் பிடித்திருந்த கர்வம் அப்போ தடங்குமென்பது அவளுடைய கருத்து. இந்த நெருக்கமான நிலையில் தகப்பன் ராதாவை யழைத்து "நீங்காத நிழல் போலே தரித்திரம் நம்மை வருத்துகிறது. உன்னுடைய அன்னை சொல்கிறவண்ணம் கற்களை விற்றோமானால் வீட்டிற்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ளலாம். என்றாலும் எனக்கது பொருத்தமாய்த் தோன்றவில்லை. நீ பிறக்கும் பொழுது நான் கண்ட கனவைப்பற்றி உனக்குச் சொல்லி யிருக்கிறேனல்லவா, ராதா?" என்றான்.

"நான் சிறிது கேட்டிருக்கிறேன். ஆனாலதைப்பற்றித் தெளிவான ஞாபகமெனக் கில்லை" என்று ராதா கூற,

"இல்லை, இல்லை. மகளே, அது உனக்கு நன்றாய்த் தெரியும்; நான் மறுமுறை சொல்லவேண்டியதில்லை. பாதரக்ஷையை வைத்துக்கொள். அதனால் நற்காலம் வரும்" என்று மகளுடைய சார்பில் பேசினான் வயது சென்ற தந்தை. அவனுடைய உருக்கமான சொற்களைக் கேட்ட ராதா பாதத்தில் விழுந்து "உயிர் வாழ்வதே நமக்குக் கஷ்டமாயிருக்கிறது; நம்முடைய விதியோ கொடியது. வேறெங்கேயாவது சென்று பிழைத்தால் நலமாயிருக்கும்" என்றழுதாள். ஆயினும் தகப்பன் சொன்ன ஆறுதலான மொழிகளால் மனவமைதி யடைந்து வழக்கம் போலத் தன் வேலைகளைக் கவனிக்கப்போனாள்.

மேற்கூறிய சம்பவங்கள் நடந்து ஆண்டு ஒன்று கடந்தபின், ஒரு நாள் கடைக்குப் போவதற்காகப் புறப்பட்ட ராதா தெருவாசலில் நின்றாள். நெரித்த புருவங்களுடன் மெதுவாய் நடந்து சமுத்திரக் கரையிலுள்ள கடை வீதிக்குச் சென்றாள். ஒரு மைல் தூரஞ் சென்றபின் பாதையில் சற்று நேரம் நின்றாள். அங்கே புல்லின்மேல் பெரிய நாயொன்று படுத்துக்கொண்டிருந்தது. அந்நாயின் சொந்தக்காரனாகிய ஆட்டிடையன் ஒரு மரத்திற் சாய்ந்து கொண்டு நின்றான். அவனைப் பார்த்தவுடன் ராதாவிற்கு எண்ணிறந்த நினைவுகள் எழும்பின. முன்னும் பின்னும் யோசித்து விரைவாய் வீட்டிற்குத் திரும்பினாள். ஒரு வருஷத்திற்கு முன் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்ட ஒற்றைப் பாதரக்ஷையை மறுபடியும் அவசரமா யெடுத்துக்கொண்டு இரண்டாம்முறை கடைவீதிக்குப் புறப்பட்டாள். அவளைச் சுற்றி நாற்புறமுங் கிராமவாசிகள், வெளி நாடுகளிலிருந்து வந்திறங்கியிருக்கும் வியாபாரிகளையும் மாலுமிகளையும் பற்றிப் பேசிக்கொண்டு போனார்கள். அவர்களுடைய பேச்சைக் கேட்டதும் ராதாவிற்குப் புது நம்பிக்கையும் உவப்பு முண்டானது. புறதேசத்து சமாசாரங்களும் நூதனமானவை எவையும் அவளுக்கு மகிழ்ச்சியைத் தருமென்பதை முன்னறிந்திருக்கிறோம். வெகு ஜனங்கள் ஓரிடத்திலொன்றாய்க்கூடி யாதோ வஸ்துவை ஆசையுடன் பார்த்து நின்றார்கள். இவர்களை ராதா கவனியாமல், தன் வேலையை முதலில் முடித்துக்கொள்ள வேண்டுமென்ற ஏக சிந்தையுடன் கடைகளுக்குப் போனாள். அக்காரியம் முடிந்தவுடன் தானும் அம்மக்கள் கூட்டத்தில் நடப்பதைத் தெரிந்துகொள்ள

அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை படைத்தகையாற் பாடு பெறும்.

வேண்டுமென்ற இச்சையுடன் அவ்விடம் போனாள். அங்கே விதவிதமான அழகிய ஆடையாபரணங்கள் பூண்ட அந்நிய நாட்டார் கூடியிருந்தார்கள். அவர்கள் அங்கிருந்த ஒரு சிறு கோவிலில் தொழுது கொள்வதற்காக வந்தவர்களென்பது ராதாவிற்குத் தெரிந்தது. உடனே வேகமாய்ப் போய்க் கோவிலிற்குள் புகுந்தாள். உள்ளே அவள் கண்ட காட்சி அளவற்ற ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. கோவிலினொரு மூலையில் சிறிய பீடமொன்றின்மேல், தான் முந்திய வருஷத்தில் இழந்துவிட்ட பாதரக்ஷை யிருந்தது. பொங்கும் கடல்போல் சந்தோஷ வெள்ளம் அவள் உள்ளத்திற் பெருகியோடத் தலைப்பட்டது. அவளுடைய கண்கள் பிரகாசித்தன. நெடு நாளாய்த் தான் எதிர்பார்த்த நாழிகையும் வேளையும் வந்ததென்று களிகூர்ந்தாள். அங்குள்ள அனைவரும் அவளையே பார்த்துக்கொண்டு நின்றார்கள். தேவலோக கன்னிகையைப்போல் விளங்கிய அவள் என்ன சொல்லப் போகிறாளென்று யாவருங் காத்திருந்தார்கள். அங்கிருந்த வேற்று நாட்டாரை விளித்து, "ஒரு வேளை நீங்கள், அதோ பீடத்தின் மேலிருக்கிற ஒற்றைப் பாதரக்ஷைக்கிணையான மற்றொன்றைத் தேடுகிறீர்கள் போலும். அது என்னிடத்தி லிருக்கிறது. இன்றைய தினத்திலிருந்து சரியாய் ஒருவருஷத்திற்கு முன் இவை இரண்டும் என் கால்களிலிருந்தன" என்று ராதா யாவரும் அதிசயிக்கும்படிப் பேசித் தன்னிடத்திலிருந்த பாதரக்ஷையை வெளியே யெடுத்தாள். அப்பொழுது எல்லோருங் கரகோஷஞ்செய்து ஆர்ப்பரித்தார்கள். இதன்பின், முதிர்ந்து பழுத்து நரைத்துப் பொன்னுடையணிந்து நின்ற ஒருவன் முன்னேவந்து "உலகில் நடப்பதெல்லாம் நியாயத்தின்படியே நடக்கிறது. எல்லாம் தெய்வச் செயலே. எங்களரசனுக்கேற்ற மனைவியை என் கண்முன்னே காண்கிறேன்" என்று தெளிவான உச்சரிப்புடன் மொழிந்தான். ராதா ஒன்றும் பேசவில்லை. அவளுடைய முகம் சிறிது வாட்டமடைந்தது. தலையில் முடிதரித்த இராணியைப்போல் தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தாள். "சுந்தரம் நிறைந்த பெண்ணரசே, நான் சொல்வதற்குச் செவி சாய்த்திட வேண்டுகிறேன். ஒரு வருஷத்திற்கு முன்னே எங்களுடைய வேந்தன் பெரிய யாகமொன்று செய்தார். நல்ல சூரிய வெளிச்சத்தில் யாகசாலையின் நடுவில் மேகத்திலிருந்து ஒரு சத்தத்துடன் பொன்னிற ஒளியொன்று இறங்கினது. சிலர் ஒரு கழுகு இறங்கியதைத் தாங்கள் கண்டதாகச் சொல்லுகிறார்கள். அதனுண்மை எனக்குத் தெரியாது. ஆனால் அரசன் தமது கையை நீட்டி யங்கிருந்த இப் பாதரக்ஷையை எடுத்தார். இவ்வற்புத சம்பவத்தைப் பற்றிச் சில காலம் சிந்தனை செய்து இறுதியில் எங்களை நோக்கி "பிரபஞ்சமெங்கும் போய்த் தேடிப் பார்த்து இதையொத்த பாதரக்ஷையணிந்த மாதைக் கண்டுபிடியுங்கள். அவள் யாராயிருந்தாலும் அவளை நான் மணந்துகொள்வேன்" என்றார். அவருடைய கட்டளையைக் கேட்டு நாங்கள் ஆச்சரியப்பட்டாலும் உலகமெல்லாஞ் சுற்றிக் கடல்கள் பலவற்றைக் கடந்து கடைசியில் இங்கு வந்தோம்" என்றான்.

ராதாவின் மன நிலை இத்தன்மைய தென்று யார் எடுத்துரைக்க முடியும்? "நான் செய்ய வேண்டிய தென்னவென்று எனக்குத் தெரியவில்லை; நீங்களே சொல்லுங்கள். என் தாய் தந்தையரையும் நாட்டையும்விட்டு நானறியாத நாட்டிற்கு உங்களுடன் வந்து நான் பாராத ஒரு அரசனை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பதை நினைக்கப் பயமாயிருக்கிறது. என்றாலும் கடவுளிட்டபடி நடக்குமே யல்லாது நாம் நினைத்தபடி ஒன்றும் நடக்காது" என்று இரங்கிக் கூறினாள் ராதா. முன்னே நின்ற முதியவன் ராதாவை வணங்கித் தந்தத்தினால் அமைத்த ஆசனத்தில் அவளை யமர்த்தி தன்னுடனிருந்தவர்களை யவள் முன்சென்று ஒரு அரசிக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்யும்படி உத்தரவுசெய்தான். அதன்படியே யாவரும் ராதாவை வணங்கி வாழ்த்தினார்கள். பிறகு தங்களுடன் புறப்படுவதற்கு அவளுக்கு எப்பொழுது சௌகரியமாயிருக்குமென்று எல்லோருங்கேட்க, ராதா நிமிர்ந்து பார்த்து "இன்றே புறப்படுவது நல்லது. என்னால் ஒரு கணமு மிங்கே தரித்திருக்க முடியாது. பழைய நாட்கள் கழிந்துபோயின; புதியகாலம் வந்து சேர்ந்தது. இவை யிரண்டிற்கு மிடையில் எனக்கென்ன செய்வதென்று விளங்கவில்லை; ஆனால் நானிவ்விடத்தை விட்டுப் போகும்போது எனது வயது முதிர்ந்த தாய்தந்தையருங் கூடவே வந்து எனக்குக் கிடைக்கிற தெல்லாவற்றிலும் சுதந்தரம் பெறவேண்டும். மேலும், என் தந்தைமேலெனக்குள்ள வாஞ்சை பெரிதாகையால் எனக்குக்கிடைத்த இந்த எதிர்பாராத பெரும் பேற்

றைப்பற்றி அவரிடம் பேசுவதற்குமுன் திட்டமாய் நானொன்றுஞ் சொல்லமுடியாது'' என்றாள். அவள் விளம்பியது நியாயமென்றெவரு முடன்பட்டதால் ராதா கோவிலைவிட்டு வெளியே சென்று வீட்டிற்குவந்து, பசுமாடுகளை யோட்டிக் கொண்டுவந்த தன் தகப்பனைக்கண்டு,

"எனதரிய தந்தையே, நமக்கு நல்ல காலம் பிறந்தது. நம்முடைய தரித்திரம் நீங்கினது. நான் ஒரு தேசத்தையாளும் மகிமை பொருந்திய அரசனுடைய மனைவியாகி விட்டேன். நமக்கு இன்னும் பெரிய பதவி கிடைக்கப் போகிறது. நீர் இந்த மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தீரென்பதையும் சுத்தமாய் மறந்துவிடுவீர்'' என்று பகர்ந்து, தனக்கு நேர்ந்த எல்லாவற்றையுமாதியோடந்தமாய் எடுத்துரைத்தாள். வயது முதிர்ந்த தந்தை இந்நற்செய்தியைக் கேட்டவுடன் வாய்திறந்து பேசமுடியாத மனக்குழப்பமடைந்தான். இரண்டு மூன்று தடவை பேச முயன்று பயன்படாமலிறுதியில் தட்டித்தடுமாறி "உன் மனது திருப்தியடைந்தால் அதுவே போதும். எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை. நம்முடைய வாழ்க்கை கஷ்டம் நிறைந்ததாயிருந்தாலும் அது இகழ்ச்சிக்கிடமானதன்று. மகளே, நீ விரும்பியபடியே நான் உன்னுடன் வருகிறேன். ஆனால் நன்றாய் யோசித்துப் பார். எங்களை யுன்னுடன் அழைத்துக்கொண்டு போக விரும்புவது ஒரு வேளை விருதாவாயிருக்கும். என் குழந்தையே! எந்நாளும் நீ என்னை மறவாதே. உன்மேலுள்ள பாசத்தால் என்னுள்ளம் நிரம்பியிருக்கிறது'' என்று மொழிந்தான். ராதா மறுமொழியாய் "நான் தனியாக என்னுடைய புது வாழ்க்கையிலிருக்க வேண்டுமென்பது தங்களுடைய எண்ணமா? என்னைத் தேற்றுவதற்கு நீங்களருகிலிருக்க வேண்டாமா? என்னுடன் வருவதற்கு வேண்டியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்; புறப்படுங்கள். துறையிலுள்ள கப்பல் பாய்விரித்துப் பிரயாணஞ் செய்ய ஆயத்தமாயிருக்கிறது. பொழுது போவதற்கு முன் நாம் கப்பலிலேற வேண்டும்'' என்றாள். தந்தை இதற்குப் பதிலொன்றுங் கூறவில்லை. இன்னும் அவனுடைய மனம் ஒரு நிலைப்படவில்லை. சிரித்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான். அவனுடனுள்ளே போகாமல் ராதா தனியாய் நின்று ஏதேதோ நினைத்துக் கொண்டிருந்தாள். திடீரென்று வருஞ்செல்வமும் சந்தோஷமு மெவரையுந் திகைக்கச் செய்யுமென்பது பலரு மறிந்ததே. துக்கத்திலாழ்ந்து துயரத்தி லுழன்றவர்களுக்குச் சுகமும் திரவியமும் நினையாத வண்ணம் வந்து சேருமானால் அவர்கள் தங்களுடைய மாறின நிலைமையை யுடனே யறிந்து அதன்படி யொழுகுவது முடியாது. ஆதலின் ராதா இன்னுஞ் சிந்தனையிலேயே யிருந்தாள். ஆனால் கொஞ்ச நேரத்திற் கெல்லாம் அவளுடைய தாய் தந்தையர் வெளியே வந்தார்கள். மூவருமொன்றாய்த் தாங்கள் வெகு காலமாய் வசித்து வந்த மனையை விட்டுக் கடற்கரையை நோக்கிப் போனார்கள். அவர்களைக் கண்ட ஜனங்கள் கைதட்டிச் சத்தமிட்டார்கள். வயது சென்ற அன்னையும் பிதாவும் பலரால் பார்வையிடப்பட்டு, ஜனங்கள் வாழ்த்துவதைக் கேட்டறியாதவர்களாதலால், இப்புதிய ஸ்தானத்தில் நாணி வெட்கினார்கள். அவர்களை வரவேற்கக் கூடியிருந்த அந்நிய நாட்டாரை நோக்கி "பிரபுக்களே, நான் உடனே புறப்பட விரும்புகிறேன்'' என்றாள் ராதா.

"பிரயாணத்திற்கு வேண்டியவை யாவும் ஆயத்தமாயிற்று. பிரார்த்தனைகள் பண்ணி முடிந்தது. ஊர்ஜனங்களுக்கு வெகுமதிகள் கொடுத்தாயிற்று. ஆனால் தாங்கள், பொன்னுடையணிந்து, கிரீடந் தரித்துக்கொள்ளக் காத்திருக்கிறோம்'' என்று பிரதியுத்தர மளித்தார்கள்.

"இல்லை, இல்லை, நானிப்பொழுது இருக்கிறது போலவே, அரசன் என்னைப் பார்க்கவேண்டும். இனித் தாமதஞ் செய்யாதீர்'' என்றாள் ராதா.

இதன்பின் எல்லோரும் துறைமுகத்திற்குப் போனார்கள். தன் தகப்பனுடைய கையை இறுகப் பிடித்திருந்த ராதா நடுங்கினாள். அவளுடைய பவளம்போற் சிவந்த உதடுகள் துடித்தன; கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகிற்று. என்றாலும் முன் நடந்து போய்க் கப்பலிலேறி அங்கிருந்து அலைகள் புரளுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய நினைவுகள் கடல்களுக்கப்பாற் சென்றன; இனி வரப்போகிறவற்றைக் குறித்து நினைத்தாள். எதிர்காலத்தில் நிகழ்காலத்தை மறந்தாள். மரக்கலம் புறப்பட்டுக் கடலை உழுது கொண்டு சென்றது. ராதாவிற்கு நடந்ததொன்றுந் தெரியாது. கடைசியில் கண்களை யுயர்த்திப்பார்க்க, தன்னைச்சுற்றி அநேகர் தானிட்டதைச் செய்யக் காத்துக்கொண்டிருப்பதை யறிந்

நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை தலைமக்க ளில்வழி யில்.

தாள். உடனே அவளுக்கொரு பயம் பிடித்தது. அவிழ்ந்து தொங்கிய அவளுடைய கூந்தல் காற்றிற் பறந்தது. தனக்குத் தானே ஏதோ பேசிக் கொண்டாள். அன்று நடந்தவை யெல்லாம் அவளுக்கொரு சொப்பனமாய்த் தோன்றினது. புதிதாய்க் கிடைத்த இவ்வாழ்க்கையில் தனக்கு என்னென்ன நேரப்போகிறதோ வென்ற கிலேச மடைந்தவளாகித் தன் தாய் தந்தையர் அருகிலில்லாததை யுணர்ந்தாள்.

இதுவரையிலும் நின்றிருந்த விடத்தை விட்டுப் பெயர்ந்து தன்னிடம் முதலிற்பேசிய நரைத்த தாடியையுடைய மனிதனைப் பார்த்து "என் தகப்பனார் எங்கே யிருக்கிறார்?" என்று கேட்டாள் ராதா.

"அரசியே, தங்களுடைய வயது முதிர்ந்த தந்தை, தான் வசித்துவந்த ஜனங்களின் மத்தியிலேயே இன்னும் தன் காலத்தைக் கழிக்கவேண்டுமென்று நின்று விட்டார். தானறியாதவர்கள் தன்னை யுற்று நோக்குவதைச் சகிக்க முடியாதென்றவர் சொன்னார். அவர் கப்பலிலேறாதது தங்களுக்குத்தெரியுமென்று நினைத்தேன். திரும்பவும் துறைமுகத்துக்குப் போகவேண்டுமென்று தாங்கள் ஆக்ஞாபித்தால் அதன்படியே செய்யக் காத்திருக்கிறோம்" என்றான் அரசனுடைய பிரதிநிதி. ராதாவிற்கு இதை யறிந்தவுடன் நடுக்கம் பிடித்தது. "துறைமுகத்திற்குத் திரும்புவோம்" என்று சொல்ல முயன்றாள். ஆனால் அவளுடைய வாயினின்றும் ஒரு வார்த்தையும் பிறக்கவில்லை. தனதிஷ்டம் நிறைவேறாது ஊழ்வினை தடுப்பதை யறிந்து, தன்னாலாவ தொன்றில்லையெனத் தெளிந்து "விதியைவெல்ல என்னால் இயலாது; கப்பல் விரைந்து செல்லட்டும்" என்றாள். அங்ஙனமே யளவற்ற பெருங்கடலின் மேற் கப்பல் விரைந்து சென்றது. இதற்குமேல் ராதாவின் கதை நமக்குத் தெரியாது. ஒருவேளை படிக்கிறவர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந்தான் முந் துறும்"

துளஜாஜி மகாராஜா:—ஸங்கீத ஸாரா மிருதம் என்ற நூலைச் செய்தவர். ஸங்கீத சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் நிபுணர். (1763-1787) ஸங்கீத வித்வான்களைப் பல விடங்களிலிருந்து தருவித்து விசேஷமாக அபிமானித்தவர்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

2. கூர்மாவதாரம்

ஸ்ரீமந் நாராயணனது அவதார ரகசியங்களையும், லோக ரக்ஷணத்தின்பொருட்டு அவர் செய்துள்ள அற்புத செயல்களையும் கேட்டுக் களிப்பதில் மிக்க அவாக்கொண்டுள்ள பரீக்ஷித்து மஹாராஜன் ஸ்ரீ சுகப்பிரம்ம ரிஷியை நோக்கி, "பிரம்மநிஷ்டரே, கருணாநிதியான பகவானுடைய மத்ஸ்யாவதார மகிமையையும், கஜேந்திரமோக்ஷம் என்னும் புண்ணிய கதையையும் கேட்டுக் களித்தேன். க்ஷீர ஸமுத்திரம் கடையப்பட்ட காரணத்தையும், பகவான் கூர்மாவதாரம் எடுத்த வரலாற்றையும் கேட்டு ஆனந்திக்க விரும்புகிறேன். தாங்கள் அவற்றை எடுத்துரைத்து என்னைக் கிருதார்த்தனாக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். இவ்வேண்டுகோளுக் கிணங்க, சுகப்பிரம்ம ரிஷியும் பின்வருமாறு அதைக் கூறலானார்:—

"தேவர்கள் நற்குணங்கள் பொருந்தியவர்கள், அஸுரர்கள் தீய ஒழுக்கங்கள் நிறைந்தவர்கள் என்று பொதுவாய்ச் சொல்வது வழக்கம். ஆனால், தேவர்கள் சில சமயம் துர்க்குணம் கைப்பற்றி நடப்பதும், அஸுரர்கள் சன்மார்க்கத்தைத் தழுவி ஒழுகுவதும் உண்டு. இவ்வாறு ஒரு சமயம், தேவேந்திரனும் அகங்கொண்டு, பிரமதேஜஸ் நிரம்பிய துர்வாஸ மஹாரிஷியை அவமதித்து, இந்திரலோக ஐசுவரியமிழந்து, அவனும் மற்றைய தேவர்களும பலங்குன்றித் தவிக்கலானார்கள். இதன் காரணம் யாதெனில்:—

ஒருசமயம் துர்வாஸமஹாரிஷி ஸ்ரீவைகுண்டம் சென்று ஸ்ரீ லக்ஷ்மிதேவியைச் சேவிக்கக் கருதினார். அப்போது அவர் எதிரில் வந்த ஒரு கந்தர்வ ஸ்திரீ அவரை வணங்கி, 'தவப்பெரியோரே, நான் வைகுண்டம் போய்த் திரும்பி வருகிறேன். ஸ்ரீ மகா லக்ஷ்மி கிருபையால் எனக்கு அளித்த இந்தப் புஷ்பமாலையைத் தரித்துக்கொள்வதற்குத் தாங்களே தகுதியுள்ளவர். ஆகையால் இதைப் பெற்றுக் கொள்ளவேண்டும்' எனப் பிரார்த்தித்தனள். இதுகேட்ட துர்வாஸர், தாம் தேடிப்போன மஹாலக்ஷ்மியின் கிருபையானது வழியிலேயே கிடைத்தது கண்டு மனமகிழ்ந்தார்.

ஆகையால் அவர் அந்த மாலையை ஆதரவுடன் பெற்றுக்கொண்டு, தேவலோகஞ் சென்றார். அச்சமயம் தேவேந்திரன், பட்டத்து யானையின் மீதேறி, தேவர்களால் சூழப்பட்டு வெகு ஆடம் பரத்துடன் ஊர்வலம் வந்துகொண்டிருந்தான். துர்வாஸர், அவ்வித ஐசுவரியம் பெற்று உந்நத பதவியிலிருக்கும் அமரேசனே லக்ஷ்மியின் அவ் வித பிரசாதத்துக் குரியவன் என்று நினைத்து, அதை அவனுக்குக் கொடுத்து அநுக்கிரகிக்கக் கருதினார். ஐசுவரிய மதம் யாரை விடுகிறது! தபோதனரான அம்மகான் அளித்த வெகு மகிமை யுள்ள அம் மாலையைத் தேவந்திரன் தன் கையி லுள்ள ஒரு கோலினால் அலட்சியமாய் வாங்கி, அதை ஐராவதத்தின் கழுத்திலிட்டான். இது கண்ட துர்வாஸர் பெருஞ் சினங்கொண்டு, "வீண கங்கொண்ட துஷ்டனே! எத்தேவியின் கடாக்ஷ லேசத்தால் உனக்கு இவ்வித பதவி கிடைத்து ளதோ, அவளது சிறந்த பிரசாதமாகிய இம் மாலையை நீ இவ்வாறு அலட்சியம் செய்வது தகாது. இனி உன் செல்வமழிந்து, நீயும் உன் னைச் சார்ந்தவர்களும் பெருந் துக்கத்தி லாழ்ந்து தவிப்பீர்கள்" என்று சபித்துச் சென்றார். முனி வர் வாக்குப் பொய்க்குமா? உடனே தேவர்க ளின் ஐசுவரியங்கள் அவர்களை விட்டு விலகி, க்ஷீர சமுத்திரத்தில் மறைந்து கொண்டன. அவர்களது பலம் குன்றியது. அஸுரர்களால் அவர்கள் தாக்கப்பட்டுத் தத்தளித்தனர். அநேகர் அடிபட்டு விழுந்து எழுந்திருக்க முடியாமல் வருந்தினர். யாகாதி கிரியைகள் எல்லாம் நசிக்க லாயின.

இதுகண்ட மகேந்திரன், வருணன் முதலான தேவர்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்தனர். யாது செய்வது என்று நிச்சயமறியாமல் தவித்த னர்; பின்னர், மேருவின் உச்சியிலுள்ள பிரம்ம சபையை அடைந்து, பிரம்ம தேவரை நமஸ்க ரித்து, தங்களுக்கு வந்துள்ள ஆபத்தை எடுத்துக் கூறினர். அதற்குப் பரிகாரம் தேடித் தங்களை அநுக்கிரகிக்க வேண்டுமென்று அவரைப் பிரார்த் தித்தனர்.

இதுகேட்ட பிரம்மதேவரும், ஸுரர்களின் தீன நிலைமையையும், அஸுரர்களின் வீரியம், மேன் மை முதலியவற்றையும் நன்கறிந்து சொல்லலுற் றார்:— "தேவர்காள்! உங்களுக்கு நேர்ந்துள்ள ஆபத்தைத் தீர்த்து ரக்ஷிக்க வல்லவன் சாக்ஷாத் நாராயணனே! நான், ருத்திரன், நீங்கள், அசுரர் கள், மனிதர்கள், பசு, பக்ஷி, மிருகங்கள் முதலிய எல்லாச் சராசர பிரபஞ்சமனைத்தும் எந்த விராட் புருஷனான பரமாத்மாவின் அம்சமோ, அவர் தான் இச்சமயத்தில் உங்களைக் காத்தருளக்கூடும். அவரைச் சரணமடைவோம், வாருங்கள்" என்று கூறினார். அவர் தேவகணங்களுடன் புறப்பட்டு, இருள் மயமான பிரகிருதி மண்டலத்துக்கப்பால், திவ்வியமான ஸ்தானத்தை யடைந்து, வேத வேதாந்தங்களில் வர்ணிக்கப்பட்டுள்ள ஸ்வரூபத் தையுடைய பரமபுருஷனைப் பலவாறு துதிக்கத் தொடங்கினார். "ஆதியந்தமற்றவராயும், சர்வாந் தர்யாமியாயும், வர்ணிக்கவொண்ணா மகிமை நிறைந்தவரும், தேவதேவனாகவு மிருக்கும் பரம் பொருளே! ஷட்குண பூர்ணனே! உமக்கு நமஸ்காரம். உமது தரிசனமளித்து எங்களைப் பரிசுத்தமாக்கிக் காத்தருளவேண்டும்!"

இவ்வாறு துதிக்கப்பெற்ற ஹரியானவர், அநேககோடி சூரியர்கள் உதித்தாற்போல் அங்கு ஆவிர்ப்பவித்தார். அவரது ஜாஜ்வல்யமான

கான முயலெய்த வம்பினில் யானை பிழைத்தவே லேந்த லினிது.

தேஜஸை அவர்களால் கண்ணெடுத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அப்போது பிரம்மதேவரும், ருத்திர பகவானும், தேவகணங்களும், திவ்விய பீதாம்பரம் தரித்து, சங்கம், சக்கரம், கௌஸ்துபமணி, மகரகுண்டலங்கள், பஞ்சாயுதங்கள் முதலியன அணிந்து, ஒப்பில்லா சௌந்தர்யாதிசய ரூபத்துடன் விளங்கி நிற்கும் திருமாலை வணங்கி, வெகுவாறு துதித்தனர்; ஸுரர்களுக்கு நேரிட்டுள்ள ஆபத்தைத் தீர்த்து வைக்கும்படி வேண்டினர். இதைச் செவியுற்ற பெருமான், தாம் அவர்களது கஷ்டத்தை உடனே நீக்கி வைக்க வல்லவராயினும், சமுத்திரம் கடைதல் முதலான காரியங்களால் தாம் லீலை செய்யவேண்டுமென்று கருதினவராய், பிரம்மாதிகளை நோக்கிச் சொல்லலுற்றார் :—“இப்போது அசுரர்கள் மேன்மையான பதவியிலிருக்கிறார்கள். தேவர்களுக்குக் காலபலம் சரியாக இல்லை. அவர்களுக்கு நற்காலம் வரும் வரையில், அவர்கள் அஸுரர்களுடன் ஸந்தி பண்ணிக்கொண்டிருக்கட்டும். காலத்தை அனுசரித்துச் சத்துருவோடும் இணங்கியிருந்து காரியசித்தி பெறுவதே உலக தந்திரம். இருதிறத்தாரும் ஒன்று சேர்ந்து க்ஷீர ஸாகரத்தைக் கடைந்து அமிர்தம் பெற வழிதேட வேணும். ஸுரர்களே! பிறகு நீங்கள் அமிர்தபானம் பண்ணி, சுகமாய் நீடூழி வாழலாம். திருப்பாற் கடலில் எல்லா ஔஷதி வர்க்கங்களைப் போட்டு, மந்தரபர்வதத்தை மத்தாகவும், ஸர்ப்பராஜனான வாஸுகியை மத்துக் கயிறாகவும் கொண்டு, எனது சகாயத்தால் அக் கடலைக் கடையவேண்டும். அதனால் தைத்தியர்கள் பலக் குறைவடைவார்கள். நீங்கள் பலம் பெற்று, மீண்டும் உங்களது ஐசுவரியாதிகளை யடைவீர்கள். அதிலிருந்து உண்டாகும் காலகூட விஷத்துக்கு அஞ்சாதீர்கள். மற்றைய வஸ்துக்கள் விஷயத்திலும், நீங்கள் காமம், குரோதம், ரோஷம் முதலியன பாராட்டாமல், அமிர்தத்தை யடைவதிலேயே பெரும் நோக்குள்ளவர்களாயிருக்கவேண்டும். நய வார்த்தையாலும், சமாதானத்தாலும் காரியம் கைகூடுவதுபோல், துவேஷத்தால் கூடிவராது. ஆகையால் நீங்கள், அஸுரர்களோடு கொஞ்சகாலம் இணங்கியிருந்து வாருங்கள்” என்று ஆஞ்ஞாபித்தார் ; உடனே அந்தர்த்தானமானார். பிரமனும், ஈசுவரனும் தத்தமிருப்பிடம் சென்றனர்.

அப்பால், தேவேந்திரன் திருமாலின் வார்த்தைக்கு ஏற்ப, பலிசக்கரவர்த்தியிடம் சென்று, நய வார்த்தைகளால் சமாதானஞ் செய்துகொண்டான் ; அமிர்தம் கடைந்தெடுத்து எல்லோரும் சுகம் பெறலாமென்று சொன்னான். இதைப் பலியும், அவனைச சார்ந்த சம்பரன், அரிஷ்டநேமி முதலான பலிஷ்டர்களும், காலகேயாதிகளும் அங்கீகரித்தனர். உடனே அஸுரர், ஸுரர் இவர்களுள் வெகு பலம் பெற்றுள்ளோர் ஒன்று சேர்ந்து மந்தரகிரியை மிகப் பிரயாசைப்பட்டுப் பிடுங்கி எடுத்துக்கொண்டு, திருப்பாற் கடலை நோக்கிச் சென்றனர். வழியில் களைப்படைந்து, பலி, இந்திரன் முதலானோர் அப் பர்வதத்தைத் தாங்கமாட்டாமல், அதைக் கீழே விட்டுவிட்டார்கள். அவ்வாறு விழும் மலையின் பளுவால், அநேக அமரர், தானவர் சூர்ணமாக்கப்பட்டனர். அப்போது தேவாதிகள் மனங் கலங்கித் தவித்தனர். அக்கணமே கருடத்வஜனான பகவான் அங்கே பிரசன்னராகி, தமது கிருபா கடாக்ஷத்தால் அவர்களை விரணமற்றவர்களாயும், மரணம் நீங்கினவர்களாயும் செய்தருளினார்; பிறகு தமது ஒரு கையால், மந்தர பர்வதத்தை விளையாட்டாகக் கருடன்மீது ஏற்றிவைத்து, தாமும் அதன்மீது ஏறிக்கொண்டு, தேவாதிகளால் சூழப்பட்டவராய் க்ஷீர சமுத்திரம் வந்து சேர்ந்தார். அங்கே பர்வதத்தைக் கீழே இறக்கி, ஜலமத்தியில் தள்ளினார்.

உடனே சமுத்திரத்தைக் கடைய ஏற்பாடாயிற்று. அமிர்தத்தில் அவனுக்கும் பங்கு உண்டு என்று சொல்ல, வாஸுகி மத்துக் கயிறாக இருக்கச் சம்மதித்தான். அவன் உடலைப் பர்வதத்தில் சுற்றி, தலைப்பக்கத்தை ஹரியானவர் பிடித்துக் கொண்டார். தேவர்களும் அவ்வாறே செய்யத் தொடங்கினார். தைத்தியர்கள் இதற்கு ஆக்ஷேபித்து, நற்குலம், வேத சாஸ்திர ஞானம், உத்தம கர்மங்கள் முதலியவற்றால் சிறந்துள்ள தாங்கள் அதன் வாலைப் பிடித்துக்கொள்வது கௌரவக் குறைவென்று கூறினர். உடனே பகவான் அவர்களை அதன் தலைப்பக்கத்தை பிடித்துக் கொள்ளும்படி செய்து, தாமும், தேவர்களும் வாலைப் பிடித்துக்கொண்டனர். சமுத்திரத்தைக் கடையும்போது, மிகப்பளுவான மந்தர பர்வதமானது, ஆதாரமில்லாததால் ஜலத்தில் மூழ்கி விட்டது. அஸுராதிகள் பலிஷ்டராயினும், அதைத் தாங்கி மேலே நிற்கும்படி செய்ய முடியவில்லை. இவ்வளவு பாடுபட்டும், காரியம் கைகூடமாற் போகும்

போலிருந்தது. இதுகண்ட ஸுரர் முதலானோர் மனம் வருந்தி வாடலானார். அபார சக்தியுடைய வரும், கிருபா நிதியும், ஸத்ய ஸங்கல்பனுமான பகவான் ஓர் அதியற்புதமான கூர்ம ரூபத்தைத் தரித்து, ஜலத்திற்குள் பிரவேசித்து, பத்து லட்சம் யோஜனை விஸ்தாரமுடைய தமது முதுகின்மீது மந்தர பர்வதத்தைத் தாங்கி நின்றார். தேவாதிகளால் வெகு பலத்துடன் கடையப்பட்டு வரும் இம் மலையை இவ்வாறு தாங்கி வருவது அபார சக்தியுடைய பெருமானுக்கு ஒரு சிரமமாகத் தோன்றவில்லை; ஏதோ, சற்றுத் தெனவு எடுத்த மாதிரி இருந்தது. அவர் அசுரர்கள், தேவர் முதலானோரை அவரவர் ரூபமாக அனுப்பிரவேசித்து, நன்கு கடையும் பொருட்டு அவர்களது பலத்தை விருத்தி பண்ணினார். எனினும், அமிர்தம் வெளி வரவில்லை. வாஸுகியின் விஷக்காற்றால் எரிக்கப்பட்டு, பலி, பௌலோமகன் முதலானோர் வீரியமிழந்து தவித்தார்கள். பகவானுடைய விசேஷ கடாக்ஷம் பெற்றுள்ள ஸுரர்கள் பல விருத்தி யடைந்தனர். அவர்கள் எவ்வாறு கடைந்தும் அமிர்தம் கிளம்பாததால், பகவான் தாமரைப் புஷ்பம்போன்ற தமது கைகளால் வாஸுகியைப் பிடித்து இழுத்துக் கடைந்தார். முதன் முதலில் காளகூட விஷம் கிளம்பிற்று. எல்லோரும் அதன் வேகம் தாங்கமுடியாமல், பயந்து நாலாபக்கமும் ஓடத் தலைப்பட்டனர். இந்திராதிகள் கைலாயத்திலுள்ள சதாசிவ பெருமானை யடைந்து, பலவாறு துதித்து, அவ்விஷத்தைப் புஜித்துத் தங்களை ரக்ஷிக்கும்படி வேண்டினர். அவரும் பார்வதீ சமேதராய் அங்கு எழுந்தருளி, அவ்விஷத்தைப் பானஞ் செய்து அவர்களைக் காத்தருளினார்.

பின்னரும் சமுத்திரம் கடையப்பட்டது. அதிலிருந்து முறையே காமதேனு, உச்சைச்ரவஸ் என்னும் உத்தம அசுவம், ஐராவதமென்னும் யானை சிரேஷ்டம், பாரிஜாத விருட்சம் இவை உண்டாயின. பின்பு, அப்ஸர ஸ்திரீகள் உதித்தனர். ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஆவிர்ப்பவித்து, எல்லோராலும் அபிஷேகம் செய்யப்பட்டவளாய், கையில் நெய்தல் மாலைகொண்டு, திருமாலை வரித்தாள். பிறகு சுராதேவி (கள்ளு) உண்டானாள். இவளை அஸுரர்கள் கிரகித்தனர். இறுதியில், விஷ்ணுவின் அம்சமான தன்வந்தரி பகவான் திவ்வியாலங்காரங்கள் அணிந்து, அமிர்தகலசத்தைக் கையிலேந்தி வெளிக்கிளம்பினார். இந்தக் கலசத்தை முதலில் அஸுரர்கள் அபகரித்துக் கொண்டனர். இதுகண்டு, தேவர்கள் மனம் வாடித் தவித்தனர். உடனே பகவான், உத்தம ஸௌந்தரியமுள்ள ஒரு மோகினி ரூபமெடுத்து, அசுரர்களை அவ்வுருவில் மயங்கச்செய்து, அமிர்தத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதாய்ச் சொன்னார். அவர்களும் மதிமயங்கி, அமிர்த கலசத்தை அவரிடம் கொடுத்தனர். அவர் அசுரர்களையும், தேவர்களையும் இரு வரிசைகளில் உட்காரவைத்து, முதலில் தேவர்களுக்கே அதைக் கொடுத்து, அவர்கள் பல பராக்கிரமம்பெற்று மீண்டும் தங்கள் மேன்மையுடன் ஓங்கி விளங்கும்படி செய்தார். துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனம், தர்மத்தை நிலைநிறுத்தல் ஆகிய இக்கருமங்களை விரதமாகக் கொண்டுள்ள பகவான், தேவர்களுக்கு அமிர்தம் அளித்து, அவர்களை நிஜமாகவே அமரர்களாகச் செய்வதற்கும், அஸுராதி துஷ்டர்களின் பலத்தைக் குறைப்பதற்காகவும் கூர்மாவதாரம் செய்தருளினார் என்று காண்க.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்ரதிஞ்ஞா யௌகந்தராயணம்

(வாஸவதத்தா பரிணயம்)

அப்போது, விஜயா என்பவள் திரும்பிவந்து, "பிரபுவே, இதோ கடிதம் கொண்டு வந்திருக்கிறேன். ஸம்பிரதாய முறைப்படி அரண்மனையிலுள்ள ஸ்திரீ ஜனங்கள் மங்கள ஸூத்திரத்தை ஒவ்வொருத்தராய்த் தொட்டுக்கொடுத்து வருகிறார்கள். அது முடிந்ததும் அனுப்பி

வைப்பதாய்ப் பெரிய ராணி (அரசனது தாயார்) சொல்லச் சொன்னாள்' என்று விஞ்ஞாபித்தாள். இது கேட்ட யௌகந்தராயணன் அதை, எதாவதொருவர் தொட்டுக்கொடுத்தால் போதுமென்றும், உடனே அனுப்பும்படிக்கு பெரிய ராணியிடம் தெரிவிக்கும்படி விஜயாவைக் கட்டளையிட்டு அனுப்பினான்.

உடனே ஒருவன் ஓடிவந்து, அரசனது அந்தரங்க சேவகனான ஹம்ஸகன், வத்ஸ ராஜனிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறான் என்று தெரிவித்தான். யௌகந்த ராயணன், அவனைத் தாமதமின்றித் தன்னிட மனுப்பும்படி கட்டளை யிட்டுவிட்டு, அவன் அவ்வாறு அரசனை விட்டுத் தனிமையாய் வந்தது எவ்வித அநர்த்தத்துக்கு அடையாளமோ என்று தர்க்கித்து மனமேங்கினான்; அரசனுக்கு யாது கேடு விளைந்துளதோ என்று வருந்தினான். இதற்குள் ஹம்ஸகனும் வந்து யௌகந்தராயணனை வணங்கினான். அரசன் 'இன்னும் யானை வனம் போகவில்லையே!' என்று பரபரப்புடன் அவனை வினவ, முதல் நாளே அவர் அங்குப் புறப்பட்டுப் போனதாக அவன் தெரிவித்தான்.

இதைச் செவியுற்ற மந்திரியும், "ஆ! கஷ்டம் என்னே! அரசனுக்கு இனிச் செய்தி சொல்லியனுப்புவது வீண்தான். ஆ! ஆ! ப்ரத்யோதன் எவ்வாறு நம்மை ஏமாற்றி விட்டான்! இருக்கட்டும். இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய இடமுண்டா! அல்லது, நாம் பிராணனை விடவேண்டுவதுதானா?" என்று பரிதபித்துக் கூறலானான். இதுகேட்ட ஹம்ஸகன், அரசன் இன்னும் உயிருடனிருப்பதாய்த் தெரிவித்தான். இதனால் உதயனன் பிடிபட்டிருக்க வேண்டுமென்று யௌகந்தராயணன் ஊகிக்க, ஹம்ஸகன் அதை ஸ்திரப்படுத்தினான். மந்திரிவர்யனும், "காலகதி என்னே! பிரத்யோதன், விசேஷ பாக்கியவசத்தாலல்லவோ இப்பெருங் காரியத்தைச் சாதித்துள்ளான். இன்றுமுதல் வத்ஸராஜ மந்திரிகளின் மூடத்தன்மையும், அபகீர்த்தியும் நன்கு ஸ்தாபிக்கப்பட்டவைகளாயின. இது இருக்கட்டும். 'அரசன் எவ்வாறு பிடிபட்டார்? அச்சமயம் மந்திரி ருமண்வான் எங்குச் சென்றான்? ஆபத்து காலத்தில் தக்க பரிகாரம் தேடிக் காக்க முடியாதவன் என்ன மந்திரி? அரசன் பாதுகாப்புக் கேற்பட்டுள்ள குதிரைச் சைனியமும் எங்கே போயிற்று? நற்குலத்திலுதித்து, வீரியம், ராஜபக்தி மற்றைய நற்குணங்கள் இவையெல்லாம் பொருந்திய யோதர்கள்நிரம்பிய குதிரைப்படைஇருந்தும், இவ்வித விபத்து நேர்ந்தது எங்ஙனம்? சத்துருவினிடம் தனம்பெற்று, அரசனைக் கைவிட்டார்களா? அல்லது, அடர்ந்த காடுகளில் போகமுடியாமல் தவித்துப் பின் தங்கினார்களா? அல்லது, பலமான சத்துருக்களால் தாக்கப்பட்டு, முன்நிற்க முடியாமல் அடிபட்டு மாண்டனரா?" என்று பலவாறு விதர்க்கஞ்செய்து கேட்கலானான்.

அதற்கு ஹம்ஸகன், அரசனது சைனிகர்களும் இதர பரிவாரங்களும் அவன்கூட இருந்திருந்தால், இவ்வித கஷ்டம் நேர்ந்தே இராது என்று தெரிவிக்க, யௌகந்தராயணன், ஏதோ விசேஷ தகவலிருக்கிறதென்று நினைத்து, பிரயாணசிரமத்தால் வெகு களைப்புற்றுள்ள ஹம்ஸகனை உட்காரும்படி சொல்லி, செய்தியை விஸ்தாரமாய் எடுத்துரைக்கும்படி கேட்கலானான்.

ஹம்ஸகனும், வத்ஸராஜன் சிறைபிடிக்கப்பட்ட வரலாற்றைக் கூறலுற்றான்:—"மந்திரி சிரேஷ்டனே! அர்சன் வேணுவனத்தை விட்டுப் புறப்படுவதாக ஏற்கெனவே ஏற்பாடாயிருந்த தினத்திற்கு முதல் நாளே, அவர் அதிகாலையில் எழுந்திருந்து புறப்பட்டு, நர்மதா நதியைக் கடந்து, குடை தவிர வேறு சாதனங்களில்லாமல், யானை வேட்டைக்கு வேண்டிய பரிவாரத்தோடு மாத்திரம், நாகவனம் நோக்கிச் சென்றார். சில யோஜனை தூரம் சென்றதும், மதகந்தீர பர்வதத்திற்கு இப்புறமே, ஒரு யானைக்கூட்டம் காணப்பட்டது. அவ்யானைகள் தடாகச் சேற்றால் பூசப்பட்டு, பார்க்கப் பயங்கரமா யிருந்தன. சேனையிலுள்ளோர் இவற்றை உற்றுப்பார்க்க, இவை பயந்து ஒன்றுகூடி நின்றன. இதற்குள் ஒரு காலாள் அரசனிடம் வந்தான். இவ்வளவு அநர்த்தத்துக்கும் காரணம் அவன்தான். அவன்...." என்று மேலே சொல்வதற்குள், யௌகந்தராயணன் அவன் பேசுவதைத் தடுத்து, "வேந்தே, சற்று தூரத்திற்கப்பால் மல்லிகைச் செடிகள், ஸாலவிருக்ஷம் இவற்றால் மூடப்பட்ட சரீரத்தோடு கூடியதும், நகங்கள், தந்தங்கள் தவிர மற்ற அவயங்களில் பெருங்கறுப்பு நிறமுள்ள ஒரு யானை யிருக்கக்கண்டேன் என்று அந்தக் காலாள் சொன்னானல்லவா?" என்று வினவினான்.

இதுகேட்ட ஹம்ஸகன் ஆச்சரியமுற்று, இதை மந்திரி முன்னரே அறிந்துள்ள சாமர்த்தியத்தை, மெச்சினான்; இவ்விதம், முன் ஜாக்கிரதையுடனி

ருந்தும், அரசனுக்குக் கேடு விளைந்ததுபற்றி துக்கித்தான். யௌகந்தராயணன், விதி பலத்தால் மனிதரின் எவ்வித சாமர்த்தியமும் பயனற்றதாகும் என்று கூறினன். அதன்மேல் ஹம்ஸகன், "அரசன், அச்செய்தி சொன்ன அயோக்கியனை காலாளுக்கு நூறு தங்க நாணயங்கள் வெகுமதி அளித்து அனுப்பினர். பின்னர் சேனை பரிவாரங்களை நோக்கி, 'இவ்வித யானை சிரேஷ்டம் கஜசாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. நான் இதுவரையில் கண்டதில்லை. இதோ நான் தனிமையாய் என் உத்தம வீணையை எடுத்துக்கொண்டுபோய் அவ்யானையை வசீகரணம் செய்து பிடித்து வருகிறேன். நீங்கள் இங்கிருந்து, வெகு ஜாக்கிரதையுடன் இந்த யானைக் கூட்டத்தைக் கவனித்து வாருங்கள்" என்று சொன்னர். இது கேட்ட ருமண்வான் என்னும் மந்திரி, 'அரசே! அவ்வாறு தாங்கள் தனித்துப் போவது சரியல்ல. திக்கஜங்களையும் ஜயிக்கத்தக்க வல்லமை தங்களுக்குண்டு. சாதாரண யானை விஷயத்தில் கேட்பானேன்? என்றாலும், நமது காவற்குள்படாதவும், துஷ்டஜனங்கள் நிறைந்துமுள்ள பிரதேசங்களில் செல்வதில் பல அநர்த்தங்கள் நேரிடும். ஆகையால், தாங்கள் மாத்திரம் ஒண்டியாகச் செல்வது யுக்தமல்ல. இந்த யானைக் கூட்டத்தைக் கவனிப்பதற்கு வேண்டிய சில காலாட்களை மட்டில் இங்கு நிறுத்திவிட்டு, மற்றைய ஸைநிகர்களும் பரிவாரங்களும் கூட வருகிறோம். தயவுசெய்து உத்தரவளிக்க வேண்டும்' என்று மன்றாடிக் கேட்டான். இது கேட்டும், அரசன் ஒரே பிடிவாதமாய்த் தன்னுயிர்மேல் ஆணையிட்டு, மந்திரி சொல்வதைத் தடுத்துக் கூறிவிட்டு, சுந்தரபாடலம் என்னும் தமது அசுவத்தின் மீதேறி, இருபது காலாட்களின் சகாயத்துடன் புறப்பட்டுச் சென்றார். அப்போது சூரியனுதித்து சுமார் ஒரு யாமமிருக்கும். பிறகு அவர் அதிவேகமாய் வெகு தூரம் வழி கடந்து, மேற்கூறிய யானையிருக்குமிட மணுகினர். அதன் வர்ணம் ஸால விருக்ஷத்தின் நிறத்தை மிகவும் ஒத்திருந்ததால், நன்கு பிரித்தறியக்கூடாததா யிருந்தது. இதனால், சரீரமில்லாமலே அங்கு வைக்கப்பட்டிருக்கின்றனவோ என்று ஊகிக்கத்தக்கவாறிருந்த நான்கு தந்தங்கள் கூடிய ஒரு திவ்விய கஜத்தின் சாயல் தென்பட்டது.

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

கவர்ன்மெண்ட் ரயில்வேக்களின் வருமானம்:—1925-ம் ஹு எப்ரல்மீ 1உ முதல் 1926-ம் ஹு ஜனவரிமீ 23உ வரையில் கவர்ன்மெண்டுக்குட்பட்ட எல்லா ரயில்ப் பாதைகளிலுமாக மொத்தம் 78·72 கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது; இவ்வரும்படி முன்னைய வருஷத்தைக் காட்டிலும் 67 லக்ஷம் ரூபாய் குறைவு.

• • •

டேனியல் ஜோன்ஸ் என்பவரின் கருவிகள்:—சீமையில் யூனிவர்ஸிடி காலேஜ் புரொபஸர் டேனியல் ஜோன்ஸ், ஒவ்வொரு பாஷையிலும் சுதேசிகள் பேசுவதிலும் அந்நிய நாட்டார் பேசுவதிலுமுள்ள வித்தியாசங்களை நெடுநாளாய் நன்கு ஆராய்ந்து, சில விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார் இவர் 'கைமோகிராப்' என்றும், ஹியோரெட்கிராப்' என்றும், இரண்டு நூதனக் கருவிகளையும், இதைத் தவிர இன்னும் அநேக கருவிகளையும் கண்டுபிடித்திருக்கிறார். கைமோகிராப் எனும் கருவிக்குள் பேசினால் சப்த ஆலோலனத்தின் பரிமாணத்தை அது ஒரு கோணலான கோடாகப் பதிவு செய்துகொள்ளுகிறது. இதிலிருந்து சப்தத்தின் பரிமாணத்தையும், துவனி யிருப்பதையும் இல்லாததையும் இன்னும் சில விஷயங்களையும் அறியலாமாம். 'ஹியோரெட்கிராப்' முன்சொன்ன கருவியைக் காட்டிலும் மிகவும் சக்தி வாய்ந்தது. இது சப்த பரிமாணத்தை 400 மடங்கு அதிகப்படுத்திக்காண்பிக்கிறது. இதனால், அந்நியர்கள் ஒரு பாஷையை சரியான உச்சாரணத்துடன் பேசவேண்டுமானால் தங்களுடைய பேச்சு அவயவங்களை எவ்வெவ்விதமாக வைத்துக்கொள்ளவும், அடைக்கவும் வேண்டுமென்று சுலபமாய் அறிந்துகொள்ளலாம்.

• • •

கதர் உற்பத்தி:—திருப்பூர் நகரில், பத்தில் ஒரு பங்கு அதாவது ரூ. 80,000 பெறுமான கதர் கோயம்புத்தூர் ஜில்லாவிலேயே செலவாகிவிடுகிறதால், மீதியிருப்பது தமிழ்நாட்டிலுள்ள மற்ற ஜில்லாக்களிலும், பம்பாய், இலங்கை, மலாய்நாடு முதலிய தூரதேசங்களுக்கும் அனுப்பப்படுகிறது. திருப்பூரில், தற்போது 25,000 கதிர்கள் சுழன்று வருகின்றனவாம். இதற்கு முதல் வைத்திருப்பது $2\frac{1}{2}$ லக்ஷம் ரூபாயாகும்.

218373

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரூ *0—2—0* ; டஜன் ரூ. *1—4—0* ; *100* ரூ. *9—12—0.*

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ. **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதாஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இறுமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணா பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணா ஆறு.

தந்தசூரணம்.—பல் துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும, மாணக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார்:—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1 0 0	வி. பி. தபால் செலவு ரூ.	0 5 0 பிரத்தியேகம்
4—புட்டிகள் ,,	2 10 0	,, ,, ,,	0 14 0 ,,

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினால், அவர்கள் முயற்சிக்கு ஏமாறாமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள்:— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore, Madras.